தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 384

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பதினான்காவது தொகுப்பு

**(மருத்துவப் பகுதி)**

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

கி.பி. 1998]

விலை: ரூ. 70-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 384

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பதினான்காவது தொகுப்பு

**(மருத்துவப் பகுதி)**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:
புலவர் வீ. சொக்கலிங்கம்
தமிழாசிரியர் (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்

கி.பி. 1998

விலை: ரு. 70-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் |
| பதிப்பாசிரியர் | : | புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 384 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | மே 1998 |
| தாள் | : | 10.9 கி.கி. சேஷசாயி |
| நூல் அளவு | : | 34×48 செ. மீ. |
| பக்கங்கள் | : | 228 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | கஜேந்திரா அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | மருத்துவச் சுவடி விளக்க அட்டவணை |
| விலை | : | ரூ. 70-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளின் கருவூலமாகத் திகழும் பெருமை மிகு கலைக்கருவூலம் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளும், காகிதச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வரிய சுவடிகளுள் சிறந்தவற்றைத் தேர்வு செய்து அவைகளை நூல்களாகப் பதிப்பித்து வெளியிடப்பெறுவதோடு இச்சுவடிகளுக்கான விளக்க அட்டவணைத் தொகுதிகளும் உருவாக்கப் பெற்று வெளியிடப்பெற்று வருகின்றன.

இந்நூலகத்தில் அவ்வப்போது சுவடிகள் சேரச்சேர, அவற்றுக்கு விளக்க அட்டவணை உருவாக்கும் பணியும் தொடர்கின்றது.

இந்நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள ஓலைச் சுவடிகளுக்கு இதுகாறும் பதின்மூன்று விளக்க அட்டவணைகள் உருவாக்கி வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றுள் ஐந்து நூல் இலக்கியச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகளாகவும், எட்டு நூல் மருத்துவச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதி களாகவும் அமைந்துள்ளன.

தற்பொழுது தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள மருத்துவ ஓலைச் சுவடி களுக்கான விளக்க அட்டவணைத் தொகுதியாகத் ''தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் 14ஆம் தொகுதி'' எனும் இந்நூல் வெளிவருகின்றது.

இத்தொகுதியை அரிதின் முயன்று உருவாக்கித் தந்துள்ள இந்நூலக முன்னாள் தமிழ்ப்பண்டிதரும், நூலகச் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியருமான புலவர் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்களுக்கு என் நன்றி கலந்த பாராட்டுக்கள்.

இந்நூல் வெளியீட்டுக்கு வழக்கம் போல் நிதியுதவி நல்கியுள்ள மத்திய அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. எம். பஞ்சநதம் அவர்களுக்கும் நூலகர் மற்றும் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், தமிழ்ப்பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இத்தொகுதி, சுவடியியல் ஆய்வாளர்களுக்கு நன்கு பயன்படுமென நம்பு கின்றேன்.

தஞ்சாவூர்
24—5—98

**து. நா. இராமநாதன்** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# முன்னுரை

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்'' என்பார் முதற் பாவலர்.

ஒருவன் உண்ட உணவு செரித்த பிறகு உண்பானாயின் அவனுக்கு மருந்து வேண்டுவதில்லை. என்கின்றது குறள்.

பெறுதற்கரிய மானிடப் பிறவி எடுத்த ஒருவன், நோயின்றி வாழ்தலே பெருஞ் செல்வமாகும். அதனால்தான் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றனர் ஆன்றோர்.

முன் வினைப் பயனாலும், பெற்றோர் வழியாலும், தீயொழுக்கத்தாலும், உண்ணக் கூடாத பொருட்களை உண்பதாலும் நோய்கள் வரும். இவ்வாறான நோய்களை நீக்குதற்கு, நம் முன்னோர்கள் சான்றோர்கள், முனிவர்கள் அரும்பாடு பட்டு, தங்கள் அனுபவங்களின் மூலம், மூலிகை முதலானவைகளைக் கொண்டு நோய்நீக்கம் செய்ததோடு, அவற்றை ஏடுகளிலும் எழுதி நமக்கு அரும்பொருட் பண்டாரமாக அளித்துச்சென்றனர். உடன் பிறந்தே கொல்லும் நோய்களையும், பிற நோய்களையும், அவர்கள் காட்டிய வழி நின்று மருந்துண்டு போக்கி, நலம் பெறலாம்.

அப்படி எழுதிவைத்த மருத்துவங்கள் எண்ணிலடங்கா. ஏடுகளின் மூலம் நமக்குப் பயன்தருகின்றன. அவ்வாறு சித்தர்களும், மருத்துவர்களும் நமக்குத் தந்த சுவடிகளில் பல நம் சரசுவதி மகாலில் அரிய கருவூலங்களாகத் திகழ்கின்றன.

அவற்றுள் 3, 4, 5, 8, 9, 11, 12, 13 ஆகிய தொகுதிகளாக 751 சுவடிகள் வெளிவந்துள்ளன. தற்போது 752 முதல் 850 வரை உள்ள சுவடிகள் (D.1501—1780) விளக்கக் குறிப்புகளுடன் (14-வது தொகுதியாக) வெளிவருகின்றன.

சரசுவதி மகாலிலுள்ள தமிழ்ப் பகுதியில் மேலும் மேலும் இலக்கிய மருத்துவச் சுவடிகள் சேர்ந்து வருகின்றன. தம்மிடமுள்ள சுவடிகளைப் பெருந்தன்மையும் நற்சிந்தையும், பரோபகார மனமும் உடைய சான்றோர்கள் இம்மகாலில் சேர்த்துப் பலருக்கும் பயன்படச் செய்வதோடு மட்டுமின்றித் தங்கள் பெயரையும் இம்மகாலில் நிலைநாட்டுவார்கள் என நம்புகிறேன்.

இந்தப் பதினான்காவது தொகுதியினை வெளியிடப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த எமது மகால் இயக்குநரும் தஞ்சை மாவட்ட ஆட்சியருமான திருவாளர் து.நா. இராமநாதன் இ.ஆ.ப. அவர்கட்கும் இந் நூலக நிருவாக அதிகாரி பொறுப்பு திருவாளர் எம். பஞ்சநதம் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் எம்.ஏ.பி லிப்.சி. அவர்கட்கும் நன்முறையில் அச்சிட்டுத்தந்த சிதம்பரம் கஜேந்திரா அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிற்காணும் குற்றங்களைந்து குணம் பொருந்தி வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்

தஞ்சாவூர்
21—5—98

புலவர். **வீ. சொக்கலிங்கம்**
தமிழாசிரியர் (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகம்

# பொருளடக்கம்


D. நம்பர்

அ

அகத்தியருக்கு சுப்பிரமணியர் உபதேசித்த ஞானம் — 1713
அகத்தியர் 7 காண்டம் — 1772
,, 12 — 1614
,, 30 — 1613
,, 50 — 1508
,, 50 — 1555
,, 55 — 1541
,, 150 — 1554
,, 205 — 1518, 1553, 1556, 1743
,, 200 சூத்திரம் — 1532
,, 360 — 1549
அகத்தியர் ஆதாரக் கட்டளை — 8 — 1725
அகத்தியர் இந்திரசாலத்திரட்டு — மாந்திரீகத்துறை 41ஆம் காண்டம் — 1652
அகத்தியர் கக்கிஷம் — 1616
அகத்தியர் கட்கம் — 1500 — 1654
அகத்தியர் கரிசல் — 300 — 1540
அகத்தியர் கருதல் — பஞ்சாகி — பாயிரவிலக்கணம் — 1766
அகத்தியர் கர்ம காண்டம் — 300 — 1598
அகத்தியர் கற்கிடை சூத்திரம் — 30 — 1635
அகத்தியர் கும்மி பாடல் — 1514
அகத்தியர் குருநாடி — 1770
அகத்தியர் சரநூல் — 1544
அகத்தியர் சாலத்திரட்டு — 1200 — 1733
அகத்தியர் சாலத்திரட்டு — 1 —ஆம் காண்டம் — வைத்தியம் — 300 — 1649
,, ,, 2 —ஆம் காண்டம் வாதத்துறை — 1650
,, ,, 2 —ஆம் வாத காண்டம் — 1647
,, ,, 3 —ஆம் காண்டம் இந்திரசாலவித்தை — 1648, 1651
,, ,, — 200 — 1773
அகத்தியர் சுர வைத்தியம் — 50 — 1754
அகத்தியர் சூத்திரம் — 13 — 1630
அகத்தியர் சூரணம் — 36 — 1718

அகத்தியர் சூத்திரம் — 40 — 1700
,, ,, — 50 — 1705
,, ,, — 66 — 1512
,, ,, — 150 — 1513
,, ,, — 200 — 1532
அகத்தியர் செந்தூரம் — 300 — 1760
அகத்தியர் ஞானம் — 1 — 1727
,, ,, — 16 — 1720
அகத்தியர் திருநடன சூத்திரம் — 1515
அகத்தியர் தீட்சா விதி — 200 — 1612
அகத்தியர் தீட்சை — 5 — 1749
அகத்தியர் நடுக்காண்டம் — கர்ம வாகடம் — 300 — 1767
அகத்தியர் நாடி சூத்திரச் சுருக்கம் — 30 — 1709
அகத்தியர் பாடல் — 5 — 1615
,, ,, — 108 — 1593
அகத்தியர் பிள்ளைப்பிணி வாகடம் (குண வாகடம்) — 1695
அகத்தியர் பின்னூல் — 80 — 1511, 1600
அகத்தியர் பூரண சந்திரவாலை — 200 — 1750
அகத்தியர் பூரண சூத்திரச் சுருக்கம் — 1722
அகத்தியர் பூரண சூத்திரம் — 16 — 1617, 1684
,, ,, ,, — வாதமுறை — 1632
அகத்தியர் பெருநூல் — 1200 — சாலத்திரட்டு — 1574
அகத்தியர் மதி வெண்பா — 100 — 1729
அகத்தியர் ராசாங்க நாடி சூத்திரம் — 1710
அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் — 1567
அகத்தியர் வாகட சூத்திரம் — 1500 — 1589
அகத்தியர் வாகடம் — 1520, 1522
அகத்தியர் வாத வைத்தியம் — 1516
அகத்தியர் வாலக் கிருகை — 1505
அகத்தியர் வைத்திய சூத்திரம் — 8 — 1580
,, ,, ,, — 36 — 1692
,, ,, ,, — 205 — 1735
அகத்தியர் வைத்திய பூரணம் — 400 — 1539, 1779
அகத்தியர் வைத்தியம் — 1551, 1568, 1587
,, ,, — 16 — 1531
,, ,, — 150 — 1693
,, ,, — 600 — முதற் காண்டம் — 1775
,, ,, — 600-ன் படி பீடிகை — 1736
அகத்தியர் வைத்தியம்—முன்னூற்றுத்திரட்டு — 1504
அகராதி நூல் — 1753
அட்டாங்கயோக ஞானம்—360—போகநாதர் — 1711

அண்ணாமலை சுவாமிகள் முறை-புரசை வாக்கம் சென்னை — 1708
அழுகண்ணிச் சித்தர் பாடல் — 1642
அனுபோக சூத்திரம் — 1694

## ஆ

ஆதாரக் கட்டளை—8—அகத்தியர் — 1725
ஆதி சிதம்பர நடனம் — 1666
ஆதியில் என்னைப் பெற்ற ஆத்தாள் நிருவாணி பூசை — 1667
ஆறாதார சரக்கு—தேவமுனி — 1780
ஆனந்தக் களிப்பு—கௌமதி நன்னூல் — 1502
ஆனந்தக் களிப்பு—சுந்தரானந்தர் — 1562

## இ

இந்திர சாலத்திட்டு—அகத்தியர் 4—ஆம் காண்டம் மாந்திரீகத்துறை — 1652
இந்திர சாலவித்தை—அகத்தியர் சாலத்திரட்டு 3—ஆம் காண்டம் — 1648
இராமதேவர் —216—500 — 1688
இராமதேவர் துறவு சூத்திரம் — 1702
இராமதேவர் பாடல்—10 — 1621
இராமதேவர் வயித்தியம்—80 — 1734

## ஊ

ஊர்வசி ஞானம்—18 — 1728
ஊர்வசி ரெத்தினச்சுருக்கம் — 1703

## எ

எழுநூற்றுத்திரட்டு—போகர் — 1758
என்னைப் பெற்ற ஆத்தாள் நிருவாணி பூசை — 1667

## ஏ

ஏழு காண்டம்—அகத்தியர் — 1772

## க

கக்கிஷ பீடம்—மனோன்மணி — 1665
கடைக்காண்டம்—சுருக்கம்—10 — 1668
கட்கம்—1500—அகத்தியர் — 1654
கட்டி, புண், சூலைக்கட்டு சகலத்துக்கும் — 1739
கண் வைத்தியம் — 1605
கம்பளிச்சட்டை கைலாசநாதர் சூத்திரம்—200 — 1507
கரிசல்—400—அகத்தியர் — 1540

| | | |
|---|---|---|
| கருக்கிடை சூத்திரம்—30—அகத்தியர் | — | 1635 |
| கருவூரார் பலகலை சூத்திரம் | — | 1537 |
| கருவூரார் பலதிரட்டு—சாரக்கட்டு | — | 1641 |
| கருவூரார் பூசை | — | 1559 |
| கருவூரார் வாலை—30 | — | 1717 |
| கர்ம அனுபோக சூத்திரம் | — | 1694 |
| கர்ம காண்டச் சுருக்கம்—இராமதேவர் | — | 1640 |
| கர்மகாண்டம் —30—அகத்தியர் | — | 1598 |
| கர்ம காண்டம்—அகத்தியர்—நடுக்காண்டம் | — | 1767 |
| கர்ம விர்த்தி—பாலாகிரிகை சாத்திரம் | — | 1696 |
| கலைக்கியான சூத்திரம்—64 | — | 1774 |
| கலைக்கியானம்—1200—தெட்சிணாமூர்த்தி | — | 1586 |
| கற்ப சூத்திரம்—போகர் | — | 1602 |

**கா**

| | | |
|---|---|---|
| காயகல்ப சூத்திரம்—போகர் | — | 1581 |
| காரசாரத் துறை—60 போகர் | — | 1683 |

**கு**

| | | |
|---|---|---|
| குணவாகடம் | — | 1525, 1658, 1768 |
| குணவாகடம்—பிள்ளைப்பிணிவாகடம்—அகத்தியர் | — | 1695 |
| கும்மி—யூகிமுனி—1000 | — | 1683 |
| கும்மிபாடல்—அகத்தியர் | — | 1514 |
| குருநாடி—அகத்தியர் | — | 1770 |
| குருமுறை—கூர்மானந்தர் | — | 1564 |
| குருமுனி சுருக்கம் —1 | — | 1611 |
| குருமுனி சூத்திரம்—5 | — | 1610 |

**கூ**

| | | |
|---|---|---|
| கூர்மானந்தர் குருமுறை | — | 1564 |
| கூர்மானந்தர் சூத்திரம்—51 | — | 1751 |

**கெ**

| | | |
|---|---|---|
| கெந்தக ரசாயனம் | — | 1660 |
| கெவுனம்—14—தெட்சிணாமூர்த்தி | — | 1624 |
| கெற்பக் குறி—16 | — | 1657 |

**கை**

| | | |
|---|---|---|
| கைலாசநாதர் சூத்திரம்—200 | — | 1507 |

**கொ**

| | | |
|---|---|---|
| கொங்கணர் — 8 | — | 1675 |
| கொங்கணர் 8000-ல் சீனிநெய் | — | 1701 |
| கொங்கணர் கடைக்காண்டம் | — | 1744 |

கொங்கணர் சூத்திரம் —41 — 1664
கொங்கணர் தீட்சை வழலை — 1679
கொங்கணர் பாடல் — குளிகை —8 — 1579
கொங்கணர் முக்காண்டம் — 1653
கொங்கணர் வைப்புமுறை — 1575
கொங்கணர் சோடச சூத்திரம் — 1663

## கோ

கோரக்க நாதர் சமயாதீத விளக்கம் — 1645

## கௌ

கௌமதி நன்னூல் — 1501
,, ,, —ஆனந்தக்களிப்பு — 1502
கௌளி காதல் — 1545

## ச

சட்டைமுனி சூத்திரம் —8 — 1628
சட்டைமுனி சோடச சூத்திரம் — 1643
சட்டைமுனி மாதாந்திர நூல் —10 — 1629
சட்டைமுனியார் 1010—ல் வாத அங்கம் — 1636
சட்டைமுனியார் நிகண்டு —205 — 1637
,, ,, ,, —சொச்சம் — 1543
சட்டைமுனி வகாரத்துறை — 1732
சமயாதீத விளக்கம்—கோரக்கர் — 1645
சரச சிந்தாமணி — 1597
சரநூல்—அகத்தியர் — 1544
சன்னி தீட்சை 1200—ல் வாதம் 2—ஆம் காண்டம் — 1634

## சா

சாரக்கட்டு — கருவூரார் பலதிரட்டு — 1641
சாலத்திரட்டு —2—வது வாதகாண்டம் —அகத்தியர் — 1647
சாலத்திரட்டு —1200— அகத்தியர் — 1733
சாலத்திரட்டு—அகத்தியர்—1—ஆம் காண்டம் வைத்தியம்—300 — 1649
,, — ,, 2—ஆம் காண்டம் வாதத்துறை — 1650
,, — ,, 3—ஆம் காண்டம் இந்திர சாலவித்தை — 1651
,, — ,, பெருநூல்—1200 — 1574
,, இந்திரசாலவித்தை—அகத்தியர் — 1648
சால நிகண்டு —200—அகத்தியர் — 1773

## சி

சிதம்பர நடனம்—ஆதி — 1666
சித்திர வல்லாதி உருண்டை முதலியன — 1741

சித்திராரூட நொண்டி — 1756
சிந்தாமணி—சரச — 1597
,, —யூகிமுனி — 1594, 1771
சிவவாக்கியர் சூத்திரம் — 1644

**சீ**

சீனி நெய்—கொங்கணர்—8000—ல் — 1701

**சு**

சுந்தரானந்தர் ஆனந்தக்களிப்பு — 1562
,, சூத்திரம் — 1661
சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்த ஞானம் — 1713
சுரகண்டிகை —நட்சத்திரமாலை — 1778
சுரத்துக்கு மருந்து முதலியன — 1740
சுரவைத்தியம் —50—அகத்தியர் — 1754

**சூ**

சூடாமணி வைத்தியம் — 1655
சூதமுனி சூத்திரம் —50 — 1761
சூரணம் —36 —அகத்தியர் — 1718
சூலைக்கட்டு,புண்,கட்டி சகலத்துக்கும் — 1739
சூலை நிதானம் — 1656
சூலை வைத்தியம் — 1570

**செ**

செந்தூரம்—300—அகத்தியர் — 1760
சென்னை, புரசைவாக்கம் அண்ணாமலை சுவாமிமுறைகள் — 1708

**சோ**

சோடச சூத்திரம் — 1663
,, ,, —சட்டைமுனி — 1643

**ஞா**

ஞான காவியம்—1000—தெட்சணாமூர்த்தி — 1686
ஞானக் குளிகை—யோகம்—தெட்சணாமூர்த்தி — 1712
ஞானத் தாழிசை—12—மாணிக்கவாசகர் — 1721
ஞான பிண்ட உற்பத்தி — 1662
ஞானம் -1- அகத்தியர் — 1727
ஞானம் -12- வால்மீகர் — 1726
ஞானம் —16—அகத்தியர் — 1720
ஞானம் —16—ரோமரிஷி — 1723
ஞானம் —18—ஊர்வசி — 1728
ஞானம் —30—பொசுண்டர் — 1724

ஞானம் —80—புசுண்டர் — 1699
ஞானம் —80—புசுண்டர்-யோகவழி — 1698
ஞானம் — அகத்தியருக்கு சுப்பிரமணியர் உபதேசித்தது — 1713
ஞானம் — போகனாதர் அட்டாங்கயோகம் — 1711
ஞானம் — மதுர ரசயோகி — 1716
ஞானவெட்டி — 1588

### ட

டமரானந்தர்—16 — 1719

### த

தன்வந்திரி — பலதிரட்டு-500 — 1764
,, வாக்கியம் வைசூரி வைத்தியம் — 1596
தன்வந்திரி வைத்தியம்—71 — 1623

### தா

தாம்பிர பற்பம் செய்முறை — 1558

### தி

திரட்டு வாகடம் — 1521
திருநடன சூத்திரம் — அகத்தியர் — 1515
திருநீறு தரிக்க பகவதி தியானம் — 1584
திருமூலர்—8 — 1577
திருமூலர் அடிகை — 1565
திருமூலர் தீட்சை—10 — 1752
திருமூலர் தூதுவளை — 1534

### தீ

தீட்சாவிதி—200—அகத்தியர் — 1612
தீட்சாவிதி—மச்சமுனி — 1746
தீட்சை—5—அகத்தியர் — 1749
தீட்சை—10—திருமூலர் — 1752

### து

துரிசிக்கழங்கு—போகர் — 1759
தூதுவளை— திருமூலர் — 1534

### தெ

தெட்சிணாமூர்த்தி—5 — 1669
தெட்சிணாமூர்த்தி பலத்திரட்டு—8 — 1627
தெட்சிணாமூர்த்தி—8 — 1670
தெட்சிணாமூர்த்தி—10 — 1671
தெட்சிணாமூர்த்தி—10—பிண்டநீர் — 1677
தெட்சிணாமூர்த்தி—11—12 — 1267

தெட்சிணாமூர்த்தி வகாரம்—16 — 1673
தெட்சிணாமூர்த்தி—16 — 1676, 1690
தெட்சிணாமூர்த்தி—1200ல் வைத்தியகாண்டம் — 1646
தெட்சிணாமூர்த்தி கலைக்கியானம்—1200 — 1586
தெட்சிணாமூர்த்தி கெவுனம்—14 — 1624
தெட்சிணாமூர்த்தி ஞானகாவியம்—1000 — 1686
தெட்சிணாமூர்த்தி ஞானக் குளிகை-யோகம் — 1712
தெட்சிணாமூர்த்தி பரிபூரண காவியம் — 1583
தெட்சிணாமூர்த்தி பாடல்—20 — 1706

## தே

தேரையர் வைத்தியம்—1001 — 1776
தேவமுனி ஆராதார சரக்கு — 1780

## ந

நடுக்காண்டம்—அகத்தியர் கர்மவாகடம்-300 — 1767
நட்சத்திரமாலை—சுரகண்டிகை — 1778
நந்தீசர் விஷக் குளிகை-8 — 1578

## நா

நாடி சூத்திரச் சுருக்கம்—அகத்தியர் — 1709
நாடி சூத்திரம் அகத்திய ராசாங்கம் — 1710
நாடி நிதானம் — 1742

## நி

நிகண்டு—200—அகத்தியர் சால — 1773
நிகண்டு—205—சட்டை முனியார் — 1637
நிகண்டு சொச்சம்—சட்டை முனியார் — 1543
நிகண்டு—போகர் — 1595
நிகண்டு—மச்சமுனி — 1747
நிகண்டு—வைத்தியம் — 1689
நிருவாணிபூசை ஆதியில் ...... — 1667

## ப

பகவதி தியானம்—திருநீறு தரிக்க — 1584
பஞ்சமுகத் தியானம் — 1604
பஞ்சாங்கம் — 1529
பஞ்சாட்சர விளக்கம் — 1714
பட்சி சாத்திரம் — 1546
பரிபூரணகாவியம் தெட்சிணாமூர்த்தி — 1583
பலகலை சூத்திரம்—கருவூரார் — 1537
பலதிரட்டு —8—தெட்சிணாமூர்த்தி — 1627
பலதிரட்டு —500—தன்வந்திரி — 1764
பலதிரட்டு—சாரக்கட்டு —கருவூரார் — 1641

**பா**

பாண்டுறுவம் — 1738
பாலர்கிரிகை சாத்திரம்—கர்மவிர்த்தி — 1696

**பி**

பிண்ட நீர் —10— தெட்சிணாமூர்த்தி — 1677
பிரமவயிரி—51 — 1731
பிரம்மமுனி சூத்திரம்—12—சுருக்கம் — 1685
பிரம்மமுனி சூத்திரம்—384 — 1517
,, ,, —600 — 1585
பிரம்மமுனியார்—700 — 1777
பிரம்மமுனி வைத்திய சூத்திரம் — 1769
பிரம்மமுனி வைத்தியம்—380 — 1755
பிள்ளைப்பிணி வாகடம் — 1591
,, ,, —குணவாகடம்—அகத்தியர் — 1695
பின்னூல்—80— அகத்தியர் — 1511, 1600

**பு**

புசுண்டர் ஞானம்—80 — 1699
புசுண்டர் ஞானம்—80 யோக வழி — 1698
புண், கட்டி, சூலைக்கட்டு சகலத்துக்கும் — 1739
புரசை வாக்கம் அண்ணாமலை சுவாமிகள் முறை — 1708
புலத்தியர் சாத்திரம் — 1599
புளியுப்பு—போகர் — 1631

**பூ**

பூசாவிதி—போகர் — 1603
பூரணகாவியம்—தெட்சிணாமூர்த்தி — 1583
பூரண சந்திர வாலை—20—அகத்தியர் — 1750
பூரண சூத்திரச் சுருக்கம்—அகத்தியர் — 1722
பூரண சூத்திரம்—16 அகத்தியர் — 1617, 1684
பூரண சூத்திரம்—வாத முறை—அகத்தியர் — 1632
பூரணம்—400—அகத்தியர் — 1539, 1779
பூரணி மந்திர சாத்திரம் — 1606

**பெ**

பெருநூல்—1200—அகத்தியர் சாலத்திரட்டு — 1574

**பொ**

பொசுண்டர் ஞானம்—80 — 1724
பொதிகை சாமி வைத்தியம்—205 — 1737

**போ**

போக நாதர்—5 — 1674
போக நாதர் அட்டாங்க யோக ஞானம்—360 — 1711
போகமுனியார் பாடல் துரிசிக்கழங்கு — 1759
போகர் எழுநூற்றுத்திரட்டு — 1503, 1758

போகர் கற்ப சூத்திரம் — 1602
போகர் காயகற்ப சூத்திரம் — 1581
போகர் காரசாரத்துறை—60 — 1638
போகர் சூத்திரம்—8 — 1639
போகர் நிகண்டு — 1595
போகர் புளியுப்பு — 1631
போகர் பூசாவிதி — 1603
போகர் முப்பு சூத்திரம்—5 — 1622
போகர் வைத்தியநூல் சாத்திரம் — 1519

**ம**

மச்சமுனி—80 — 1748
மச்சமுனி—800—2—ஆம் காண்டம் — 1571
மச்சமுனி—800—3—ஆம் காண்டம் — 1572
மச்சமுனி சூத்திரம்—80—வகாரம் — 1678
மச்சமுனி தீட்சாவிதி — 1746
மச்சமுனி நாயனார்—800 — 1745
மச்சமுனி பாடல் — 8 — 1576
மச்சமுனி மெய் சுருக்கம் — 1687
மச்சமுனியார் நிகண்டு — 1747
மதிவெண்பா—100—அகத்தியர் — 1729
மதுரரசயோகி ஞானம் — 1716
மந்திர சாத்திரம் — 1626
மந்திர சாத்திரம்—பூரணி — 1606
மந்திரம்—வைத்தியம் — 1506
மனோன்மணி கக்கிஷ பீடம் — 1665

**மா**

மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை—12 — 1721
மாதாந்திர நூல்—10—சட்டை முனியார் — 1629
மாந்திரீகத்துறை—அகத்தியர் இந்திர சாலத்திரட்டு —4ஆம் காண்டம் — 1652

**மு**

முப்பு சூத்திரம் — 5 போகர் — 1622
முப்பு வகை — 1573
முப்புவின் கரு — ரோமரிஷி — 1618

**மூ**

மூலம் ஆறுக்கும் குழம்பு — 1526

**மெ**

மெய்ச் சுருக்கம் — 51 — 1633
மெய்ச் சுருக்கம் — மச்சமுனி — 1687

**யூ**

யூகிமுனி கும்மி — 1000 — 1683
யூகிமுனி சிந்தாமணி — 1594, 1771
யூகிமுனி வைத்திய சிந்தாமணி — 1765

**யோ**


யோக ஞானம் — போக நாதர் அட்டாங்கம் — 1711
யோகம் — 16 — வால்மீகர் — 1730
யோகம் — தெட்சிணாமூர்த்தி ஞானக்குளிகை — 1712
யோகவழி — புசுண்டர் ஞானம் — 80 — 1698

**ரா**

ராசாங்க நாடி சூத்திரம் — அகத்தியர் — 1710
ராமதேவர் கர்ம காண்டச் சுருக்கம் — 1640

**ரெ**

ரெத்தினச் சுருக்கம் — அகத்தியர் — 1567
,, ,, — ஊர்வசி — 1703

**ரோ**

ரோமரிஷி — 16 — 1625
,, — 51 — 1538
ரோமரிஷி 500-ல் ஞானம் — 1619
ரோமரிஷி சூத்திரம் — 25 —1536, 1560
ரோமரிஷி ஞானம் — 16 — 1723
ரேமாரிஷி பாடல் — 1550
ரோமரிஷி முப்புவின் கரு — 1618

**வ**

வகாரத்துறை — சட்டைமுனி — 1732
வகாரம் — 16 — தெட்சிணாமூர்த்தி — 1673
வகாரம் — மச்சமுனி — 80 — 1678
வயிரவத் தியானம் — 1691
வல்லாதி உருண்டை — சித்திர — 1741
வழலை — கொங்கணர் தீட்சை — 1679

**வா** — 1589

வாகட சூத்திரம் — 1500 — அகத்தியர் —
வாகடத் திரட்டு — 1521
வாகடம் — அகத்தியர் — 1520, 1522
வாகடம் வைத்தியம் — 1523, 1682
வாத அங்கம் — சட்டை முனியார் 1010-ல் — 1636
வாத காண்டம் — அகத்தியர் சாலத்திரட்டு 2-ஆம் காண்டம் — 1647
வாதத்துறை — அகத்தியர் சாலத்திரட்டு 2-ஆம் காண்டம் — 1650
வாத நிதானம் — 1659
வாத நூல் — 1535
வாத முறை — அகத்தியர் பூரண சூத்திரம் — 1632
வாதம் — சன்னி தீட்சை 1200-ல் 2-ஆம் காண்டம் — 1634
வாத வைத்தியம் — அகத்தியர் — 1516
வாலக் கிருகை—அகத்தியர் — 1505
வாலை—30—கருவூரார் — 1717
வால்மீகர் ஞானம்—12 — 1726
வால்மீகர் யோகம்—16 — 1730
வால்மீகி ஞானம்—16 — 1620

## வி


விஷக்குளிகை—8—நந்தீசர் — 1578


## வே


வேதாந்த பூரணம் — 1608


## வை


வைசூரி வாக்கியம்—தன்வந்திரி வாக்கியம் — 1596
வைத்திய காண்டம்—தெட்சிணாமூர்த்தி 1200-ல் — 1646
வைத்திய சிந்தாமணி—யூகிமுனி — 1765
வைத்திய சூடாமணி — 1655
வைத்திய சூத்திரம்—8—அகத்தியர் — 1580
வைத்திய சூத்திரம்—36—அகத்தியர் — 1692
வைத்திய சூத்திரம்—205—அகத்தியர் — 1735
வைத்திய சூத்திரம்—பிரம்மமுனி — 1769
வைத்தியத் திரட்டு 1509, 1510, 1524, 1527, 1528, 1530, 1542, 1547, 1548, 1557, 1561, 1566, 1569, 1582, 1590, 1592, 1607, 1609, 1704, 1707, 1757, 1762, 1763.
வைத்திய நிகண்டு — 1687
வைத்திய நூல்—போகர் — 1519
வைத்திய பூரணம்—400—அகத்தியர் — 1539, 1779
வைத்தியம் — 1552, 1563, 1601
வைத்தியம்— 16— அகத்தியர் — 1531
,, — 71— தன்வந்திரி — 1623
,, — 80— இராமதேவர் — 1734
,, —150— அகத்தியர் — 1693
,, —205— அகத்தியர் — 1533
,, —205— பொதிகை சாமி — 1737
,, —300— அகத்தியர் சாலத்திரட்டு 1—ஆம் காண்டம் — 1649
,, —380— பிரம்மமுனி — 1755
,, —600— முதற்காண்டம்—அகத்தியர் — 1775
,, —600— ன்படி பீடிகை—அகத்தியர் — 1736
,, —1001—தேரையர் — 1776
,, — கண் — 1605
,, — அகத்தியர் — 1551, 1568, 1587
,, — மந்திரம் — 1506
,, முன்னூற்றுத் திரட்டு அகத்தியர் — 1504
வைத்திய வாகடம் — 1523, 1682


## இதிலுள்ள இலக்கிய நூல்கள்


கொடிக்கவி — 1680
சச்சிதானந்த மாலை — 1715
ஞானசாரம் — 1681
நூற்றியெட்டுக்குறிச்சி — 1697
மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை — 1721


—X—

# தஞ்சை சரசுவதி மகால் நூலகத்

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## 14-வது தொகுப்பு

### மருத்துவப் பகுதி

வரிசை எண்: *1501* சுவடி எண்: *752-a*

## கௌமதி நன்னூல்

ஏடுகள்: *(1—85+64—100)122*. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: *7-11* வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: *24×3* செ.மீ. கி.எண்ணிக்கை: *3600*. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி : ஓம்

நன்றாக குரு வாழ்க குருவே துணை

கௌமதி - *400*

சிவகிருபை பாதமது போத்தி நானுந்
 தெரிந்தெடுத்துப் பதினெண்பேர் மனத்தால் யானுந்
தவம்பெறவே கௌவுமதினூல் பாடல் னூலில்
 சாத்தினோம் வயித்தியங்கள் யோக ஞானம்
நவமதுவாம் லோகமுரை நித்தல் வாதம்
 நாட்டினோஞ் சரிகைமுதல் கிரிகை மாற்கம்
பவமறவே யின்னூலில்க் கதைமூன் றொன்றில்ப்
 பாடினோங் கணபதிதாள் காப்புத் தானே! *1*

**முடிவு**

சூச்சமப்பாக் கெவுமதினூல் நானூற் வீசம்
 சுருக்கமப்பா பதினாற் கதைக்குள் வாசம்
மாசல்லப்பா ஒன்றுமில்லை வெளியாய்ச் சொன்னோம்
 மைந்தனே உலகமதில் வாத மேது
காச்சப்பா யெரிந்துவிடு பெரிதோ அல்லால்
 வளியின்றி மறுவுநிதி யணுவுக் குள்ளே
மூச்சப்பா கடிகையொன்றில் முடிந்து போச்சு
 மூன்றுமப்பா கெவுமதி நன்னூல் முற்றே! *426*

கெவுமதினூல் நானூறு முற்றிற்று.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் குட்டம், மேகம், அண்டவாயு, நறை மாற, பாரிச வாய்வு, வசியம், விஷத்துக்கு, கெற்பத்துக்கு, யீட்டுமுறை, ஸ்ரீ வசியம், போக நிசாதி நின்னயம் அறியும்படி சொல்லியது, பாஷாணக்கட்டு முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: *1502* சுவடி எண்: *752-b*

## கெவுமதி நன்னூல் ஆனந்தக் களிப்பு

ஏடுகள்: (101—112) 12. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 5—6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 24×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக் கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கெவுமதி நன்னூல் ஆனந்தக்களிப்பு

யோகம்

குருவே துணை

சிவகிருபை பாதமது போத்தி யோக
சிகந்தனில் கெவுமதி நூலுரை யினெக்கு
தவகிருபை யிருட்கு ளொளி யேத்தி
யோகந் தப்பாமல் ரசவாதம் நடப்பாக வாழ்த்தி 1

**முடிவு**

சாத்தும் வகையினி கேளு
பத்தன் பிறசண்ட மாறாதச் சேனிற்கண்டதோர்
சித்தன் நீத்தும்வகை தனித்தனியாய்
சுத்தன் அறநீதிகளியா மயல்நீர் சோதியளி பித்தன் 73

முற்றிற்று

குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் யோகம், யேமரசவாதம், ருத்திராட்ச செயநீர், வல்லூறு நிறுத்தல், முறுங்கை, யெறிகாலி சேற்கை ஆகிய தலைப்புகள் உள்ளன.

---

*வரிசை எண்: 1503* *சுவடி எண்: 753*

# போகநாதர் எழுநூற்றுத் திரட்டு

ஏடுகள்: *163(88, 89, 90 வெற்றேடுகள்)* சுவடியின் நிலைமை: நல்ல நிலை பக்கத்திற்கு: *7—9* வரிகள். பொருள்: மருத்துவம். **அளவு:** *27 × 3* செ.மீ கி. எண்ணிக்கை: *7000*. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம்

நன்றாக குருவாழ்க குருவே துணை

போகனாதர் எழுநூற்றுத் திரட்டு

ஆனந்த மாய்நிறைந்த மாயி பாதம்
அகண்டபரி பூரணமா மய்யர் பாதம்
வானந்த மாகிநின்ற கிணேசன் பாதம்
மறிவியதோர் மூலத்தில் நந்தி பாதம்
ஆனந்த மாகியதோர் காலாங்கி பாதம்
சனகருடன் வியாக்கிறம பதஞ்சலியின் பாதம்
போனந்த மாகியதோர் ரிஷிகள் பாதம்
போற்றியெழு னூத்திரட்டுப் புகலு வேனே! 1

**முடிவு**

சொன்னதொரு சூத்திரத்திற் பொய்யொன்று மில்லைத்
துலங்கியதோர் மனிதாயை யேழுதிரந் துதித்தேன்
சொன்னதொரு குருபதத்தை அனுதினமுந் துதித்தேன்
துலங்கியதோர் மூலனுட பதத்தை யென்றுந் தொழுதேன்
சொன்னதொரு காலாங்கி அய்யருட பதத்தைத்
தொழுதுகொண்டு யெழுநூத்துச் சில்வானஞ் சொன்னேன்
சொன்னதொரு சித்தருட பதங்கள் போத்திச்
சூத்திரந்தான் பாடியது காசி முத்தே. 781

குருபாதந் துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சவுக்கார வைப்பு, சவுக்கார சுத்தி, கடுங்காரச் செயநீர், உப்புக்கட்டு, உப்பினுட மெழுகு, பூரச்சுண்ணம், துருசுச்சுண்ணம், சாரசுத்தி, சாரசுண்ணம், அண்டச் சுண்ணம், நிமிளைச் சுண்ணம், நாகக்கட்டு, துருசுக்குரு, லிங்கமெழுகு, வெள்ளைமெழுகு, இந்துப்பு வைப்பு, சூடன் வைப்பு, சதுரக்கள்ளி பற்பம், நடராச விக்கிரகம், மயூறச்செம்பு, அயச்செம்பு. பஞ்சபாஷாணம், வெடியுப்பு செயநீர் முதலியன உள்ளன. பயனுள்ள நூல்.

---

வரிசை எண்: 1504 சுவடி எண்: 754

# அகத்தியர் வைத்தியம் முந்நூற்றுத் திரட்டு

ஏடுகள்: 37 சுவடியின் நிலைமை: சிறிது பழுது, பக்கத்திற்கு: 10–11 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 45 × 4 செ.மீ கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்
நன்றாக குருவாழ்க குருவே துணை
அகத்தியர் வயித்தியம் முன்னூற்றுத் திரட்டு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
யிந்து மிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத் (தடி போற்றுகின்) றேனே!

பூதலத்தென் பொதிகை தன்னில் வாளும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்……………… யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியநூல் வகையாய்ச் சொல்வேன்

**முடிவு**

மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
முட்டினால் வடுகனங்கே நிற்தஞ் செய்வான்

ஆலத்தின் குண்டலிக்கு ளடுக்கப் பாரு
ஆசையவன் வைப்பதற்கு வடமாலை சாத்தி
சீலத்தின் நந்தியுட பூசை பண்ணு
செகண்டி னாதவொலி மணியி னோசை
காலத்தின் குருவறிந்து பூசை தீந்தால்
கைக்குள்ளாம் வயித்தியமுன் னூறு முற்றும். 300

குருபாதந் துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

முன்முகப்பு ஏட்டில்
காலுந் தலையுங் கடந்துநடு வாகிநின்ற
மேலுந் துரிய விளக்கமே — பாலாகேள்
வயிற்றியமுன் னூறுமே சூத்திரம தாய்வளங்கப்
பயிற்றியரு ளுங்கண்சரணம் பார்—என்ற பாடலும்

பின் ஏட்டில் நூலின் கடைசி மூன்று பாடல்களும் எழுதப்பட்டுள்ளன.

இதில், காந்த ஈயம், அயச்சத்து, தங்கச் செந்தூரம், வெடியுப்புச் செயநீர் அப்பிரகச்சத்து, நிமிளைச்சத்து, ரசபற்பம், தங்க அண்டயீயம், ரசகெந்தக செந்தூரம், யிண்டு சங்குலேகியம், சீந்திச்சற்கரை, முத்து செந்தூரம், தாம்பிரச்சுத்தி, தாம்பிர செந்தூரம், ரசகற்பூரபற்பம், மண்டுகச் செந்தூரம், காந்தச் செந்தூரம் பூனாக்கச்சூரணம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1505 சுவடி எண்: 755-a

# அகத்தியசுவாமிகள் வாலக் கிறுகை

ஏடுகள்: 19. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம் (கருவுற்றவர்கட்கு). அளவு: $16 \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

அகத்தியசுவாமி அவுகள் வாலக்கிறுகை

கெற்ப உற்பத்தியான ஒண்ணான் திங்களில் வருவது உள்ளங்காலும் கையும் அனலாயிருக்கும் அதுக்கு மருந்து: இலாம்பிச்சம்வேர், தாமரைவளையம், அல்லிக்கிழங்கு,

சந்தனம் இவை ஒரொன்று அரை களஞ்சி கூட்டி தண்ணீர் வார்த்து அரைத்து பாலில் குடிக்கத் தீரும்.

### முடிவு

ஒன்பதாந் திங்களில் வ்குதி யென்றும் பெயர்
உச்சி கொதிப்பிவிக்கும். வெதுப்பும் இதற்குப் பொ......
மணகலில் விளக்கேத்தி மஞ்சள் பிள்ளையும் சோறும்
சுடலையில் வைக்கத்தீரும்

இந்த அட்சரம் கூட வைக்கவும்
(அட்சரம் உள்ளது)

(18,19 ஆவது ஏடுகள் மிக மிகப் பழுதுபட்டுள்ளன)

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில் கருவுற்ற பெண்களுக்கு ஒவ்வொரு திங்களும் ஏற்படும் விளைவுகளும் அதற்கான மருந்துகளும், பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளன.

———❋———

வரிசை எண்: 1506 சுவடி எண்: 755-b

## வைத்தியம் - மந்திரம்

ஏடுகள்: 12. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மாந்திரீகம் (குழந்தைகட்டு). அளவு: $16 \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

ஒரு நாள் ஒரு மாதம் ஒரு வருஷம் ......... பெயும் நாளும். அதின் குணம்: வெதுப்பும். அடிக்குவகுரு இறைச்சலும் முலை உண்ணாது: அதுக்கு விநாயக பூசை, தேங்காய், பச்சை மாவு, அரிசி உளுந்து, பருப்புச் சோறும் சந்தனம். தெவேத்தியங் குடுத்து இந்தயெந்திரங்கட்டவும். பிணி தீரும் இதுக்கு எந்திரம் (எந்திரம் உள்ளது).

### முடிவு

பனிரெண்டு நாள், பனிரெண்டு மாதம், பனிரெண்டாம் வருஷம் மாகாளி யென்னும் பேய்னாயும். அதின் குணம். வெதுப்பு அடிக்கும் பலப்பல விதங்களாய்ச் சீறிச்சீறி அழுகும். பாலும் வெல்லமும் பச்சரிசி சோறும் கோவி பெலி குடுத்து தீபம் குடுத்து சந்தனமும் குடுத்து இந்த எந்திரம் கட்ட பிணி தீரும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பிறந்த குழந்தைகட்கு ஒவ்வொரு நாளும், திங்களும் ஏற்படும் மாறுதல்களுக்கு மாந்திரீகம் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஏட்டிலும் பின்புறம் யந்திரங்கள் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1507 சுவடின் எண்: 755-c

# கம்பிளிச்சட்டை கயிலாசநாதர் சூத்திரம் - 200

ஏடுகள்: 98. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 16 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கம்பிளிச் சட்டை கைலாசநாதர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கம்பிளிச்சட்டை கயிலாச னாதர் சூஷ்த்திரம்.

சூத்திர மோதுமுன்னே சொல்லுகிறேன் கெணேசன் காப்பு
சாத்திரம் நிறைந்து பொங்கி சராசர மெங்குந் தானாய்
தோத்திரம் பொருளுந்தானாய் சொல்லது மவுன முத்து
போத்துறாய் புரான பள்ளான் பூரணங் காப்புத் தானே! 1

**முடிவு**

தானான சூத்திரத்தை எழுதிக்காண
சாதகமாய் கடசத்தே வைத்துக் கொண்டு
வானான கேசரத்தி லாடும் போது
வார்த்தை வந்தால் சாத்திரமும் சூத்திரமும் பேசு
கோனான சின்மயத்தின் பிள்ளை நீங்கள்
குறியேது கயிலாசமுத்தி வற்கம்
வேனான சூத்திரந்தான் னிருநூத் தொன்னு
வேதாந்த கருணையினால் விளங்கி முத்தே! 201

சூத்திரம் எழுதி நிறைந்தது
முத்தும்
குருபாதந்துணை கற்பிச்ச குருவே குரு
அருணகிரிநாதர் பாதந்துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வழலை மார்க்கம், வெடியுப்பு, செயநீர், சுண்ணம், வீரம், பூரம், சீனம், வழலைச் சுன்னம் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: *1508* சுவடி எண்: *755-d*

## அகத்தியமூர்த்தி ஐம்பது

ஏடுகள்: *18.* சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: வாத நோய். அளவு: *16 × 2½* செ. மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம்
அகத்திய மூர்த்தி அன்பது

வாதந்தான் யென்ப தாக வருகின்ற பச்சை வாதம்
சீதமே நடுக்கு வாதம் சிறந்திடு முடக்கு வாதம்
சூதமே சந்து வாதம் தோன்றிய முகத்தின் வாதம்
யேதமாம் வாதந்தீர யேந்திளை மருந்து கேளாய்! 1

**முடிவு**

யிது முதல் ....................ன்
யிசைந்திடு சமுர கண்டன்
மதுவுடன் குதிரை மேலும்
வலிப்புடன் மலைவலிப்பாம்
பதுவமா மாவுரிச் சாறு
பகர்வசம் புள்ளி கூட்டி
முதுநசி யந்தான் பண்ணில்
மொழிந்திட ஓடிப் போமே! 50

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வாதம் எண்பதுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1509 சுவடி எண்: 755-ஏ

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு 6–7 வரிகள். பொருள்: பலவகை மருத்துவம். அளவு: 16 × 2½ செ. மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். கி. எண்ணிக்கை: 100. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

(தலைப்பு ஒடிந்துள்ளது)

சருவேசு பரனார் சகலமும்—மருந்தை
மொளியான லனவரும் பிளைக்க
குருப்பிறஞ்சிக் குளம்பு சூரணத்தை
திருவருளென்று சேவித்த பேர்க்கு
அருவி என்னூ லாயிரத் தடங்களும்
தீரும் செறுவற்குழவி செயிதன
ரென்றே பெருமைக் கவிழ்தம் பேருரைப் பேனே! 1

## முடிவு

......சீலப்புகைக் காரங்கள் போட......
...ண்டிய விரணந் தாமரை சிலந்தி பண்டு......
......தி பவுத்திர ரோகங் கண்டமாலை களுகட் .....
......கழலை துன்றிகை சிலந்தி தொப்புள் வீக்கம்......
......லை அண்டிய மார்பில் அந்தி சிலந்திகள் பெண்டுக......

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் தலைப்பு ஏட்டின் தலைப்புப் பகுதி முறிந்துள்ளதால் தலைப்பு இல்லை. பலவகையான நோய்கட்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1510 சுவடி எண்: 756-a

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 56. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு 16-18 வரிகள். பொருள்: பலவகை மருத்துவம். அளவு: 13 × 5 செ.மீ. கி. எண்ணிக்கை 1400. எழுத்து: தமிழ் கிரந்தம். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தம்பனத்துக்கு வகை:

கிழமை — திங்கள்
அஸ்த்தமான வேளையில்
திக்கு அக்கி(னி) மூலையில்
இருக்கவும் — மந்த்ரம்
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஹர ஹர
வாசியே நம
உரு 1008 — சிவப்பு.

**முடிவு**

காதி புதல்வன் களவுகொண்ட காலையிலே
மாதவமார் செய்வார் வடமலையே—நீதியாய்த்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

ரசம்வராகனெடை 1, கெந்திவிராகனிடை 1, தாம்பிரபற்பம் விராகனிடை 1 இதுக்கிரட்டி லிங்கம். வெண்ணொச்சிச் சாறுவிட்டு நாலு சாமம் அரைத்து சிறுபயறள வுண்டை பண்ணி நிழலுலர்த்தியனுப்பான மறிந்திடவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் பல்வேறு மருத்துவங்கள் பேசப்படுகின்றன. கூந்தற்பனை ஓலையில் இருபுறமும் எழுதப்பட்டுளது, கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1511 சுவடி எண்: 756-b

## அகத்தியர் பின்னூல் - 80

ஏடுகள்: 31. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 16 - 18 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 13×5 செ மீ. கி. எண்ணிக்கை 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம்
முன்னூ லெண்பதுஞ் சொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியைப் போற்றி

பின்னூ லெண்பதுந் சொல்ல ஆயி காப்பு
பேரான யென்குருமா முருகன் காப்பு
அன்னாளி லீசனுப தேசத் தாலே
அகஸ்த்தியனா மென்றெனக்குப் பேரு மாச்சு
பொன்னான வாதத்தி லட்சங் காப்பு
பூட்டினது பூரணசூத் திரத்தைக் கேளே! 1

முடிவு

ஞானமென்ன யோகம் விட்டால் அதுவும் ஞானம்
னாலைவிட்டா யோகமென்ன மறண யோகம்
பானமென்ன ரசத்தைவிட்டால் சுருப்பா னந்தான்
பரியாரம் நூலைவிட்டால் பழகா பழகா ரந்தான்
கோணமென்ன கோணமென்ன வழலை விட்டால்
காசினியில் யிவன்யோகி கடைதான் முற்றே ! 83

அகஸ்த்திய ரருளிச்செய்த யெண்பது

காலம்

இல்லை

குறிப்பு

இதில், தாம்பிரபற்பம், அரையாப்புக்கு, குருமுடிக்க, ரசப்பதங்கம், தாளகபற்பம் சுரகோடாலி, சலகுலாந்தகசெந்தூரம், விக்கலுக்கு, நேத்திரவியாதிக்கு, பல்வலிக்கு நசியம், பவளபற்பம் அறுகம்வேர்கிறுதம், கிரதிக்கிப்புகை, வாய்வுபுத்திரன், பெரும் பாட்டுக்கு, பூரண லேகியம் முதலியன உள்ளன. கூந்தற் பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1512 சுவடி எண்; 756-c

# அகத்தியர் சூத்திரம் - 66

ஏடுகள்: 12. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 16-18 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 13 × 5 செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஹரி ஓம்

நன்றாக குருவாழ்க குருவே துணை

ஆதியாங் கிணேசன் காப்பு அறுநூற்றுக் கருவை யெல்லாம்
சோதியா மாயி பாதம் துணையென உள்க்கொண் டேற்றி
நீதியாந் திரட்டுச் சூத்திரம் நிலைத்தவா கடமாய்ச் சொல்வேன்
வாதியாம் பிணிகள் தீர மருந்துடன் குணத்தைக்கேளே.

திரட்டு வாகடத்துக்கு மருந்து

வாதந்தா னெண்ப தாகும் வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம் சிறந்திட முடக்கு வாதம்.

## முடிவு

கேளப்பா கஞ்சாவால் கெட்டார் கோடி
கெட்டபுகை வெகுனாத்தம் சீதம் பாழா
தேளப்பா கொட்டுதல் போல் நெஞ்சிற் கட்டும்
சீசீசீ கசுமாலச் சித்தா மூலி
வேளப்பா யெரித்தசிவ னெனக்குச் சொன்னார்
வேதாந்த சட்டைமுனி தானும் சொன்னார்
வாளப்பா யிதைவிட்டுக் கற்பங் கேளு
வாலைதனை நமஸ்கரித்து வணங்கி முத்தே! 66

## காலம்

விகுருதி வருஷம் மார்களி மாதம் 27-ஆம் தேதி வெள்ளிக்கிழமை நவமியுங் கூடின சுபதினத்தில் திரட்டு வாகடம் எழுதி முகிந்தது. முற்றும். பீதாம்பர சுப்பய்யர் ஏடு. எடுத்தவாள் வாசித்துக் கொண்டு குடுக்கவும்.

சிவகாம்பாள் துணை

குருவே துணை

## குறிப்பு

இதில் பித்தப் பிரமைக்குக் கிஷாயம், மாந்தயீளை, விக்கல், சத்திக்கி, மூலத்துக்கு, கிராணிக்கு, குன்மத்துக்கு, மேகத்துக்கு, காமாலைக்கு, சூளைக்கு, பிணிசத்துக்கு, கவுசிவிப்புருதிக்கு, மகோதரத்துக்கு, ரத்தபித்த காசத்துக்கு கண்ட மாலைக்கு, பவுத்திரத்துக்கு, நயனரோகத்துக்கு மாத்திரை முதலான மருந்துகள் கூறப்பட்டுள்ளன. கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1513 சுவடி எண்: 756-d

# அகத்தியர் சூத்திரம் - 150

ஏடுகள்: 23. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 16-18 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 13×5 செ.மீ. கி.எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஹரி:ஓம்

சீரணி கொன்றை சூடும் சிவனிரு பாதம் போற்றி
வாரணி முகத்தோன் தன்னை வணங்கிநூத் தன்பதுஞ் சொல்ல
பூரண வாலை ஞான சரசுவதி போற்றி போற்றி
காரண மான செஞ்சொல் கணபதி சூத்திரங் காப்பே! 1

## முடிவு

சொன்னது துகைதான் னூரு
அன்பது சூட்ச மாகும்
பின்னமே சொன்ன நூலின்
முக்கிய மின்னூல் சூட்சம்
பன்னமே பாரு லொக
மாரண மதிக சூட்சம்
அன்னமே சொன்ன னூத்
தன்பது வீர முத்தே! 151

குருபாதமே கெதி
சிவகாமி துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சரக்கு சுத்தி, சாதிலிங்கசுத்தி, தாளக சுத்தி, குக்கில் சுத்தி, பொன்னிமிளை அரபிரக சுத்தி முதலானவைகள் கூறப்பட்டுள்ளன. கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுளது.

வரிசை எண்: 1514 சுவடி எண்: 756-e

# அகத்தியர் கும்மிப் பாடல்

ஏடுகள்: 2 சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 16-18 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 13×5செ.மீ. கி. எண்ணிக்கை: 40. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

அச்சு சடையன் பெருச்சாளி
அய்யனதுமே லெழுந்தருளி
உச்சிதமாக விநாயகன் பொற்பாதம்
உகந்து கும்மி யடியுங்கடி! 1

மானே கும்மியடியுங்கடி-மட
மாதே கும்மியடியுங்கடி
தேனே கும்மி யடியுங்கடி
தேகஞ் செளிக்கவே கும்மி பாடுங்கடி 2

**முடிவு**

பேரா முட்டி அரிந்திடவே
பொடல்பிலத்த திப்பிலி மீரிசம
வீரமதாகக் கிஷாயமிட்டால் சுரம்
விட்டுவிடு மென்றே கும்மி கொட்டுங்கடி

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சுரத்திற்குண்டான மருந்துகள் கும்மிப்பாடல்—மூலம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது.

———❋———

வரிசை எண்: 1515 சுவடி எண்: 756-f

# திருநடன சூத்திரம்

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 16-18 வரிகள். பொருள்:

மருத்துவம். அளவு: 13×5 செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
நடனதிரு சூத்திரத்தைப் பாடு தற்கு
ஆடியதோர் கணபதியுங் கந்தன் றானும்
மருள்பெருகும் னாதாக்கள் ரிஷிகள் காப்பு

**முடிவு**

நானென்ற சாம்பிராணி சூடன் ரெண்டும்
மனோசிலை மண்செய்து காடை புடத்தில் மூன்று
வேனென்ற சாதிலிங்கம் வெகுநோய்க் காகும்
விளங்குகின்ற சூஷ்த்திரம் னாற்பத்தெட்டு முத்தே! 48

குருபாதமே கெதி

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் ரசவாதம், ஞானசித்தி அரிதாரக்கட்டு, சூரித்தயிலம் அட்டலேகியம் முதலியன உள்ளன. கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1516 சுவடி எண்: 756-g

# வாத வைத்தியம்

ஏடுகள்: 7 சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 15-17 வரிகள். பொருள்: வாத வைத்தியம். அளவு: 13×5 செ.மீ. கி. எண்ணிக்கை 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

வாத சுரத்துக்கு கிஷாயம்

நல்ல திப்பிலி வேர்க்கொம்பு
நலமா மிளகு தன்னுடனே

சொல்லு முள்ளி வாய்விளங்கம்
வோரோ ரரைக்கழஞ்சு
வல்ல படியே அரைத்திதனை
வகையாய் வெல்னீ ருடன்குடிக்க
இல்லை வாத சீதசுரம
ரில்லே முனிவர ரியம்பினாரே! 1

முடிவு

தேவ தாரம் வசம்புதிப்பிலி
சேரும் கோட்டம் சுக்குடன்
மிளகு சமன்கொண்டு சேர
இடித்துநீர் நாழிவிட்டு
நாலி லொன்றாய்க் காய்ச்சியே
யருந்து விராலமே வாத
வாத சுரம் போகும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில் வாதம், வாதசுரம் முதலான நோய்களுக்குண்டான மருந்துகள் கூறப்பட்டுள்ளன. கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1517 சுவடி எண்: 756-h

## பிரம்மமுனி சூத்திரம் - 384

ஏடுகள்: 23 சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 15-17 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 13×5 செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

மூடியே அடுப்பேத்தி யெரித்து நன்றாய்
முன்போலே திராவகத்தை வாங்கு வாங்கு
...........................................
நாடியே தூபமுகம் விலகி நின்று
நலமான திராவகத்தை வாங்கு வாங்கே! 292

**முடிவு**

நானான ஞானமொடு வாசி யோகம்
அடங்கிநின்ற பூரணமு மறியச் சொன்னேன்
தேறவே வழலையுட கருவுஞ் சொன்னேன்
செப்பினேன் கருக்கிடைசூத் திரந்தான் முற்றே. 384

பிரம்மமுனி சூத்திரம் முன்னூற்றி யெண்பத்தி நாலு முற்றும்.

மீனாட்சி சகாயம்

சரசுவதி சகாயம்

சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் சமேத
ஸ்ரீ ராமச்சந்திர சுவாமி சகாயம்
லலிதாம்பா சகாயம்
ஸ்ரீ ராமஜெயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தொடக்கம் 291 பாடல்கள் இல்லை. திசமுக்குரு, தாம்பிரத்தின் சுத்தி, சூதபற்பம், வெள்ளைப் பாசாணக்கட்டு, சாதிலிங்கக்கட்டு, தாளகக்கட்டு, காரியபற்பம், தாம்பிரபற்பம், நாகபற்பம், யோகசித்தி கவி, நவச்சாரக்கட்டு, சூதநீர், வசியம், திலதம் முதலியன உள்ளன.

மீனாட்சி சகாயம், சரஸ்வதி சகாயம்—என்று கிரந்தத்திலும் சீத்தா லக்ஷ்மண பரத சத்ருக்ன அனுமான் சமேத ஸ்ரீ ராமச்சந்திர சுவாமி சகாயம். லலிதாம்பா சகாயம் என்று தெலுங்கு எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1518 சுவடி எண்: 756-i

# அகத்தியர் - 205

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 12-16 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 13×5 செ.மீ. கி. எண்ணிக்கை: 650. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நிகரில்லா மேகத்தின் தயிலத் தாதி
நிலையான சந்தனமும் இலுமிச்சந் தோடு
பகையான ஆவாரையின் பட்டை யோடு
வகைக்கி பலம் பத்துபல மாக வாங்கி

**முடிவு**

யீவதிர்த நூல்துகைதா னிருநூத் தஞ்சில்
யிகத்திலுள்ளோர் பிழைக்கவென்று யிரங்கிச் சொன்னோம்

× × × × ×

வாயமுடன் கிருதங்கள் யெண்ணெய் செய்து
வைத்திடுவாய் யனுப்பானம் வயித்தியம் முற்றும். 204
முற்றுமே தெட்சணா மூர்த்தி பாடல்
முன்னும் பின்னும் ஆராய்ந்து வயித்தியம் செய்தால்

× × × × ×

சித்திரைப்போ லென்னாளுமிப் புவியில் வாழ்ந்து
தேசிகராய் இருப்பரென்று செய்திட் டோமே! 205

தெட்சணா மூர்த்தி துணை
குருவே துணை
பரதேவி சகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 294(h) D. 525, எண் 323 (a) D. 622 போன்றது இதில் முதல் 105 பாடல்கள் இல்லை.

இதில், கடைசிப் பாடல் மிகையாக உள்ளது. முன் சுவடிகளில் இப்பாடல் காணப் படவில்லை.

---

வரிசை எண்: 1519

சுவடி எண்: 757

# போகரிஷி அருளிச் செய்த வைத்திய நூல் சாத்திரம்

ஏடுகள்: 156 (97-வது ஏடு இல்லை). சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 18 × 3 செ. மீ. கி. எண்ணிக்கை 2300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போக முனிவர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆமப்பா மனிதர் செய்த கருமத் தாலே
...... மேகமென்ற ராஜா வாலே
காமத்தால் விசனத்தால் பொசிப்பி னாலே
கன்னியரை மிச்சமாய்ப் புணர்வ தாலே
போமப்பா நடையாலே ...... ளாலே
பொழுதிரவு தெரியாத நித்திரை யாலே
நாமப்பா கண்டகண்ட வியாதி யாலே
நலிவோர்க்குக் கைமுறையை நன்றாய்க் கேளே!

**முடிவு**

யிதுவெல்லாம் அரைத்துக் கூடப் போட்டு
எண்ணெய் காச்சி எடுத்துவைத்துக் கொண்டு
வாதகடுப்பு, குடச்சல், உடம்புவலி
இதுகளுக்கு எண்ணெயைக் கையில் பூசி
விளக்கில் வாட்டி துவாலை யாகப் பூச
உடனே தீரும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் முதலிரண்டு ஏடுகளில் மட்டும் போகரிஷி சூத்திரம் ஐந்து பாடல்களே உள்ளன.

இது, அகத்தியர் கர்ம சூத்திரம் போல் உள்ளது.

பின்னர், பித்தசுரம், சேத்துமசுரம், பித்தவெடிப்புக்கு, சீந்தில்பற்பம், மேகத்துக்கு, மலசலக்கட்டுக்கு, சிறுபிள்ளை பெறமாட்டாதவளுக்கு, அக்கினி மாந்தத்துக்கு, சூட்டுக்குத்தயிலம், சகல ரோகத்துக்கும் எண்ணெய், வயிற்று இரைச்சல், பேதிக்கு, ரத்தக்கடுப்புக்கு முதலியன உள்ளன. முதல் ஏட்டில் அட்டவணை உள்ளது.

மேலேட்டில், 'போகரிசியருளிச் செய்த வைத்தியநூல் சாத்திரம் சண்முகம்பிள்ளை தனது குமாரன் சதாசிவப்பிள்ளை' என்றுளது.

வரிசை எண்: 1520 சுவடி எண்: 758-a

## அகத்தியர் வாகடம்

ஏடுகள்: 29. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்:

மருத்துவம். அளவு: 20½ × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 450. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

காப்பு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்......
...... சார்வார் தமக்கு.

வால சண்முகமூர்த்தி சகாயம்

நூல்

மகாசால மார்க்கம்

செய்யரச வாதமுறைக் கோரைஞ் ஞூறுந்
திகழ்மகா சாலமார்க்கம் இருநூத் தஞ்சாம்
மைதயிலப் போக்கிலொரு நூற தாகும்
வருதிலதங் குளிகையே தகமுன் னூறுங்

**முடிவு**

பரங்கிப்பட்டைப் பொடியும் சீனிச் சர்க்கரையும்
போட்டு லேகியமாகக் கிளறி, அந்திசந்தி கொட்டைப்
பாக்களவு சாப்பிட சகல மேகமும் தீரும்
பத்தியம்: கடுகு, பூசினிக்காய், கய்ப்புப் புளிப்பு
அவபத்தியம் தள்ளுபடி செய்யவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் வாகடச் செய்யுட்களாக 23 உள்ளன (பக்கம் 7) பிறகு, வல்லாதி லேகியம், மேகநாதத்தயிலம், கருந்தும்பித் தயிலம், கிராணி கபாடம், மயிலெண்ணெய், தேங்காய்க் கடுகு, நீரழிவுக்குக் கலியாண கிர்த லேகியம், மேகாதித் தயிலம், மேக சஞ்சீவித்தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1521 சுவடி எண்: 758-b

## திரட்டு வாகடம்

ஏடுகள்: 37. (30-66). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 20½ × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கனமான அஞ்சுவித பூத னாதக்
கருவஞ்சும் செயம்ரசக் கல்ல தாச்சு
தினமான திருமூலன் மெழுகி னாலே
சிறந்தகல்லை நீக்கியதோர் குருவ தாச்சு.
இனமான கோடானு கோடி ரோகத்
தியல்பறிந்து பத்தியமில் லாமல்க் கொள்ள
அனுபானம் வெவ்வேறு யுரைப்போ மிந்த
அலைகடல்சூ ழுலகினுக்கோர் ராதி யாமே! 1

**முடிவு**

கத்திரிப் பிஞ்சு, துவரம் பருப்பு தவிர மத்தது ஆகாது
இதுக்கு தீரும் வியாதி: கால் கை பிடிப்பு
வெட்டைக் கிரந்தி, அரையாப்பு மேகம், குன்மம்
பாண்டு இது முதலான அநேக ரோகம் தீரும்.
கை கண்டது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கருங்கிரந்தியெண்ணை, கண்மாத்திரை, விஷப்பாண்டு, வீக்கம், கலியாண கிருத லேகியம், சகாதேவன் நூல்விபரம், விஷப்பாண்டு, பித்தபாண்டு, பித்த வெட்டைக்கு, சகல வாயுவுக்கும் தேங்காய் லேகியம், பெரும்புனலித் தயிலம், சித்திர வல்லாதி, ஆனந்தக் கலிப்பா, சுரத்துக்கு முதலியன உள்ளன.

வரிசை எண்: 1522 சுவடி எண்: 759

## அகத்தியர் வாகடம்

ஏடுகள்: 22. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7–8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $20\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

காப்பு

வாக்குண்டாம் ....................
.................... சார்வார் தமக்கு

நூல்

பலகடலுஞ் சொல்லு முமையாள் பங்கன்
பகர்ந்துரைத்த வாகடநூல் தமிழில் மாலையாய்—மோகமுடன்
கன்னிர்ப் பிணிகள் குணங்கட்டுரைத்தேன் ஆனைமுகன்
உன்னிற் கையாலே புகழ்ந்து.

முடிவு

பித்த வாத வெறியெடுத்தால்
பிரட்டைப் பேசு முடனறிவுஞ்
சுத்தத் துடனே நீறணியுஞ்
சொன்ன வார்த்தை யசத்துவிடும்
மெத்தச் சிவக்குங் கண்களெல்லாம்
விழிக்கு முறுக்கு மறிவுடனே
சத்துநோ ..............................
............................................ 120

காலம்

இல்லை

குறிப்பு

இதில், சத்த தாது, பஞ்ச கருவி, வியாதி யுற்பத்தி, வாத குணம், பித்தகுணம், வியாதி லெட்சணம், வாத சிலேஷ்ம குணம், மரணக் குறிப்பு, வாதகுணம், வாதகரப்பான் குணம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1523 சுவடி எண்: 760-a

# வைத்திய வாகடம்

ஏடுகள்: 119 (1 — 69, 94 — 114, 142 — 170) (69 + 21 + 29). சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $26\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

காப்பு

வாக்குண்டாம்..............................
......................சார்வார் தமக்கு

தண்டு புளவைக்கு

நிம்புர இலையைக் கொண்டுவந்து கசக்கி
செப்பு சட்டியில் சாத்தை பிளிந்து கொண்டு
திரும்பவும் தாம்புரத்தினாலே வுரைக்க கழும்பாகும்.
அந்தக் கழும்பை எடுத்து சீலையில் தடவிப்
புண்ணில் போட, புண் ஆறும்.

முடிவு

தொவரெண்ணை வய்க்கிறதுக்கு

வெம்பாடம்பட்டை, வெளிச்சிபிசின், கஸ்தூரி மஞ்சள்
கருஞ்சீரகம், பூத கரப்பான் (பட்டை), சுக்கு, வலம்புரிக்காய்
சித்திரமூலம், வெள்ள வெங்காயம் இவ்வளவும்
நல்லெண்ணை...... பண்ணிபோட்டு காச்சி
யெரக்கிக் கொண்டு புண்ணுக்குப் போடவும்.

காலம்

இல்லை

குறிப்பு

இதில், இடையிடையே ஏடுகள் இல்லை. இதில், காது கேளாத பேருக்கு, வயிறு வலிக்கு, ரசக்கட்டு முறியிரது, குளிருக்கு மாத்திரை, ஒருத்தலைவலி நோவுக்கு, ரத்தப் பெரும் பாட்டுக்கு, பெரும்பாட்டுக்கு, எலிக்கடிக்கு, நீரடைப்புக்கு, கிராணிக் கழிச்சலுக்கு, அமிர்த சஞ்சீவி, சுக்கிலபோகம் இல்லாமல் இருக்கிற பேருக்கு லேகியம், கண்ணில் சதை வளருகிறதுக்கு முதலியன உள்ளன.

வரிசை எண்: 1524 — சுவடி எண்: 760-b

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 26½ × 3 செ. மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

இருமலுக்கு

தூதுவளைப் பழம் கால்படி கொண்டுவந்து
கால்படி...யி...சட்டியில் விட்டு-அதில்
பழத்தைப் போட்டு...மா யெடுத்துக் கொண்டு

சாதிக்காய் விராகனெடை 2, சாதிப்பத்திரி, ஏலம்
விராகனெடை 2, கிராம்பு விராகனெடை 4
நச்சீரகம் விராகனெடை 2, சன்னலவங்கப்பட்டை
விராகனெடை 2, இந்த மருந்தெல்லாம் வெதுப்பிக்கொண்டு
பொடி பண்ணி

**முடிவு**

கத்தாளையும் அரிசியும் இடித்து களிகிண்டி
திங்கவும். குழந்தை பிறந்த வீட்டிலும்......
இந்தச் சாறு குடுக்கவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், இருமலுக்கு, மூலத்துக்கு, பீனிசத்துக்கு, மேகத்துக்கு, பவிந்திரத்துக்கு, ரசபற்பத்துக்கு, வயத்து வலிக்கு மருந்து, தாபாக்கினிச் சூரணம், குழந்தை பிணிக்கு மருந்து, குழந்தைகளுக்கு பேதிக்கு எண்ணை, கரப்பனுக்கு முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1525 சுவடி எண்: 761-a

# குணவாகடம்

ஏடுகள்: 144. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $36 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 6000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியங் கடவுளானை அடியினைத் தொழுது போற்றி
தீதுறு வியாதி தன்னைத் தெளிவுடன் அறிய வேண்டி
கோதிலா நல்லோர் பேசுங் குணமிகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே நெறியுட னுரைத்தார் மேலோர்

சந்தி காவல் பெருமாள் துணை
வயித்தியனார் துணை
× × × ×

பசிபிணி (தாகம்) அச்சம் பகையொடு படரும் துன்பம்
மிசைதரு கூறுமிருத்து யென்பா லுண்டு
மிசைதரு தோள்கள் இருபதும் ஆர்ப்ப வெள்ளி வெற்பை
வெகுண்டெடுத்த நிசிதரன் பொயிவின்உளன்...... நிருமலனே!

நூல்

சொன்னதோர் குணங்கள் தன்னைத்
தொகுத்துநீ யன்ப தாக
× × × × ×
மின்னமுங் குணங்கள் தன்னை
யிடம்பட வறிந்து சொல்லே!

## முடிவு

தாம்பூர மலையம் பச்சிலை கொண்டுவந்து
அரைச்சு ஒருவிரல் கனத்தில்
× × × × ×
அப்பரம் 4 தரம் வெள்ளைக் கருவிட்டு அரைச்சு
வில்லைதட்டி ரண்டு பிடம் போட்டு எடுத்துக்கொள்ளவும்
சுபம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் கெற்பரோகம், கெர்ப்ப சுரோணிதக் குணம், எரிகுன்மக்குணம், வாதத்தின் குணம், பித்தத்தின் குணம், சன்னி குணம், கண்டசன்னி குணம், நாடி சாத்திரம், தொந்திப்பு குணம், முதலியன உள்ளன.

20 வெற்றேடுகள் உள்ளன. தொடக்க முதல் 154 செய்யுட்களே யன்றி, பின்னர்த் தனித்தனி எண்கள் உள்ளன.

---

வரிசை எண்: 1526 சுவடி எண்: 761-b

# மூலம் ஆறுக்கும் குழம்பு

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 36 × 3½ செ. மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

மூலநோய் ஆறுந் தீர லேகியம்
முதமொகொனை ரண்டும் முதியபுளி கடலை
நறுநன்றி யோடு
செஞ்சித் ...... மாண்டை சாலவே தான்தோன்றி
மாலின கிழங்கெள்ளு சாறு திரிகடுகு.

**முடிவு**

கூட்டியே ஏழிலீன்றால் வருவது கன்ம லாபம்
மழைபடை யனுவறி கருதியே இழவின் றோலை
வருமென்று கனிந்து .........

**காலம்**

இல்லை

**குறிப்பு:**

இதில், மூல நோய்களுக்கான மருந்துகளும், சோதிடமும் உள்ளன.

வரிசை எண்: 1527 சுவடி எண்: 762

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 115. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 4–6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $29 \times 2\frac{1}{2}$ செ. மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

| | | |
|---|---|---|
| போட்டு மேல்தோலை மாத்திரம் விராகனெடை | | 19 |
| தான்றிக்காய் | ,, | 19 |
| நெல்லிப்பருப்பு | ,, | 19 |
| வாலுளுவை அரிசி | ,, | 22 |
| கையாந் தகரைப் பொடி | ,, | 62 |

**முடிவு**

வெட்டைக்கு

கிருஷ்ண துளசி சார் படி 1/16, நல்லெண்ணெய் படி 3/16, கலந்து கொடுக்கவும். மூன்று வேளை காலையில் கொடுத்து, உப்பு, புளி, இல்லாத கடும் பத்தியம். மஞ்சணத்தியிலை அரைத்து சிறுஎலுமிச்சங் காய் பிரமாணம் 3 நாள் காலையில் கொடுக்க தீரும்.
மேற்கண்டபடி பத்தியமில்லை, இச்சாபத்தியம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சகல வாய்வு, கட்டிக்கும், நீராமைக் கட்டிக்கும் மருந்து, சிங்கிபற்பம், தயிலம், நீரழிவுக்கு, ரசகுழம்பு, இளுவேலித்தயிலம், புங்கவேர்த் தயிலம், பச்சவாதம், பக்கவாதத்துக்கு மருந்து, பாசாணக் கட்டு, விஷ மை, லிங்கக் கட்டு, முதலியன உள்ளன.

வரிசை எண்: 1528 சுவடி எண்: 763

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 90. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 24 × $2\frac{1}{3}$ செ. மீ. கி.எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பாம்பு விஷக்கடி கங்கணம்

வெத்திலை தன்னில் கொடுக்க வுடன் மீண்டு
பல்லு கிட்டின மெய்யி நீரிலம் ......
......குளம்பு தன்னைக் கரைத்து வாயிலோ
......க விடமேயு முடன் பத்தியம்.

**முடிவு**

பச்சரிசி வெத்தியம் பண்ணி சறுவபதி கேட்டு
பற்பம் கை மீ ......திரும்பல முடையார்
திருவானைப் படியே ......யோயென்று வடக்கு
மூலையிலிருந்து ......உருச்செவிக்கவும்.
இதர்க்கு சக்கரம் .........

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், விடங்களுக்கு மருந்து, விழுதுக்கு, பிரிதிவி பொன்னிறம், அட்டகுன்மத்துக்கு அண்டவாதத்துக்கு, காசத்துக்கு, சேத்துமத்தின் குணம், எலிகடிக்கு, சருவ ஆக்ருஷணம் வினோத வித்தை, புல்லுருவி, முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1529 சுவடி எண் 764-a

# பஞ்சாங்கம்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 26 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஞாயிறு

| | | | |
|---|---|---|---|
| உத்தியோகம் | $3\frac{3}{4}$ | சுகம் | $3\frac{3}{4}$ |
| லாபம் | $3\frac{3}{4}$ | லாபம் | $3\frac{3}{4}$ |
| கலகம் | $3\frac{3}{4}$ | ரோகம் | $3\frac{3}{4}$ |
| அமுர்தம் | $3\frac{3}{4}$ | விஷம் | $3\frac{3}{4}$ |

**முடிவு**

சனிவாரம் ராத்திரி

| | | | |
|---|---|---|---|
| அமுர்தம் | $3\frac{3}{4}$ | லாபம் | $3\frac{3}{4}$ |
| கலகம் | $3\frac{3}{4}$ | தனம் | $3\frac{3}{4}$ |
| விஷம் | $3\frac{3}{4}$ | றோகம் | $3\frac{3}{4}$ |
| உத்தியோகம் | $3\frac{3}{4}$ | அமுற்தம் | $3\frac{3}{4}$ |

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, ஒவ்வொரு நாளும் பகல், இரவில் நல்ல நேரம் பார்க்க உதவுவது.

வரிசை எண்: 1530 சுவடி எண்: 764-b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 18. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5–6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 26 × 2 செ மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை(பலர்). முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாதத்துக்கு

சித்திரமூலம், மாவிலிங்கப்பட்டை, கொன்னைபட்டை,
முருங்கைப்பட்டை, வெள்ளறுகு, வேப்பம்பட்டை,
சுக்கு, திப்பிலி, மிளகு, யிந்துப்பு, வளசிலுப்பு, கல்லுப்பு,
பொட்டிலுப்பு, சீனியுப்பு, வகைக்குவகை, சமனாகக் கூட்டி,
யிடித்து வச்சிரகாயம் பண்ணி சாப்பிடவும்.

**முடிவு**

புவளபற்பம்

பவளம் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து
அலம்பி எடுத்து ஒரு கலசத்தில் முசல் ரெத்தம் விட்டு

× × × × ×

சட்டியில் வைத்து சீலைமண் செய்து
ஒருமுழப் புடமிடவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வாதத்துக்குத் தயிலம், பித்தத்துக்குத் தயிலம், குன்மத்துக்கு, வாதபித்த சிலேத்துமத்துக்கு, மேக வெட்டைக்கு மருந்து, சோகை, காமாலை, பாண்டுவுக்கு, கிரந்தி, குட்டம், தேமல், படர்தாமரை, கெர்ப்ப விப்புருதி, சகல வாயுவுக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண்: **1531** சுவடி எண் 764-C

# அகத்தியர் வைத்தியம்-16

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27 \times 2\frac{1}{2}$ செ மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

அரிதாரம் பிருதிவி யெஞ்சி நிற்கும்
மானதொரு சவ்வீரம் மப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயுவு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயுவு வாகும்
மரிதான லிங்கமா காச மாகும்
வரிந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யென்னூ லப்பா.

**முடிவு**

ஏத்திய சன்னி தோஷம்
　　பெழும்பிய குட்ட ரோகம்
பாத்திடில் பரங்கிச் சூலை
　　பலகடி முதலா யுள்ள
போத்திடில் தீரு மென்றே
　　பொகுப்புபோ விருந்து சொன்னார். 16

முற்றும்
குருபாதம் கெதி

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தாளகபற்பம், வீரச்சுன்னம், வெள்ளைப் பாஷாண பற்பம், காந்தச் செந்தூரம், லிங்கச் செந்தூரம், அரிதாரப் புகை, முதலான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1532　　　　சுவடி எண்: 764-d

# அகத்தியர் 200 சூத்திரம்

ஏடுகள்: 46. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

பூறணமாம் உள்மூலம் புகையில்ச் சூடாம்
　　புகையெழும்பி மேகமதாம் சிரசில்ச் சூடாம்
காரணமா நீர்கலந்து சன்னிரோகத்
　　தினலெடுத்த வாயுவினால்ச் சூலை ரோகம்
மாரணமா வாதத்தில் பெழுந்த ரோகம்
　　அதியதொரு பீதத்தால் கிராணி யாச்சுக்
காரணமாய் வாயுவினால்க் குணமாச்சு
　　சாந்தசெ லேட்டுமம் கூடிச் சயமதாமே ! 1

முடிவு

வன்னிக்கிம் யெறுக்கயிது பலம் -1.
மதுக்கரைபட்டை சமனாதூக்கி தூணிரதிலே
விட்டுக் காச்சிக் கொண்டு சம்பிரச்சாறு னாளி
யெண்ணை னாளி விட்டு துறுசு வெள்ளைக் குத்
திருக்கம் வகைக்கி களஞ்சி -கோளிரத்தம் விட்டு
கொப்புளிப்பாய். பல்லுக்கு வலு விட்டாகும்.

காலம்

இல்லை

குறிப்பு

ஓலைச்சுவடியில்இதில், 8–ஆவது ஏடு இல்லை. பாடல் 135க்குப்பின் உரைநடையில் மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. தாம்பிர பற்பம், சூதபற்பம் வெள்ளிப்பற்பம், தங்கபற்பம், பவள பற்பம், முதலான பற்பவகைகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1533 சுவடி எண்: 764-e

## வயித்தியம் - 205

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 2½ செ. மீ. கி. எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

பாஷாண பற்பம்

உறுதியாம் மிந்த னித்தில
னளிந்திடு நோய்க ளெல்லாம்
மறுதியாம் பாஷாணத்தின்
நீத்தினை அரையக் கேளு
சுறுதியா மண்டத் தோட்டைச்
சுன்னமா யூதிக் கொண்டு
பொறுதியாய்க் குகைபோலப் பண்ணிக்
கட்டியாய் பேண வையே. 1

முடிவு

கிட்டாதே போன தேதோ
கிடைத்தவர் குடுக்க மாட்டார்

கட்டாகத் தந்த பேர்கள்
காலினில் விளுந்து போற்றிச்
செட்டாக இருக்கவர்
திரவியம் செய்வதே
முட்டாளாய்ப் போகாமல்த்தான்
மனதுகூற் முறையாயி வாங்கே! 28

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது அக்த்தியர் நூலாதல் வேண்டும். 205 என்ற எண் தலைப்பில் இருந்தும் 28 என்ற பாடலுக்குமேல் இல்லை. இதில் ஆமை ஓடு, முத்துநீறு, கற்பூரச்சுன்னம் ஆகியவை உள்ளன.

வரிசை எண்: 1534 சுவடி எண்: 764-f

# திருமூலர் சுவாமி தூதுவளை

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27 \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து தமிழ். ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தூதுவளை

யியம்பக்கேள் தூதுவளை பலந்தான் பத்து
யியல்கண்டங் கத்திரிதான் பலம்(ந்தான் பத்து)
...................... பலந்தான் பத்து
நல்லதொரு தோடையது பலம்பத் தாகும்
சுயமான விஷ்ணு னூலி ......................
தூரதான பிரமியது பலம்பத் தாகும்
செயமாக யிடித்துயிரு தூணி னீரில்
திரமதிர மாகயெட்டொன்றா யிருத்து வாங்கே!

**முடிவு**

செம்பருத்திப் பூ-5 அரைத்து கலை கொம்பு உரைத்து
னறு தேத்தவிரை அளவு யெடுத்து யிரண்டையும்
பசுவின் பாலிலே ஏழு நாள் அந்தி சந்தி சாப்பிடவும்
பதினாலு னாளைக்கி பத்தியம். புளிப்பு ஆகாது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கெந்தகம், தாளகம், சாதிலிங்கம், வீரம், காரம், சாத்திரவேதி, பெரும்பாட்டுக்கு தூவாலை, மேகத்துக்கு, மேக வெட்டைக்கு முதலான மருந்து வகைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1535 சுவடி எண்: 764-g

# (வாதநூல்)

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 4–5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × $2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 90. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம். நன்றாக
மூலாதாரத் தொளியாய் வெளியாய் ருபாயி
முக்கோண வட்டமதிய முளைத்த தேவி
மேலான பாதமது போற்றி யேத்தி
மெய்ங்காண சித்திமுதல் வாதஞ் சொல்வேன்
ஆலால முண்டதொரு அய்யர் பாதம்
அழகான பார்பதித்தாயி அருளைப் பத்தி
சாலோக சாமீப சாருப(த்த)ான்
சாயுச்சியங் கடந்தபதந் தான் காப்பு. 1

**முடிவு**

கேளப்பா சாதிக்காய் பலந்தா னொன்று
கெடியான யேலமது பலந்தா னொன்று
வாளப்பா வால்முளகு பலந்தா னொன்று
வகையான லவங்கப்பூ பலந்தா னொன்று
கேளப்பா சீரகந்தான் பலந்தான் அஞ்சு
சுத்திரமான கொடிவேலிப் பலந்தான் ரெண்டு
னாளப்பா கோஷ்ட்டமது பலந்தான் ரெண்டு
நலமான அதிமதுரம் பல

**காலம்**

இல்லை

## குறிப்பு

இதில், வாதத்துக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1536 சுவடி எண்: 764-h

# ரோமரிஷி சூத்திரம் - 25

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × $2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஹரி: ஓம் நன்றாக
ஓம் மூல தந்திமுகன் சரண முகந் தொளுது
ஓம் மூல நந்திகுரு கரசரணம் யான் தொளுது
தாமூலப் பராபரை சரசோதி யெந்தன் வாக்கில் நின்று
யேமூல சூத்திரங் காப்புத் தொளுதிறஞ்சு வோற்கே.

## முடிவு

அஞ்சான நந்தீச ரென்றனக்கு யருளினா
ரென்மகனே ரோமரிஷி யென்று
கஞ்சமலர்த் திருப்புயனே சுருபானந்தா
கடாட்சித்தா ருந்தனக்கு யானுஞ் சொன்னேன்
வஞ்சகமாய்த் திரியாதே குருவை விட்டு
வானமென்ற பொறிவெந்து நீறிப் போவாய்
தஞ்சமென வந்தடைந்து சரணம் போற்றத்
தயவுசெய்வார் சூத்திரந்தான் முடிவு முற்றே! 25

சிவமயம்
சரவண குரு வாழ்க
பெரியனாயகி

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வாதம் முதலான நோய்களுக்கு மருந்து கூறப்பட்டுளது. 'குருவைப் போற்றவேண்டும்' என்றும், 'குருசொன்ன இந்த நூலை யாருக்கும் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் வாத்தென்ற நரகத்தில் வீழ்வாய்' என்றும் நூலின் அருமை பேசப் பட்டுள்ளது.

---

**வரிசை எண்: 1537** **சுவடி எண்: 764-i**

# கருவூரார் பலகலை சூத்திரம்

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × $2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 450. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

சீர்பெருகு வேதாந்த சூத்தி ரத்தைத்
தெட்சணா மூர்த்திபதம் பணிந்து போத்தி
கார்பெருகு மாயிஉட பாதம் போற்றி
கயிலாசத் திருமூலர் பாதம் போத்தி
பேர்பெருகு சட்டைமுனி போகர்ன் னாயன்
பேரின்ப கோரக்கர் பதஞ்சலியுங் காப்பு
ஓர்பெருகு அருளொடு பொருளும் கூட்டி
யென்மகனே உத்தமர்க்காம் மிந்த னூலே! 1

**முடிவு**

சேரென்ன யிறும்பிய்ய முறையை மைந்தா
செப்பினேன் வகையாகத் துரந்து தானே
பாரென்ன கல்னாறுங் கீழ்க்காய் நெல்லிவேரும்
மைந்தனே சம்பளத்தா லரைத்துக் கொண்டு
பேரென்று சல்லியிலே பிசரி தன்னா
விதமாக வுருக்கிடவே யிய்ய மாகும்
பார்த்திடவே யின்னமுன்று அயத்தி லியம்
பார்முறையைத் தவறாமல் சொல்லு றேனே! 75

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், குளிகை, குருபகுளி, மலிகுளி, அஞ்சனம் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1538 சுவடி எண்: 764-j

# ரோமரிஷி - 51

ஏடுகள்: 13.(7-19). சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நெத்தியிலே யிரண்டும் வைத்துச்
சேரப்பா சுழினையிலே ஒன்றாக் கூட்டி
திரும்பிவிடு பூரகத்தில் அஞ்சுஞ் சேரே! 11

**முடிவு**

வாழ்ந்ததொரு ரோமர்சொன்ன அன்பத் தொன்றும்
வகையோடே படித்தவர்கள் யோகியாவார்
ஆழ்ந்ததொரு ரிஷியாவார் சித்த ராவார்
அழகான ஞானியும் யீச னாவார்!
போழ்ந்ததொரு மாணாக்கன் சொன்ன னூலைப் புகழ்ந்து
பொதிகையிமேல் தமிழ் முனிவன் திருந்திக் கொலாடு
யேழ்ந்ததொரு உலகுக்கு வேணு மென்று
யியம்பினால் அன்பத்தி ஒன்று முற்று.

குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முதல் 6 ஏடுகள் இல்லாததால் தலைப்பு தெரியவில்லை. ஆயினும், இறுதிப்பாடல் கொண்டு தலைப்பு கொடுக்கப்பட்டது.

இதில், ரேசக பூரக கும்பகம் முதலியனவும், இடகலை, பிங்கலை, சுழிமுனை முதலான யோக மார்க்கங்களும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1539 சுவடி எண்: 765-a

# அகத்தியர் வயித்திய பூரணம் - 400

ஏடுகள்: 63 (11,13,14,17,18 ஆகிய ஏடுகள் இல்லை). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 2200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றிப்
புகழ்பெரிய வயித்தியபூ ரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருவுருவாய் யெங்குந் தானாய்க்
கண்மணியி னடுவான கருணை தன்னை
யாரணமா முக்கோணத் தடிநடுவில் நின்ற
வம்பரத்தை யனுதினமு மறிவால் போற்றி
வாரணமா முகத்தோனை யனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே! 1

**முடிவு**

முற்றான புலத்தியமா ரிஷியே அய்யா
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்தியபூ ரணமி தப்பா
தேசத்தில் கிட்டாது திரமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தியாகும்
வித்தான பிறவியதும் ஞான சித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முற்றே. 400

அகத்தீஸ்பர நாயனா ரருளிச் செய்த
வயித்திய பூரணம் நானூறும்
எழுதி முகிந்தது.
முற்றும்

**காலம்**

1859-ஆம் வருஷம், ஆகஸ்ட்டு மாதம் 8-ஆம் தேதி சித்தார்த்தி வருஷம் ஆடி மாதம் 25-ஆம் தேதி திங்கள் கிழமை.

**குறிப்பு**

இதில் திசை வாயுவின் பேர், குருநாடி, வசியம், ஆகிருஷணம், சவ்வீர வைப்பு, பச்சைக் கற்பூரம், வாலைரசக் குளிகை முதலான தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1540 சுவடி எண்: 765-b

## அகத்திய முனி கரிசல் – 300

ஏடுகள்: 13. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-7 வரிகள். பொருள்: வைத்தியம். அளவு: 40 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 350. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**கடவுள் வணக்கம்**

பூறண மலைமக் ளருள்பு தல்வன்
காரண மாமதக் கரியடி பணிவாம்

**அருளுரை வணக்கம்**

ஞானகுல சமர்வேல் பிறகிடயில்
........ரை னருமுகனிணையடி பணிவாம்.

**முடிவு**

காடாக்கினி சாப்பசமதியமாய்
ஒரு சாமம் யெடுக்க ரசந்தூவி வய்த்துக் கொள்ளவும்
ஆடாதோடை கண்டங்கத்திரி தூதுவளை சுரசம்
திரிகடுகு பொடி தேனில் செந்தலை
அப்படிக்கி குடுக்க காசல் வகையறாக்களுக்கு.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

எழுத்துக்கள் தெளிவில்லை: இதில் பாதரச பற்பம், கிராணி உப்பு, மூலக் கிராணிக்கு, சூதக வாயுவுக்கு ஈளை இருமல் இளைப்பு, காசங்களுக்கு, மஞ்சள் காமாலைக்கு, பாண்டுக்கு, வெட்டைக்கு குன்மத்துக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

இது, எமது சுவடி 1397/704 போன்றது.

வரிசை எண்: 1541 சுவடி எண்; 766-a

# அகத்தியர் - 55

ஏடுகள்: 14. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $22 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

....................ல் வாழும்
பரமனா ரருளினாலும்
பெருமையாயுலகில் வாழும்
புண்ணிய ..........ங்களுக்கு

உருமையாய் வியாதி வந்தால்
உண்மையாய்த் தீருமென்றும்
பெருமை சொல்............... முனிவன் றானும்
பேசிய மருந்து கேளே! 1

**முடிவு**

செய்யவே அனுப்பானங்கள்
திரமா யறிந்து வயித்திய
செய்யும் படியே பிணி கண்டு
உரிதிப் படவே தெரிந்து
செய்ய...... னறிந்து நோய் தீரும்
மறுனசேர் முனிவன் சொன்ன
மொழிய யென்று குழம்பு தன்னை
மேதினி யோர்க்கு மருந்து செய்யே! 55

சுப்பிரமணியர் துணை
அனுமார் துணை

(இதன் பின்னர்:
''................ னநறிதில் அந்தக்கிளமை..................
தானியம் போடமிக நன்றே!'' என்ற பாடல் உள்ளது).

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தலைப்பகுதி, பழுது பட்டுள்ளதால், தலைப்பு, மருந்து வகைகள் அறியக் கூடவில்லை. ஆயினும், வெள்ளுள்ளித் தயிலம், கொத்தமல்லிக் குடிநீர், சூலை பதினெட்டுக்கும் மருந்து, விஷத்துக்கு மருந்து முதலியன சொல்லப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1542 சுவடி எண்: 766-b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 6–8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 22×3½ செ. மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சூதகவலிக்.........மருந்து

பசுவின் பால் படி 4
வெறுக்கும்பூ மொட்டு ஒரு குத்து
கொண்டு வந்து ஷெ பாலில் போட்டு
வேக வைத்து குளம்பானதின் பேரில்
திரும்பவும் ஷெ கொளம்பில் பெருங்காயம்

**முடிவு**

சூடனில் முத்துச் சிப்பியின் சுண்ணஞ்சேர்
நாடு மிணங்கினில் நற்சீனஞ்...... ..... சாரத்திட
வீடும் விளக்கும் வேந்தனுமாயி
நீடும் சோடச மார்க்கத் துரைப்பேர்க் கேளே.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், அண்டவாயு, தெரட்சி, சித்திர மூல எண்ணெய், மாலைக்கண் தீர மருந்து, சோகை, பாண்டு, க்ஷயம், வாயுவுக்கு மருந்து, வாத சுரம் 32, பித்த சுரம் 29, சிலேட்டும சுரம் 11, துருசுச் சுன்னம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1543 சுவடி எண்: 766-C

# சட்டை முனியார் நிகண்டு - சொர்ச்சம்

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 4-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி:ஓம்

நாடுண்ணாக் கோபம் நல்லி மகறப்பம்
பாடுண்ணு மாடுண்ணாப் பாளையின் பேரே! 1

**முடிவு**

ஷெ செம்பை சீதம் 10-ல் செம்பு விராகனெடை-1
கொடுத்துருக்க வயது 5 ஆகும். அறியவும்.

தருமந்திரி சொன்ன சாஸ்த்திரத்தில் சொன்னது
பரிசோதிக்க வேணும். அது சரியாயிருக்கும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் தலைப்பகுதி பழுதுபட்டுள்ளது. வெற்றிலை, கெருடக்கிழங்கு, திப்பிலி மூலம், மருதோன்றி, பிரண்டை, சத்திச்சாரணை முதலான மருந்துப் பொருள்களின் வெவ்வேறு பெயர்கள் நிகண்டாகக் கூறப்பட்டுள்ளன. மருத்துவர்கட்கு மிகவும் பயன் படக்கூடிய நூல்.

வரிசை எண்: 1544 சுவடி எண்: 766-d

# சர நூல் (அறியும்படி)

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 5-8 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை 30. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அசுபதி 8 நாளையில் விடும்
பரணி கொல்லும்
கார்த்திகை 5 நாளையில் விடும்
விடாதாகில் மரணம்
ரோகிணி 8 நாளையில் விடா திருந்தால்
18 நாளையில் விடும்

**முடிவு**

உத்திரட்டாதியில் 8 நாளையில் விடும்
ரேவதி 8 நாளையில் கொல்லாதானால்
10 நாளையில் விடும்
சரனூல் அறியும்படி
தெட்சணாமூர்த்தி சகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் இன்ன நட்சத்திரத்தில் சுரம் வந்தால் இத்தனை நாளையில் தீரும். அல்லது மரணம் சம்பவிக்கும் என்று கூறப்பட்டுளது.

பின்பக்கத்தில்: தாது எழும்ப மருந்து கூறப்பட்டுளது.

வரிசை எண்: 1545 சுவடி எண்: 766-e

# கெவுளி காதல் (அறிதல்)

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6 - 7 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சனிவாரம் பகல்-30 நாழிகைக்கி உள்ளாக
கெவுளி சொல்லுகிற திக்கு பலன்

கிழக்கு-இந்திரன்திக்கு-செய்யும் தொழிலாகாது
நெறுப்பு திருடரினாலும் பயமும் தன தானிய நட்டமும்

**முடிவு**

வடக்கு - பயமில்(லை பய)ணம் தடையாகும்
பகை(வன்) வருவான்.
வடகிழக்கு.........தொழிலாகாது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பல்வி சொல்லுக்குப்பலன் கூறப்பட்டுளது.

வரிசை எண்: 1546 சுவடி எண்: 766-f

# பட்சி சாத்திரம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை 25. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வல்லூறு

பூற்வ பட்சத்துக்கு அமரபட்சத்துக்கு
வியாழக்கிழமை சனிக்கிழமை தள்ளுபடி

**கோழிபடு பட்சி**

செஷ்.........க்கு பூறுவபட்சம்
செவ்வாய் தள்ளுபடி

**முடிவு**

ஆந்தை நடை $1\frac{1}{2}$
ராத்திரி 7. கோழி ஊண் $1\frac{1}{4}$
2-காலை தூக்கம் $\frac{3}{4}$
இ-ஆந்தை நடை $1\frac{1}{2}$
அ. வல்லூறு மரணம் $\frac{1}{2}$
ஓ. மயில் அரசு—2

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஐந்து பறவைகளைக் கொண்டு கணிக்கப்பட்ட சோதிடம் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1547 சுவடி எண்: 766-g

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

**ஷர்பத்து**

**ரோசாப்பூ தாமரைப்பூ வல்லரை ஷர்பத்து**

பதினெட்டு ரூபாயிடை காய்ந்த ரோசாப் பூவை
அரையே வீசம் படி வென்னீரில் - 12 மணி
நேரம் வரை ஊறவைத்து வடிகட்டி காலே அரைக்கால்
படியாய் வற்ற வைத்து அரைப்பலப் பனிநீரும்
180 ரூபாயிடை சீனியுங்கலந்து.

**முடிவு**

வெடிப்பு, உதடு வெளுப்பு, நாக்குக் கொப்பளம், பல்லே யிருகட்டி சீ வடிதல், வாய் நாற்றம், வாய் கிரந்தி தீரும்.

அறியவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் ரோஜாப்பூ சர்பத்தினால் நீர்க்கட்டு, மலக்கட்டு நீங்கும் தாமரை சர்பத், வல்லாரை சர்பத்தினால் மேக காங்கை தீரும். மற்றும் திராட்சைப்பழ சர்பத் முதலானவை கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1548

வரிசை எண்: 766-h

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 88. சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கல்லடைப்புக்கு

மணலி யிலையை யிடித்துச் சாறு வடித்துக் கொண்டு
குறுக காய்ச்சி யிறக்கி கொஞ்சம் நல்லெண்ணெய்
குத்தி மாடப்பிறாவின் எச்சம் முணுக்கிப் பொடி செய்து.

**முடிவு**

மாயிப் பகர்ந்தோடிப் போகும் தானே
நாட்டப்பா ரெணத்தின் ......லத்தைத் தோய்த்துவிட
ஆறிவிடும் ரெணங்கள் தானே!.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், விஷத்துக்கு, சகல வாயு, கிராணி, களிச்சலுக்கு, பிள்ளை பிறக் கிறத்துக்கு, சன்னி வலிப்புக்கு, ஆக்கிறாணம், நயனவிதி, நயன ரோக விபரம், முளை மூலம், மூல ரோகம் முதலான பல நோய்கட்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1549 சுவடி எண்: 767-அ

## அகத்தியர் - 360

ஏடுகள்: 1. சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு 7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32 × 3 செ மீ. கி.எண்ணிக்கை: 15. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

பூரணமாய் நிறைந்த திரிபரைதாள் போற்றி
புகலுகிறேன் வைத்தியரே சுருக்கந் தன்னை

**முடிவு**

வாதத்தில் பித்தமாகில் வாயது குளறிப் பேசும்
.........தித்தங் குருங்காளில் வீக்கம்
பெருக்கன மண்டாம் தாதுத்தறத்தி தானும்
தடைபடும் தடங்க.......................

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதன் தொடர் ஏடுகள் அடுத்த பகுதியில் கலந்துள்ளன. தலைப்பகுதி பழுது பட்டிருப்பதால் ஏட்டின் எண்ணிக்கை அறியக்கூடவில்லை.

வரிசை எண்: 1550 சுவடி எண்: 767-b

# ரோமரிஷி பாடல்

ஏடுகள்: 88. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-8வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×3 செ. மீ. கி.எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நீதமுடன் ரோமரிஷி பூத லத்தில்
நெறிகெட்ட மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானம் செய்து
கார்மேக நிறமுடைய தயிலப் போக்கு
ஆதறவாய் மருந்துவகை சொல்லக் கேளு
அப்பனே நிலவாகை சிவனார் வேம்பு
போகமுடன் விராலியுட மூலந் தானும்
புகழ்பெறவே கொண்டுவந்து உலத்திக் கொள்ளே! 1

**முடிவு**

கேளப்பா வந்திசந்தி யேழு நாளும்
கிருபையுடன் தான்முழுங்கிப் பத்தியமே காக்க
பாளப்பா வுப்புடனே புளிப்பா காது
பாங்காக வொருவேளை பசுவு பால் கூட்டு
நாளப்பா வேழுநாள் சென்ற பின்பு
நன்மையுடன் வருத்தவுப்புத் துவரை கூட்டு
கோளப்பா பேதினைந்த ........

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பலவிதமான நூல்களின் ஏடுகள் கலந்துள்ளன. தலைப்பகுதி பழுதுபட்டிப்பதால் தொடர்ச்சி காண இயலவில்லை.

வரிசை எண்: 1551 சுவடி எண் 768-a

# அகத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 42. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6–7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 37 × 3செ.மீ. கி.எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

.........உயிர் ஒதிங்கி அமுர்தத் தொதிங்கி
திரும்பாமல் இரவும் பகலும் ..............
........ாரம், வசம்பு, துருசு கெந்தி கடுகு சன்னி
நேர்வாளம் தாபம் சுரபம் இரதம் பெருங்க.........................

## முடிவு

முள்கவே அரிதாரம் பற்பம் சொல்வேன்
முனையான அரிதாரம் பலந்தா னொன்று
............சுன்னம் படிதா னொன்று
தேசிநீர் படிரெண்டு செப்பக் கேளு
............................................................ (-251)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஏட்டின் தலைப்பகுதி பழுதுபட்டிருப்பதால் தலைப்புகள், மருந்துகள் அறிய முடியவில்லை.

வரிசை எண்: 1552 சுவடி எண்: 768-b

# வைத்தியம்

ஏடுகள்: 10. (24-33). சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 30 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 160. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

............................ யால் மாளும்
காரப்பா வுருக்கதுவும் லிங்கத்தால் மாளும்
கடிகெந்தி தாம்புரத்தைக் கவ்வுந் தானே. 118

**முடிவு**

பாரப்பா வாமணக்குப் பருப்புத் தானும்
பருளுசுக்கு நொச்சியிலை தேவ தாரம்
நேரப்பா தூளாக்கி யதற்கு நேராய்
நிறுத்திடுவாய் சுத்தி செய்த குக்குல்ச் சொத்து
ஆரப்பா நெய்விட்டு ஆட்டிக் கொண்டு
அனுப்பானச் சாறுகளில் அறிந்து ஆட்டு
பேரப்பா வாதத்தைப் பிடுங்கித் தின்னும்
புகழான வயிரவன்றன் போக்குத் தானே! 164

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முன் 23 ஏடுகள் இல்லை. 33-க்குப் பின்னரும் இல்லாததால் இது இன்ன நூல் என்று அறியக்கூடவில்லை. எழுத்துக்கள் அழகாக எழுதப்பட்டுள்ளன. ஏடுகள் தலைதடுமாற்றமாகவும் உள்ளன.

வரிசை எண்: 1553 சுவடி எண்: 768-C

# அகத்தியர் - 205

ஏடுகள்: 34. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு 39 × 3 செ. மீ. கி. எண்ணிக்கை: 600 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணமா முள்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதால் சிரசில் சூடாம்
காரணமா நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவினால் சூலை ரோகம்

மாரணமாம் வாதத்தி லெழுந்த ரோகம்
மதியதொரு பித்தத்தில் கிராணி யாச்சு
தாரணமாம் வாயுவினால் குன்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனம்கூடில் சயம தாமே!

**முடிவு**

யீவதிந்த னூல்துசைதா னிருநூத் தஞ்சு
யிகத்திலுள்ளோர் பிழைக்கவென்று யிரங்கிச் சொன்னோம்
தாயிருந்த பிள்ளைக்குத் தகப்ப நில்லாத்
தன்மைபோ லின்னூலைச் சாத்தி னேனான்
நோய்மிகுந்து சாவில்லை ஒருநா ளுந்தான்
னுன்னிமையாய்ச் சறக்கையெல்லாம் நீத்திக் கொண்டு
வாயமுட னே யெண்ணையொடு கிற்தஞ் செய்து
வைத்திடுவாய் அனுப்பானம் வயிற்றிய முற்றே. 203

குரு பாதமே கெதி
அகத்தியனாயகம் அருளிச் செய்த இருநூத்தஞ்சு
எழுதி முடிந்தது
முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 525/294-h போன்றது.

வரிசை எண்: 1554 சுவடி எண்: 768-d

# அகத்தியர் - 150

ஏடுகள்: 13. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7–9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 41×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 450. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சகல சூட்சமும் உபையம்
திருவளரும் தென்பொதிகை தன்னில் வாழும்
தெட்சணா மூர்த்தியுடன் சீஷ னாகும்

குறுமுனிவர் பால ..............................

கூறுகிறேன் வைத்தியசூத் திரத்தை யானும்

பறுவமுடன் நென்ந்தந்தை பாடல் தோய்ந்து

பண்பான நாதாக்கள் பாதம் (போற்றி)

..................மண்தோய்ந்து பலநூல் பார்த்த

உத்தமர்க்கு வயித்தியத்தைச் சொல்லு ரேனே! 1

**முடிவு**

யெடுத்தொரு பனந்தான் தூக்கி

யிடுகுறி கடுகு தூணில

அடுத்தநா ளிருப துண்ண

அஷ்ட்டகா சங்க ளீளை

துடிதமந் தார காசம்

சுவாசகா சங்கள் பாண்டு

விடுத்ததோர் காதம் போகும்

அறுள்முனி விளம்பி னாரே. 102

பாட்டு முத்தும்

குருவே துணை

**காலம்**

ஆவணி மாதம் 2-தேதி

**குறிப்பு**

இதில் 150 பாடல்கள் இல்லை. இதில், வெள்ளீய பற்பம், வெண்கல பற்பம், பித்தளை பற்பம், காரீய பற்பம், காந்த பற்பம், நாக செந்தூரம், மிறுதார் சிங்கி பற்பம், அரிதார பற்பம், சூதபற்பம், பவளபற்பம், சுயமக்கினி, மண்டூர செந்தூரம் முதலியன பேசப்பட்டுள்ளன. முதலேட்டின் பிற்பகுதி ஒடிந்துள்ளது.

---

வரிசை எண்: 1555

சுவடி எண்: 768-இ

# அகத்தியர் - 50

ஏடுகள்: 4. (4—7). சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 41 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

DC-688



**தொடக்கம்**

நிலையான வாதமது கிட்டிப் போச்சே — 25

போச்சென்று யெண்ணாதே மகிழ்ந்தி டாதே
பூசைக்கும் பெரியோர்க்கும் பரதே சிக்குமீவாய்
மோச்சமென்ற சுழிமுனையிற் கன்னாட்டம் பாரு
முனையான தாள்திறந்து பிரகா சிக்கும்

**முடிவு**

கண்டாக்கால் வாதமெல்லாம் மடிகீழ்ப் போத்தும்.
கறுவான சறுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கு டாதே
வேதாந்த ஞானியென்றால் லீயான் பாரு
தொண்டுசெய்வாய் பதினாறு வருஷம் காத்து
சோதித்துப் பின்புமவர்க் கீவா யப்பா
சண்டமா ருதம்போலே வெளிய தாக
சாற்றினதோர் வயித்தியமன் பதுந்தான் முத்தே! 50

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முதல் 25 பாடல்கள் இல்லை. இது எமது சுவடி எண் 1425/730-b போன்றது.

---

வரிசை எண்: 1556

சுவடி எண்: 768-f

# அகத்தியர்—205

ஏடுகள்: 22. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 41 × 3 செ மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

குரு முன்னிற்க

பூரணமா முண்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாம் சிரசிற் சூடாம்
காரணமா நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவினால்ச் சூலை ரோகம்

**முடிவு**

நோய்மிகுந்து சாவில்லை ஒருநா ளுந்தான்
நுன்னிமையாய்ச் சரக்கையெல்லாம் நீத்திக் கொண்டு
வாய்முடனே யெண்ணையொடு கிற்தஞ் செய்து
வயித்திடுவா யனுப்பானம் வயித்திய முற்றே! 203
குருபாதமே கெதி
அகத்தியனாயகர் அருளிச்செய்த
இருநூத்தஞ்சு எழுதி முடிந்தது
முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 1006/453 போன்றது. முன்னுள்ள/1553/768-cயும் போன்றது.

---

வரிசை எண்: 1557 சுவடி எண்: 768-g

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6–10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 41×3 செ. மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அன்னைத் தயவும் அடியாள் பணிவிடையும்
பொன்னத் தளதம்பு வீறுரையும் - வன்னமயில்
................ ................ ............ மதியும்
பேசு மிவையுடையாள் பெண்.

காரீயசுத்தி

காரீயத்தைத் தகடுபண்ணி எலம்பிச்சம்
பழச்சாத்திலொருநா ளூரப்போட்டு

**முடிவு**

வல்லாறைச் சாறு படி 2. சீந்தித் தண்டு சாறு படி 5
நெய் படி -1 இதில் திறிபாலை திரிகடுகு
சீரகம் கிறாம்பு தாளிசை ........................

**காலம்**

இல்லை

**குறிப்பு**

ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் உள்ளன. இதில், காரீய சுத்தி, வங்க சுத்தி, நாக சுத்தி' வெள்ளி சுத்தி, பச்சை நாபி சுத்தி, கெந்தக சுத்தி, பரங்கிப்பட்டை ரசாயனம், இதற்குத் தயிலம், வாயுவுக்கு மேனிச்சூரணம், ஓரிலைத் தாமரைச் சூரணம், பச்சிலைக்கு சாபம் நிவிர்த்தி, வெள்ளருகு நெய் முதலியன உள்ளன. ஏடுகளின் தலைப்பகுதி முறிந்துள்ளன.

வரிசை எண்: 1558 சுவடி எண்: 769

# தாம்பிர பற்பம் செய்யும் முறை

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 52×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தாம்பிர பஸ்ப்பம் செய்யு முறை

நயமாய் உள்ள (காலணா) தேள்ளவயானதை
லேசாகத் தட்டி நெருப்பில் சிவக்க காச்சி
காசு மேலிருக்கும் களிம்புகளைத் தட்டி விட வேண்டியது

**முடிவு**

பசுவம் நெய்யை விட்டு கிண்டி பணங்கல்கண்டு
போட்டு கிண்டி உடனே அடுப்பை விட்டு இரக்கி
லேகியத்தை யெடுத்து டப்பியில் வைத்துக் கொண்டு
காலை மாலை கலர்ச்சிக்காய் பிரமானம் சாப்பிட

காசம், புகசல், யிருமல் நீங்கும். பத்தியம்:
கடுகு நல்ல யெண்ணை கரப்பான் வஸ்த்து
தள்ளுபடி. யிச்சா பத்தியம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

ஷ தாமிர பற்பம் எல்லா வியாதிகளையும் நீக்கும் என்று எழுதப்பட்டுளது.

வரிசை எண்: 1559 சுவடி எண்: 770-a

# கருவூரர் பூசை

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: பூசாவிதி. அளவு: 13 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ் ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கேளப்பா அஷ்ட்ட தளாரை யெட்டா...............
நடுமய்ய மரையொன்றாகும்
ஆளப்..................................லச்சேறத்து
ஆகாச ரெசத்தை ந ..........கு
கோளப்பா ரோகணியின் முன்..........................
மனோமணியைக் குடியிருத்தி

**முடிவு**

பராபரனு பாயுமங்கே பச்சமாகும் மூசை வயித்தம்..................
ஞ் சித்தியாகும் மூச்சடங்கும் பேச்சடங்கும் முத்தனாமே... (10)

சற்குரு பாதந்துணை
கருவூரர் சுவாமி பூசை.................
தேவி சகாயம்
சிவமயம் வா.......................

**காலம்**

இல்லை

**குறிப்பு**

முதலேட்டின் முன் பகுதியும், எல்லா ஏடுகளின் பின் பகுதியும் பழுதுபட்டுள்ளன. இது கருவூரார் பூசா விதி என்ற நூலின் வேறாயது. இதில் மனோன்மணி பூசை முறையும் பலனும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1560 சுவடி எண்: 770-b

# ரோமரிஷி சூத்திரம் - 25

ஏடுகள்: 12 சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17 × 2½ செ.மீ கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஓம் மூலத்து நந்தி முகவன் சரணம் மிகத்தொழுது
ஆமூலத்தின் நந்தி சரணம் சரணம் யான் தொழுது
ஓம் மூலப் பராபரையை யெந்தன் வாக்கில் நின்று
ஓம் மூல சூஸ்த்திரங் காப்புத் தொழுவார்க்கே. 1

**முடிவு**

அஞ்சான நந்தீ ...............னுக்கு
யருளான யென் மகனே ரோமரிஷியென்று
............ லத் திருப்புயனே சுருபானந்தா
கடாட்சித்தார் யெந்தனு ......... சொன்னேன்
வஞ்சகமாய்த் திரியாதே குருவை விட்டு
வானமெ ......... வந்து நீறிப் போவாய்
தஞ்சமென்று வந்தடைந்து சரணா ............
......வு செய்வாய் சூத்திரத்தின் முடிவு முத்து. 26

சூத்திரம் குருபாத கெதி வேணும்.
திருச்சங் கோட்டு..................
சய சப சப சன சயெசஞ் சதி சனத்து சமுச் சசது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 373/228-g போன்றது. பாடவேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் 1561. சுவடி எண் 770-c

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 13. (13-24) சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17 × 2½ செ. மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

............... அமுறி விட்டுப் பிசந்து
அதுக்குள் உப்பு கூட்டி கட்டியாய்
.........ஆ மந்தப் பூனீறுப் பிசந்து மூடி
மேல் ஒரு ...........சீலை மண் செ......

முடிவு

எரிக்கின் பாலில் போட்டு கழிவி சூதம்
விராகனிடை ரெண்டு பாஷாணமும் சூதமும் போட்டுப்
பொடி செய்து வெள்ளீயக் கிண்ணி இல் வாரிடி
மூணு சீலைமண்ஞ் செய்துக் கோழிப் பிடமிடவும்
சுண்ணமாகும்.

கன்னியப்பன் செல்லமுத்து வித்திலே.

காலம்

இல்லை

குறிப்பு

இதில், பாஷாணக்கட்டு, வெள்வங்கக் களங்கு, மிருதார்சிங்கி களங்கு, வெள்ளைப் பாஷாண களங்கு செய்யும் முறை, னாகக் களங்கு செய்கிற முறை, ரசபற்பம், பாஷாணச் சுண்ணம், முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1562 சுவடி எண்: 770-d

# சுந்தரானந்தர் ஆனந்தக் களிப்பு

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $17 \times 2\frac{1}{2}$ செ. மீ. கி. எண்ணிக்கை: 40. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

காரத்தின் சாரத்தி னோடே
கடுங்கா ரத்தை நாகத்தை
ஆரத்தை வீரத்து ளாக்கி
அருளான சோதியை அப்பினி லேத்தி
தாரத்தைத் தங்கம தாக்கும் அந்தச்
சனனை அறியாமல்ப் பொன்னுக்கு வீங்கி
வாரத்தை எண்ணித் தவிக்கு மட
வாதிகளாய் கண்டாயோ தோழி.

இதுக்கு வயணம். படிக்காரம் பலம் -10.

**முடிவு**

அரைத்து ஒரு பிடமிடவும் செந்தூரமாகும்.
இந்தச் செந்தூரம் கல்வத்தில் போட்டு தேவையான சூதம் விட்டு
பொயித்திலை சாறு விட்டு அரைக்கவும். மணியாம்.
இது புடமிடவும் தங்கமாம்

குருபாதமே துணை. வேணும்.
வாலை சுப்பிரமணிய சுவாமி துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு:**

இதில், ரசவாதம் (தங்கம்) செய்முறை கூறப்பட்டுள்ளது.

---

**வரிசை எண்: 1563** **சுவடி எண்: 770-e**

# வைத்தியம்

ஏடுகள்: 12. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம் - மாந்திரீகம். அளவு: 17 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கெவுரி பலம் ஒன்னுக்கு செங்கீரைச் சாறு
ஒருபடி சுருக்குக் குடுத்து எடுத்து ஓட்டிலிட்டு
அரைப்பலம் படிக்காரம் பொடித்து வெதுப்பி
பிரட்டி கவசம் குடுத்து எடுத்து

**முடிவு**

கெந்தன மாத்திரை சோமிசம்விவ
தட்டியிலே கூடினது குதெந்திரியம்
ஆகக் கெந்ததன மாத்திரை 5- ம்
ஒன்றும் கன மெத்தி
(இதன்பின்னர் ஒரு சிறு துண்டு ஏடு உள்ளது)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மருத்துவத்துடன் மாந்திரீகம் உள்ளது. சர்ப்பம் தம்பிக்க மந்திரங்கள் சக்கரங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

---

**வரிசை எண்:** 1564 **சுவடி எண்:** 771-a

# கூர்மானந்தர் குரு முறை

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6–8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 12 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கூர்மானந்தர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பாடினேன் குருவினுப தேசத் தாலே
பாங்கான யிந்தனூல் பரிசை போலே
தேடினேன் சித்தர்களும் சொன்னாரில்லை
சிவசிவா பரிபாசை செப்பினார்கள்
கூடினேன் கூர்மனென்று பேரும் பெத்தேன்
கோடி கல்ப்ப காலமல்லோ குகைக்குள் வாழ்ந்தேன்
ஆடினேன் சித்துகளை அண்டந் தோறும்
அம்மம்மா செயநீரொன் றறையக் கேளே! 1

**முடிவு**

நடுத்திரமாய் கட்டிநின்ற வெள்ளி தன்னை
நயமாகக் கொடுத்துவிடு பத்துக் கொன்று
சடுத்தமுள்ள செம்பதுவும் வெளுத்து நல்ல
சருகைவெள்ளிக் கொப்பாகும் தன்னைப் பாரே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், அப்பிரக பற்பம், பாசாண சுத்தி முறை,
வெள்ளி செய்முறை முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1565 சுவடி எண்: 771-b

# திருமூலர் அடிகை

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 12 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கேளப்பா வழலையுப்பு அடியைச் சொல்வேன்
கெடியாக உவர்ப்பூமண் படிதான் நாலு
ஆளப்பா அமுரியது படிதா னெட்டு
ஆணொடு பெண்ணீரும் சரியாய்க் கூட்டி
கேளப்பா கரைத்துவைத்துப் புதுப்பாண்டத்தில்
கோலு கொண்டு மூணுநாள் கரைத்து நன்றாய்
நாளப்பா நாலாநாள் தெளிவி றுத்து
நேராக அடுப்பேத்தி எரித்தி டாயே! 1

**முடிவு**

பொன்னாம்புப் பூனீறும் கலச்சுண்ணாம்பும்
பொருந்தினால் வழலையென்று சுண்ணாம் பாச்சு
சுண்ணாம்பு சவுக்காரம் வழலை முப்பூச்
சன்னியே ஆடுதற்கு வகையைக் கேளே! 5

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முப்பு பற்றி கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1566 சுவடி எண்: 771-c

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 26. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 4-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 12 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

மத்த அறுவத்து நாலு பாசாண ......
கும் ஒரு சீரகம் அளவு குருப் போடுகிறது
பற்பமாகும்

**முடிவு:**

சாத்திலே வங்கமியத் தனித்தனிக் கட்டக் கேளு
ஏத்தவே பானங்கள் சுண்ணம் யியல்
மாலின் தேவிச்சுண்ணம்
கோத்த வெங்காரம் கூட்டி

**காலம்:**

இல்லை

**குறிப்பு**

இதில், முதல் ஏடு இல்லை. இதில் குருபற்பம், துரிசுபற்பம் தாம்பிரபற்பம், ரசமணிபண்ண, மண்டைக்குத்து, தலைவலிக்கு, அண்டசெயநீர், கருவூரார் நொண்டியில் அண்டமெழுகு, அஞ்சு சுண்ணம், னாகக்கட்டு முதலியன உள்ளன.

---

**வரிசை எண்:** *1567* **சுவடி எண்** *771-d*

# அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் முதலியன

ஏடுகள்: 40. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 12 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் முதலியோர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

துரிசிக் குரு

சொல்லக்கேள் புலத்தியனே பற்பத் துக்கு
சுருக்கான குருவொன்று சூட்டக் கேளு
வல்லக்கேள் துரிசுசுத்தி பண்ணிக் கொண்டு
வகையாக உப்புநீர் மூன்று னாள்த்தான்

**முடிவு**

......சுருக்குக் குடுத்து அதின் பிறகு அந்த யிலையை
அரைத்து வில்லை செய்து அந்த கட்டியை
......தில் போட பஸ்ப்பம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், அகத்தியர், ரோமரிஷி முதலானோர் எழுதிய நூல்களிலிருந்து தேவை யானவற்றை எடுத்து எழுதிவைக்கப்பட்டுள்ளது. பாஷாணக்கட்டு, காவியத்தில் லிங்கக்கட்டு, சரக்குசுத்தி முதலான பல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1568 சுவடி எண்: 772

# அகத்தியர் வைத்தியம் - 1500

ஏடுகள்: 32. (8, 19 ஏடுகள் இல்லை). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 24½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

குருவே துணை நன்றாக வேணும் பரம குரு

பாகு..............................................
பணிந்துமுக் குணங்க ளாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம்
வகை வகை தொகுத்துப் பார்த்து
யாகம விதியி னூலா
லடர்ந்திடு நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்
புலத்தியா பொருந்தக் கேளே. 1

**முடிவு**

மஞ்சளெனுங் கஸ்த்தூரி மஞ்சள் தானும்
மன்னபனை நிலப்பனைவேர்ச் சாத்திர மூல
மிஞ்சாமல் பவ்வத்துக் களஞ்சு தூக்கு
வேம்புவெள்வேலிக் கருங்காலி கருவேலின் பிசினும்
துஞ்சவே கள.................................

---

**காலம்**

இல்லை

### குறிப்பு

இதில், 202 பாடல்கள் காணப்படுகின்றன. கூந்தற்பனை ஏட்டில் எழுதப் பட்டுள்ளது. இது எமது சுவடி எண் 1392/702 போன்றது.

வரிசை எண்: 1569 சுவடி எண்: 773

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 90. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 4–8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 24×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

கண்ணில் சன்னி படலம்

........தி பலத்தொடு ரெட்டி மதிரம் சன்னி மை
மரமஞ்சள் தோரை முந்திரிப் பழம்......................

### முடிவு

நெய்யில் முக்கித் தேக்கத் தேக்க ஆணிகள்
பொழிந்து விழும் — சத்தியம்
ஆர்க்கும் கொடுக்க பணம் வாங்கிச்சு
ஆங்கிச்சு வாங்கிச்சு கொண்டு கூட்டி
கொடுக்குந் தப்பாதே குறிச்சுக் கொள்ளு
கொள்ளருத குருவிந்தம்

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில் பல வித ஏடுகள், பலவித மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1570 சுவடி எண்: 774

# சூலை வைத்தியம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு; 10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 4\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: மலையாளம் ஆசிரியர்: அறியக் கூட வில்லை. முழுமை: முற்றற்றது.

## குறிப்பு

இது மலையாள மொழியில் உள்ள மருத்துவம்

———❋———

வரிசை எண்: 1571 சுவடி எண்: 775-a

# மச்சமுனி - 800 இரண்டாம் காண்டம்

ஏடுகள்: 35 (48-82). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 36×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனியார். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

பாரடா பொடியையந்தப் பட்டண......
... ... ... ... ... ... ... ...
தூரடா சபையிறத்தூவிச்
சொல்லடா பம்பம் மென்று
நூறடா உருவையேத்து
தொடிக்கு முன்ச்சபைக்கட்டாச்சு
ஆரடா செய்யப் போரார்
அகஸ்த்தியன் செய்வான் கேளே. 13

## முடிவு

பாறாதே சிவகொடுமை செய்திடாதே
பரமவிதி சிவகாமி பாதந் தானே
கூறாதே யாவருக்கும் பாத கத்தைக்
கொல்லாதே சீவசெந்து நீயென் றுன்னு
சேராதே ஊன்கொழுப்பு ஈடு வாடை
செய்யாதே செத்தபிணக் கறுவை நாளும்

மோராதே ரெண்டாங்காண் டத்தை விட்டு
யெறியாதே யிருநூறு மிந்தா முற்றே. 200

தெட்சணாமூர்த்தி துணை

**காலம்**

நந்தன வருஷம், தை மாதம் 23-ஆம் தேதி குருவாரம் எழுதி முகிந்தது, முற்றும்

**குறிப்பு**

இதில், முதல் 12 பாடல்கள் இல்லை. அஞ்சன மை, கண்கட்ட, சகலவிடத்துக்கும் பருந்து, நரிபல் பண்வட மாரண மை, மோகன மை, விஞ்சை, ரசமணிகட்ட, சல தம்பனம் அயசெப்பு, தூரிசு நீர் பற்பம் கோடாஞ்சூரி முதலான தலைப்புகள் இதில் உள்ளன.

---

வரிசை எண்: 1572 சுவடி எண்: 775-b

# மச்சமுனி - 800 மூன்றாங் காண்டம்

ஏடுகள்: 29 (83-111). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 36×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம் 3-ஆம் காண்டம்

இந்திரவி மதிகமே ஏது வில்லை
ஈசனடியே போற்றி
மந்திரமுங் கருவிடைய மானவாறு
மகத்தான ஞானவளி வடிவே மூலம்
ஐந்துகரம் தும்பிமுகம் பிராண வட்டம்
அவனிருந்த வேதாந்தம் விதிபோ தத்தைச்
செந்திருவை மணியொளியென் றறிந்த சோதி
சீவகளை யறிந்தமுத்தி சேந்தகாப்பே! 1

**முடிவு**

காரு சாலநூல் மூணு காண்டமும்
தேரு வீதியாம் தேறு தேறுநீ
போரு வீரமே பூமி நாதமே
மேரு மோடா சால முத்துமே! 200

மூணாங்காண்ட முற்றும்
தெட்சணாமூர்த்தி துணை யுண்டாக வேணும்

**காலம்**

நந்தன வருஷம் மாசி மாதம் 6-தேதி சுக்குர வாரம் முகிந்தது.

முற்றும்

**குறிப்பு**

இதில், காமரூபி மை, விஞ்சை, செகசாலம், பூச்சுயீடு, பலகை சாலம், கலவி வெண்பா, புத்தி வேதை, தாம்புர வேதை, காடை மை வயிரவன் தியானம்; அஞ்சுவகை விளிப்பு மை, சாதி அறிய, வர்மம். பூசை மானதம், சித்தினி, மச்சமுனி, முதலான தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1573 சுவடி எண்: 776.

## முப்பு வகை

ஏடுகள்: 12 (157-168). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8–9வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 36×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றறற்றது.

**தொடக்கம்**

......ரகினிய மாதையும்நீ சேத்துக் கொண்டு
மண்ணநர சப்பனுக்குக் கண்ணைக் காட்டே 94

கண்காட்டி யிருந்தவரை மரக்க வைத்து
காசினியெல் லாங்கடந்து கடலுந் தாண்டி
விண்காட்ட மாருதிமுன்ங் கொண்டு வந்த
விறுதுபெற்ற சஞ்சீவி யிவள்க்கீ டுண்டோ.

**முடிவு**

னாளைப்பார் வயதைப்பார் ராசி ......
நாளான லக்கினத்தி னவத்தைப் பாரு
கோளைப்பா ருரவூரெட்டு பனிரெ...... 148

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், செயனீர், இருவர்க்கு சாபம், இதுபின் சாபநிவிர்த்தி, போகர் பெத்த பேறு, தங்கச்சிலை, சகல வரசித்திக்கு மகா பூசை, தடிக்கம்பு மோடி, அகத்தீசனுக்கும், யீசனுக்கும் தர்க்கம், சகல வசியம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1574. சுவடி எண்: 777-a

# அகத்தியர் பெருநூல் 1200-சாலத்திரட்டு

ஏடுகள்: 73+4=77. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு 7-8வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×3செ.மீ. இ.எண்ணிக்கை: 1300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பாயிரம் - நீடூழி வாழ்க.

ஆயிரத் திரு நூற் முன்னூ
லாய்ந்து முற்காண்ட சூஷ்த்திரம்
பாயிரத் தொகுதி யொன்று
பாடிய வயித்திய பாகம்
மோயிரக் கவிமுன் னூறு
முமைக்கர னுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானுஞ்
சாற்றிய விதிநூல் தானே! 1

**முடிவு**

காப்பேது வாது கடந்ததிரை பாத்த போது
சாலத்தைச் சாற்றவே
மறப்பேது வாதனூல் முன்னூர்
வகாரத் துறைசரிதான்
வேதமே சொல்லி விளம்பு! 301

முற்றும்

வேலும் மயிலும் துணை.
திருச்சிற்றம்பலம்

**காலம்**

1865-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதிக்குச் சரியான தமிழ் ரத்திரா கிட்சா வருஷம் தை மாதம் 21 -ம் தேதி புதன்கிழமை வளர்பிறையும் சஷ்டி திதியும் ரேவதி நட்சத்திரமும்

கும்பலக்கினத்தில் மூற்றும்

**குறிப்பு**

இதன் பின்னர் இதற்கு அட்டவணை ஏடுகள் 4 உள்ளன. இதில், நல்லமார்க்கம் பிண்டபற்பம், சகலரோகத்துக்கும், ஓங்கார மந்திரம், சிலேத்துமத்துக்கு, கெந்தக மகா மாத்திரை, தீர்த்தமாட, மந்திரம் செபிக்க ஏலாதிமாத்திரை முதலியன உள்ளன.

வரிசை எண்: 1575 சுவடி எண்: 777-b

# கொங்கணர் வைப்பு முறை

ஏடுகள்: 18. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×3 செ.மீ. கி எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியந்த மில்லாத வெளியுந்தாண்டி
யகன்றுநின்ற போகருட பாதம் போற்றி
சோதியென்ற சின்மயத்தி னாயிபாதம்
துலங்கியதோ ரிஷிகளுட பாதம் போற்றி

**முடிவு**

வேலிப் பருத்தி ஒருபிடியும்
விரும்புஞ் சுக்கு சடா மாஞ்சி
கோல விழாலும் வசம்புள்ளி
குருக்கு மிளகு ஆலம்மோடு
சீல ஓமம் சீரகமும்
சிவக்க வருத்து வாத்து
போல ளக்கு வீராக்கி
பொழுது விடிய குடிப்பீராய்
பால மாந்தம் பலகிறுகைபால்பேதி
பாரி லோடிப் பறந்திடுமே 105

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 1228/609 போன்றது. அதைவிட 4 பாடல்கள் கூடுதலாயுள்ளன. அதன்பின் அசுவகெந்தாதிச் சூரணம் எழுதப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1576 சுவடி எண்: 777-c

# மச்சமுனி பாடல் - 8

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். பொருள்: மருத்துவம், அளவு: 32×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர் மச்சமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி : ஓம். சன்னிக்கி கிசாயம்.

பூறணமாய் நின்றபரா சத்தி பாதம்
போற்றி செய்தேன் யென்தாயே உன்பாதம் காப்பு
தாறணமாய் மானிடர்கள் பிழைக்க வேண்டி
சதாசிவனை மனுக்கெட்டு மருந்து சொன்னேன்.

**முடிவு**

மாளப்பா பெருநூலி லலைய வேண்டாம்
வடிவாக யின்னூலில் தேடிப் பாரு
வாளப்பா மச்சமுனி பாடல் தானும்
மைந்தனே யெட்டுக்குள் ளடக்க முற்றே! 8

சிவமயம்

மச்சமுனி பாடல் முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

2–வது ஏட்டில் மந்திரம் எழுதப்பட்டுள்ளது. 3-வது ஏட்டின் பின்புறம் மச்சமுனியார் னோவுக்கு கிசாயம் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1577 சுவடி எண்: 777-d

# திருமூலர் - 8

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக

மேகத்துக்கு யெண்ணை

காப்பு

தாதாவே நந்தி தயவா யுரைத்தமொழி
மாதாவே யென்தாயே மனோன்மணியே
ஆதார மான அறுமுகத்தோன் அரன் பாதம்
வேதாந்தப் பூரணமும் மெய்ப்பொருளுங் காப்பே.

நூல்

ஆமென்ற நாதாக்கள் மனுசருக்கு அறியவைத்தார்
அன்பாக வயித்தியங்கள் அனேகங்கோர்வை
தாமென்ற கோர்வை நூல் கிட்டா தென்று
சாதகமாய்ப் பிறிவு துண்டாய்ப் பாடினார்கள்

முடிவு

வீணான வீணனுக்கு நூல்கு டாதே
விருதாவாய்ப் போகு மென்று யெனக்குச் சொன்னார்
தானான திறேகத்தில் பிறந்த ரோகம்
சற்குரு யெண்ணையிலே தீரும் முற்றே! 8

முற்றும்

சிவமயம்

திருமூலர் எண்ணை 8-ம் முற்றும்

மனோன்மணி அம்பாள் துணை செய்யவும்

காலம்

இல்லை

குறிப்பு

இதன் பின்னர் அட்டவணை உள்ளது.

---

வரிசை எண்: 1578 சுவடி எண்: 777-ஏ

# நந்தீசர் விஷக்குளிகை -8

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஹரி: ஓம். நன்றாக

சீர்பெருகும் மனோன் மணியே மாதா வென்றுஞ்
சிவன்றானும் பிதாவென்றும் அவருடைய சீஷனென்றும்
கார்பெருகும் திருமாலுட பிள்ளை யென்றும்
கைலாசப் போகரைத்தான் தமைய னென்றும்

**முடிவு**

வாச்சப்பா நெய்யிலே பொரித்துத் தானும்
வளமான குளிகையது செய்து கொண்டால்
நாச்சப்பா லோகதம் பனமு மாகும்
நலமாக நந்தீசர் யெட்டும் முற்றே! 8
நந்தீசர் விஷக் குளிகை முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், இதன் அட்டவணையுடன், மற்றும் சில மருந்துகள் எழுதப்பட்டுள்ளன.

———❋———

வரிசை எண்: 1579 சுவடி எண்: 777-f

# கொங்கணர் பாடல் குளிகை - 8

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பார்வைக்கு
பாடுகுரேன் பார்வைக்கு வைங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங்காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங்காப்பு
நாதாந்த மனோன்மணியின் பாதங்காப்பு

**முடிவு**

சேறடா கருகுளிகை சித்தர் தானும்
திறமான நூல்களிலே சொல்லவில்லை
வாறடா வறையெட்டுக் குளிகை தானும்
மைந்தனே அடக்கமே ஆட்டு முற்றே! 8
விஷமூலிகை 8 முற்றும்
வைத்தியம் எட்டும் அறியவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதன் பின்னர் இதன் அட்டவணை இருக்கிறது.

———❋———

வரிசை எண்: 1580 சுவடி எண்: 777-g

# அகத்தியர் வைத்திய சூத்திரம் - 8

ஏடுகள்: 2+2. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக குருவே துணை

சூத்திரம்

சீரணியும் பூரணத்துள் தேவி பாதம் போத்தி
செகத்திலுள்ள பெரியோர்கள் பாதம் போற்றி
வாரணியும் முலை மடந்தை தயவுளாளே
வயித்தியத்தை யெட்டுதன்னில் வளமாய்ச் சொன்னாள்

**முடிவு**

சேமடா பவுத்திரமும் மூல ரோகம்
செங்குட்டம் கருங்குட்டம் சேரப் போகும்
நாமடா சொல்லிவிட்டேன் யெட்டுக் குள்ளே
நலமான பூரணசூத் திரந்தான் முற்றே!

முற்றும்

குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதன்பின், 'ரெத்தபித்தம் மூலரோகத்துக்கு குளிகை, அமுர்த சஞ்சீவிக் குளிகை, தாம்பிரத்தின் குளம்பு, மேகமெல்லாம் நீரலிவு போகும்' என்ற வரி காணப்படுகிறது.

இதன்பின் 2-ஏடுகள் மருந்து அட்டவணையாகவும் கொங்கணவர் வைப்புக்கு அட்டவணை என்றும் உள்ளன.

———❋———

**வரிசை எண்:** 1581 சுவடி எண்: 778

# போகர் காயகற்ப சூத்திரம்

**ஏடுகள்:** 31. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $35 \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

தானான காயசித்தி சொல்லக் கேளு
சனி.....................தைப் போத்தி
பானான பாட்டர்திரு மூல நாயன்
பாதமெந்தன் சிரசில்வைத்துப் பரிந்து போத்தி
கானான காலங்கி அய்யர் பாதம் போத்தி
கற்பந்தான் வகையெல்லாம் கருதித் திண்ணு
தேனான சித்திபெத்த படியே சொன்னேன்
சிதவிலாக் கற்பமுண்டு யோகம் பாரே! 1

**முடிவு**

ஏட்டியே காச்சலொடு யெரிய முத்தி
யினிமையால் வயத்துரப்பு மெல்லாந் தீரும்
மாட்டியே பஞ்சகற்பந் தேய்த்து வைத்து
மருந்தென்ற நீர்தன்னில் முழுகிப் போடே! 100

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தலைமுழுக, வழலை வாங்க, கண்ணிலிட, ஆக்கிறாணம், ரசக்கட்டு, பதினெட்டு குட்டம், சயரோகம், நாற்கரந்தை, குட்டம் போக ரசம், விஷ்ட்ணுகரந்தி, காமாலை முதலான தலைப்புகள் உள்ளன.

முடிவில், ஆ. கிருஷ்ணசுவாமிபிள்ளை சித்த வைத்தியர் என்றுளது.

வரிசை எண்: 1582 சுவடி எண்: 779

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 22. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு $25\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

கெந்தகத்தை கத்தாழை மடல் சோத்தில்வைத்து
ரெண்டுசாமம் யெரித்து யெடுத்து கழுவி
பொடி பண்ணி வைத்து நெய்யில்
பணவிடை கொள்ளவும்

## முடிவு

ஆவரை விறகு சாசாம் விறகாவதும் போட்டு
யெப்படி யெரிக்க வேணுமோ அப்படிக்கி எரிக்கவும்
ஷி கோப்பை ஆறவைத்து மேல் கோப்பையில்
யிருக்கப்பட்ட சரக்கை யெடுத்துக் கொள்ள
வேண்டியது

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், கருவங்க பற்பம், தாளக பஷ்பம், சாரக்கட்டு, பாஷாணக்கட்டு, மெழுகு திராவகம், வெள்ளி கிலிட்டு, வெடியுப்பு, சாரக்கட்டு, சீதளசுரத்க்கு, றணத்துக்கு வங்க களிம்பு, பிள்ளைகளுக்கு வயத்துப்போக்குக்கு முதலான மருத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1583 சுவடி எண்: 780

# தெட்சிணாமூர்த்தி பரிபூரண காவியம்

ஏடுகள்: 90. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $35 \times 4$ செ.மீ. கி. எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.
ஓமென்ற மூலகண பதியே காப்பு
உண்மையுட னடுபலையை உகந்து நின்று
ஆமென்ற ......தறகலை உள்க்கொண் டேதான்
அடங்கியந்த மனோன்மணியா ளருமை யாலே

**முடிவு**

முருகனன்றா யாவிதனிலே வைத்து பாரு
முன்னேரி ஊருமடா முதுகண் பாவை
பெருகநன்றாய் நாவுதனி லடக்கம் பண்ண
பிலமாக வாசியது மருந்து பாரே! —601.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வசியம், தீப ஒளி, கட்டி சிலந்திக்கு, கணபதிதியானம், பிரமன் தியானம், சதாசிவ தியானம், ரவிமதி தியானம் தன்மயங்காண்டம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1584 சுவடி எண்: 781.

## பகவதி தியானம் - திருநீறு தரிக்க

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 35 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 70. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

திருநீறு தரிக்க
பேய் ஆட்ட
ஓம் ஆம் உவ்வும் அய்யுங் கிலியும்
சவ்வும் சவ்வு கிலியும் அய்யும்
எரி எரி சிவ சிவ மாறண மாறண
உச்சாடு உச்சாடு அய்யா

**முடிவு**

ஓம் ஐயும் கிலியும் சௌவ்வும் நசிமசிவசி
யின்னாள் வசமாகச் சிவா.

திசை கட்டு மந்திரம்

ஓம் கட்டு அம்கட்டு சவ்வுங்கட்டு
சிவா கட்டு சிவனாணே கட்டுச் சிவா.

இதுக்கு சக்கரம்

(சக்கரம் இருக்கிறது)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கணபதி தியானம், அகோர வயிரவன் யோகினி மந்திரம், கட்டு மந்திரம், நாவடக்கம் திசைக்கட்டு முதலான மந்திரங்கள் உள்ளன.

வரிசை எண்: 1585 சுவடி எண்: 782

# பிரம்மமுனி சூத்திரம் - 600

ஏடுகள்: 79. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10–12 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 28 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ் ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக

திருவளரும் மெஞ்ஞான சோதி பாதம்
செப்பரிய கினேசனொடு கந்தன் பாதம்
மருவுருவா யாதியந்த வெளியுந் தாண்டி
யகன்றுநின்ற சின்மயத்தின் பாதம் போற்றி

**முடிவு**

நாணவே மணிமணியா யிறுகி நிற்கும்
ரசமெல்லாம் வாங்கியே பதனம் பண்ணு
ஆணுவமா யலையாதே கருவாளி யானால்
அரிந்துபார் வீரரசம் மதித மெத்த
தாணுவமாம் சறுவநோய் எல்லாம் தீரும்
சகல சிற்றும் யிதுனாலே ஆட லாமே 573

**காலம்**

இல்லை

குறிப்பு

இதில், கல்லுப்புச் சுண்ணம், நாதச் செயநீர், நூலுக்குச் சாபம், தாதுக்குறிப் பறிதல், அப்பிரக செந்தூரம், கதலி ரசாயனம், ரசபற்பம், தாம்பிரபற்பம், வாத மெண்பதுக்கும் தயிலம், தூதுவளை கண்டங்காரி கிருதம், சலக் கோர்வைக்கு, பஞ்ச பாணம், கோடா சூடி மற்றும் பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1586 சுவடி எண்: 783

# தெட்சிணாமூர்த்தி கலைக்கியானம் – 1200

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9-11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 28 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 350. எழுத்து: தமிழ் ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனுங் கமலமலற் றமுர்தங் கொண்டு
சுந்தரம் போல் வாதத்தி லெக்ஷசம் காப்பு

முடிவு

நேரப்பா நின்றநிலை தவறா மல்த்தான்
ரேசகமாம் பூரகத்தை நினவா யோட்டிக்
காரப்பா கும்பகத்தில் நின்றா யானால்
கருணையுள்ள சிவபூசை கோடி யாமே! 40

காலம்

இல்லை

குறிப்பு

இதில், மவுன தீட்சை, சிதம்பர சக்கரம், நாற்பத்தி முக்கோணம், நந்திதெரிசனம், சுப்பிரமணிய பூசை, கணபதி பூசை, மவுன பூசை ஆகியவை உள்ளன. 40 செய்யுட்களே உள்ளன.

வரிசை எண்: 1587 சுவடி எண்: 784

# அகத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 110 (33-163) இடையிடையே ஏடுகள் இல்லை. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 41×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அனுப்பானம் சகல வியாதியையும்
அனுப்பான் காணப்போம்
... ... ... ... ... ...றப்பான்
பிரியத்தில் பின்னையெவன் வாதி மகனானார்
வகையறிந்து அனுப்பானப் படியே செய்வான்
தேறினவன் போத்திகுரு மகனா மெங்கள்
திடவானாம் சங்கரநா ராயணன்தான் கானே 200

**முடிவு**

சன்னோடு முந்திரியாம் சாரா யத்தில்
சார்வாகத் தெளிவிடித்து யின்னங் கேளு
விண்ணோடு நன்னாரி பொன்மு சுட்டை
நங்கை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் தொடக்கம் 200 செய்யுட்கள் இல்லை. இறுதியில் 932-வது செய்யுள் வரை உள்ளன. இதில் 33-வது ஏடு தொடங்கி 163 வரை உள்ளதில், 35,38-40, 47-54,61, 69-72, 98, 102-103, 107 ஆகிய ஏடுகள் இல்லை. தொடக்கம் முடிவு இல்லாததால் தலைப்பு அறியக்கூடவில்லை. அநேகமாக இது அகத்தியர் 1200-ஆதல் வேண்டும்.

---

வரிசை எண்: 1588 சுவடி எண்: 785

# ஞானவெட்டி

ஏடுகள்: 26. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். பொருள் தத்துவம். அளவு 55×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1300. எழுத்து: தமிழ். ஆசிரியர் ஞானவெட்டியார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

விருத்தம்

கருவுருன்று காயமாயி திரண்ட வாறும்
கருவயத்தி லேவளர்ந்து எழுந்த வாறும்
உருத்திரன்று கால்கையை வகுத்த வாறும
உடம்புக்குள் தசை நிணங்கள் தரித்த வாறும்

**முடிவு**

நடுச்சுழியும் சத்திரிக்கோல் மாறலும் விட்டேன்
கங்கை கரையும் விட்டேன் சங்கத் திரையும் விட்டேன்
அத்திபுர னாரும்விட்டேன் னாதவிந்து
அணுகிய திருமுகச் சாகம் விட்டேன்
எத்திசையும் படைத்தருளும் விருமனுட
ஏகபுறமாகிய தெருவில் வந்து யிருந்தே னாண்டே.

விருத்தம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வெண்பா, விருத்தம், கலித்துறை முதலான பரவினங்களில் செய்யுட்கள் உள்ளன. அடியவன் ஆண்டே யிடம் கூறுவது போல தத்துவத்தை எளிமையாகக் கூறுகிறார்.

---

வரிசை எண்: 1589 சுவடி எண்: 786-a

## அகத்தியர் வாகட சூத்திரம் - 1500

ஏடுகள்: 223 (11,61 ஆகிய ஏடுகள் இல்லை). சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $38\frac{1}{2} \times 3$ செ. மீ. கி. எண்ணிக்கை: 9000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக
தெட்சணாமூர்த்தி துணை

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்களாய்
வாகடச் சுவடியெல்லாம்
வகை வகை தொகுத்துப் பார்த்து

**முடிவு**

வாதத்தி னாலெடுத்த வாய்வுக் கிராணிமந்தஞ்
சாதந் தனையொருக்குஞ் சஞ்சலமும் மெத்தத்
தலைகனத்து மெய்மயக்கும் பித்தமுடன்
சித்த முடனிருமல் தீருமே.
தென்கயிலை மாமுனிவன் செப்பியதோ ரின்னூலை
பத்தியாய்ச்செய்வீர் பகர்ந்து. அன்பாகச்செய்தேனறிந்து
தெட்சணாமூர்த்தி சகாயம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் *539/301 (h)* போன்றது. இதில் ரசசுத்தி கெந்தசுத்தி, எலிப்பாஷாணசுத்தி, பெரும்பாட்டுக்கு, மேகாதிக் கஷாயம் முதலான பல தலைப்புகள் உள்ளன. இதில் 1470 செய்யுட்களே உள்ளன.

---

வரிசை எண்: *1590* சுவடி எண்: *486-b*

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 48. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $38\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சீர் புகழ் மாமுனி உரைத்த திப்பிலாதி சூரணத்தைப்
பார்புகழு மண்ணிற் பகரக்கேள் ஆரணங்கே

**முடிவு**

பொருந்தினேன் யென்னாளும் ஏலாதி
யெல்லேல மத்தம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஏடுகளின் தலைப்புக் கீழ்ப்பகுதி எலி கடித்துள்ளது. இதில், மருந்து அட்டவணை, வில்வசிந்தாமணி, அயக்காந்த செந்தூரம், தாளக பற்பம், மகா ஏலாதி மாத்திரை முதலிய பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1591 சுவடி எண்: 787-a

# பிள்ளைப் பிணிவாகடம்

ஏடுகள்: 48. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள் பொருள்: மருத்துவம் - மாந்திரீகம். அளவு: $13\frac{1}{2}\times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

எட்டாநாள்ச் சன்னி யென்னும் பேயனையும்
பலகாலும் அழும். முலை உண்ணாது. வெதும்பும்
இதற்கு பெலி.
மண்ணகலில் பால்விட்டு வைக்கவும்.

**முடிவு**

வயறு போம். இதற்கு பெலி கம்பம் யேறி உளுந்து சோறு
...........................................
(இவ்வேட்டின் பின்பக்கம் எழுத்துக்கள் அறியக் கூடவில்லை)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பிள்ளைகட்கு வரும் நோய்களுக்கான மாந்திரீகம் கூறப்பட்டுள்ளது. தலைப்பு ஏட்டில், பிரசுகத்திற்கு மூப்பனார் புள்ளைப்பிணி வாகடம் ஏடு எடுத்தவற்கள் குடுக்கவும். தெச்சனாமூர்த்தி துணை செய்யவும் என்று எழுதப்பட்டுள்ளது பின்புறம் மாந்திரீகச் சக்கரம் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1592 சுவடி எண்: 787-b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 29. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு 6-8 வரிகள். பொருள் மருத்துவம். அளவு: $13\frac{1}{2}\times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சண்டாளர்க்கு
கேசறி யெனனம்—சமுதை கொளுப்பு
எடுத்து உரிக்கி ஒட்டில் விட்டு தீபமேத்தி
பூத பிருத பிசாசு எதுரவைத்து

முடிவு

தருகாமல் போட்டு சாமம் மட்டு
பொருக யெதுற்பேருதனை
யீயமதி லெழுதி பருதில்லை மாய்திடுவான் பார். 7

காலம்

இல்லை

குறிப்பு

இதுவும் மாந்திரீக ஏடுகளாகக் காணப்படுகின்றன.

---

வரிசை எண்: 1593 சுவடி எண்: 788

# அகத்தியர் பாடல் - 108

ஏடுகள்: 53. சுவடியின் நிலை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×3 செ.மீ. கிரந்த எண்ணிக்கை: 1700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

பூறணி மாமலை மாமகளரு புதல்வன்
காறணி மாமத சரிமுகன் அடிபணிவாம் 1
வஸ்த்து வணக்கம்
அமுற்த மதியணி சடையினர் விடையரே
மதபடிக ளிணையடி பணிவாம் 2
வேலவன் வணக்கம்

முடிவு

மத்தமிக்கிரவு குமுரி நின்றிடு கழிச்சலும்
கொல்மூலமதி சாறமோடெழுகிடம்
வேண்டுபுத்தியுள பன்றித்ததொழிலே நம்புவீர்
கருணைமா மரித முதவிகூரும் வன........

காலம்

(முதலேட்டிலேயே உள்ளது)

துன்முகி வருஷம் மாசி மாதம் (20 தேதி) செவ்வாய்க்கிழமை சதுர்த்தேசி அவட்டமுங் கூடின சுபதினத்தில் அகஸ்தியர் பாடலுக்கு தவளமதவாயி எழுதத் துவங்கினது.

அனந்தவல்லியம்மன் பாதாரவிந்தமே துணையாக வேணும்

**குறிப்பு**

இதில், ஏடுகளின் தலைப்பகுதி சிதைந்துள்ளதால் தலைப்புகள் அறியக்கூடவில்லை. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

---

**வரிசை எண்:** *1594* **சுவடி எண்:** *789*

# யூகிமுனி சிந்தாமணி

ஏடுகள்: *135*. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு! *7-9* வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: *35 × 3* செ.மீ. கி.எண்ணிக்கை *6000*. எழுத்து: தமிழ். ஆசிரியர்! யூகிமுனி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாக்குண்டாம்...........தமக்கு
ஆனைமுகந் தன்பாதம் முருகன் பாதம்
அத்தியுரித்தெட தரித்த அய்யர் பாதம்
மானனைய மாயிபத மாயி.........தம்
வயிறவர்கள் பாத மகாலெட்சுமி பாதம்

**முடிவு**

வீசுகின்ற சாத்தியத்தைச் சொல்லக் கேளு
மிகுந்த ஆசனம் பவுத்திரம் பக்க பவுத்திரம்
மூசுமூல பவுத்திரம் வேகப் பவுத்திரம்
முடுக்கான கிறந்தியென்ற பவுத்திரமுந்தான்
தாசுகின்ற அஞ்சுந்தான் சாத்தியமாகும்
சறக்கண்ட மாலையொடு கோடி பவுத்திரம்
ஆசுகின்ற ஆசனத்தின் கண்டமாலை
அசாத்தியந்தான் இது மூன்றும் அறிந்திடாயே! 12

பவுத்திர நிதான முற்றும்.

ஆகபாடல் 772.

பரதேவதை சகாயம், திரிபுராந்தகி பாதாரவிந்தமே துணை, அம்பாள் அனுக்கிரகம்

**காலம்**

துன்மிகி வருஷம் பிரட்டாசி மாதம் 13 தேதி சனிவாரமும் கூடின சுபதினத்திலே துவக்கினது.

### குறிப்பு

இது, எமது சுவடி எண் 428/245 போன்றது. இதில், அதிசாரம் ஆறுக்கும் மருந்து, சுரத்துக்கு லெங்கணம், வதஸ்தம்பவாதம் வாதகருஷணம், கும்பவாதம், மலைத்த கம்பவாதம், இலஸ்தம்பவா தம், சந்துவாதம் அஷ்ட சூலைவாதம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதன் இடையே 35-39 ஏடுகள் இல்லை 390-ஆம் செய்யுளுக்குப் பிறகு 389-ஆம் செய்யுள் உள்ளது. ஓரங்கள் எலிகடித்துள்ளன.

---

வரிசை எண்: 1595 சுவடி எண்: 790

## போகர் நிகண்டு

ஏடுகள்: 60. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: நிகண்டு. அளவு: 35×3 செ. மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

அகண்டபரி பூரணமாம் அய்யன் பாதம் போத்தி
அடுக்க நின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
நிகண்டென திருமூலனாயர் பதம் போற்றி
நீங்காமற் காலாங்கி அய்யர் பாதம்

### முடிவு

வாராக வாதத்துக் கொடுக்கந் தப்பில்
வரிசையாய் வாராமல் மண்ணாய்ப் போகும்
நீராகச் செந்தூரங் களங்க மாக
நிலவரமா யொண்ணுக்குள் ளொடுங்கப் பாரே! 500

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், கலங்கொம்பு, மாட்டுக் கொம்பு, ஆட்டுக் கொம்பு, தவளை, கோழி, கரடி, அயசெம்பு, தொட்டிபாஷாணம், கடல் பேர் முதலான பல பொருட்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1596 சுவடி எண்: 791

# தன்வந்திரி வாக்கியம் (வைசூரி வைத்தியம்)

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 35×3 செ.மீ. கி. எண்ணிக்கை 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக

வைசூரி ஏழுக்கும் நிதானம்

வாத வசூரியின் குணம்

மானிடற் காதி கர்த்தன் வருத்திடு வியாதி தன்னில்
கானிடர் செய்வசூரி தானிரு நான்கதாகும்
ஆனதிற் சாத்திய மூன்று அசாத்திய சாத்திய மிரண்டு

**முடிவு**

அறட்டிய கடபமும் வாய்வும் மச்சிரு பித்தந்தானும்
உருட்டியே சுழன்று மென்று நர்த்தன முனிவர் தாமே! 35

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், அம்மை எனப்படும் வைசூரியின் குணங்களும் மருந்தும் சொல்லப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1597 சுவடி எண்: 792

# சரச் சிந்தாமணி

ஏடுகள்: 85. சுவடியின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $23\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1400. எழுத்து: தமிழ். ஆசிரியர். அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
**சறச்சிந்தாமணி**

ஆமப்பா சறச்சிந்தா மணியைக் கேளு
அப்பனே சூத...மாடு சிவந்த ரத்தினம்
தாமப்பா தங்கமோடு வெள்ளி முத்து
தயவான வளமோடு தீஷ்சண்டந்தான்...

**முடிவு**

அரைதாள் போட்டு விருதாகா வயாமூடி
சீலைச் செய்யே! ... ... ... 260
... ... ... ... ... யாப்பா வலுகையி
லடுப்பு லேத்தி திரமாகா
தீபக்கினி யெட்டு ... ... ... ...

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சிலோதாரிமணி, கருசாலை லேகியம், கண்டங்கத்திரி லேகியம், பஞ்சதீபாக்கினி லேகியம், திப்பிலி ரசாயனம், அக்கினிச் சூரணம், சஞ்சீவிச்சூரணம் முதலான பல வகை தலைப்புகள் உள்ளன.

இதன் பின்னர், மேகத்துக்கு எண்ணெய் எழுதிய 3 ஏடுகள் உள்ளன.

---

வரிசை எண்: 1598 சுவடி எண்: 793-a

# அகத்தியர் கர்ம காண்டம் - 300

ஏடுகள்: 31. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்; மருத்துவம். அளவு: 39 × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமாயி உள்மூலர் பொறியிச் சூடாய்
புகையெழும்பி மேகமதாய் சிரசில்ச் சூடாய்
காரணமாய் நீரெழும்பி பினசம் பேர்கொள்ளும்
கனலெழுந்து வாயுவாதாம் கபால மெல்லாம்

**முடிவு**

உரைத்த சுரம்போம் உரைவான தோஷம் போம்
விரைந்திடும் சன்னியும் மேலான வாய்வும் போம்
பாத்திய கெற்பத்தில் பகுந்தது நோய் சூலை
தூத்த நல்ச் சூதக் குச்சுட்டி பாத்திடே 106

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கருசாலை லேகியம், பவளவங்கபற்பம், மேகராசாங்கதி தயிலம், மிருதாரி சிங்கி அரிதாரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1599 சுவடி எண்: 793-b

# புலத்தியர் சாத்திரம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 39×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: புலத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

விந்ததிகம் குருமுனிவன் சொன்ன தாள
மேகனாறுன் செந்தூரம் செய்ய
கெந்தகம் மறுபதிடை அதினேர் சூதம்
கெடியான சாதிலிங்க விராகன் மூன்று
..............................
கொண்டு பணமயிக் கல்வத்தி லேத்து வாயே 54

**முடிவு**

லிங்கம் விராகனிடை — 5
வீரம் ,, — 2
வெள்ளைப் பாஷாணம் விராகனிடை — 2
வினாரி வேரில் தைலத்தில் போடவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதுக்கு முன்னுள்ள 26 ஏடுகளும், 53 செய்யுட்களும் இல்லை. இதில் ராமபாணம், காளமேக நாராயண செந்தூரம், ரசபற்பம், லிங்கக் கட்டு, தங்கபற்பம், கெந்தகத் தயிலம், சன்னிக்கு ரசபுகை முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1600 சுவடி எண்: 794-a

# அகத்தியர் பின்னூல் —80

ஏடுகள்: 12. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

முன்னூல் எண்பதுஞ் சொன்னேன்
முதலே போற்றி
முலத்தில் நின்றகண பதியே போற்றி
பின்னூலே யெண்பதுவுஞ் சொல்வாய் காப்பு

**முடிவு**

கோணமென்னும் வழலை விட்டால் ரசவா தந்தான்
குடல்வாத பெந்தமெல்லாம் குணமா காது
கானமென்ற யிந்தநூலெண் பதையும் விட்டால்
காசினியி லவன்யோகி கடந்தான் முற்றே. 82
அகஸ்தியர் அருளிச் செய்த
பின்னூல் எண்பது முற்றே
தேவி சகாயமுண்டு
முருகன் துணை
மலையப்பன்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி யெண் 468/262-b போன்றது.

---

வரிசை எண்: 1601 சுவடி எண்: 794-b

# வைத்தியம்

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அரியக்கூட வில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ராமசெயம்
குருமுடிக்கவும்
வெள்வங்கம் மரும்பட்டை சாத்தில் 21 தரம்
சுத்தி பண்ணவும். சூரத்துக் கண்ணாடி வில்லை ரசம்
சவ்வீரம் வெள்ளைப் பாஷாணம்

**முடிவு**

ஆதியுடன் மூதண்டம் கொண்டு வந்தால்
யென்மகிகாள் ஊழியது ஒதுங்கிப் போமே!
வாலாம்பிகை துணை
குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முசுவாக்கினிக் குழம்பு, சவுக்காரக் குழம்பு, கிருஷ்ணாப்பிரக செந்தூரம் கைமுறை, கிரந்திக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1602 சுவடி எண்: 795

# போகர் கற்ப சூத்திரம்

ஏடுகள்: 54. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக

பத்திய பதார்த்தம்

தானான காயசித்தி சொல்லக் கேளு
    சனகாதி னால்வருட பதத்தைப் போற்றி
பானான பாட்டர்திரு மூல னாவான்
    பாதமெந்தன் சிரசில்வைத்து பரிந்து போற்றி

**முடிவு**

தேனான சிவயோகி முனிவோர் தாமுஞ்
    சிறுபாட்டார்ஞ் சொன்னபடி சித்தி யானேன்
பானான பராபரமாந் திருமூல னாயன்
    பாட்டார் சொன்னபடி தின்று பாலித்தேனே! 342

கல்ப்ப விதி முற்றும்

தேவிசகாயம்

சற்குரு முன்னிற்க

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தலைமுழுக கற்பம், வழலைவாங்க, கண்ணுக்கு அஞ்சனம் மூக்குப்பொடி, வயசு நிதானம், கடுக்காயுற்பத்திபோர், விசையன், ரோகணி பிரிதிவு, மிளகு கற்பம், கடுக்காய் லேகியம், வெண்காரக்கட்டு, லிங்கக்கட்டு, காந்திக்கி கிஷாயம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1603 சுவடி எண்: 796

# போகர் பூசாவிதி

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: பூசை முறை. அளவு: 39×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பாரப்பா வாலைதனை தியானஞ் செய்ய
    பாங்கான நவகோண மெட்டு சூழு

சேரப்பா யிருவளையம் வாச னாலு
சிறப்பாக றீங்கார மிட்டு நன்றாய்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகு தேவன்
ஆரப்பா அரைக்கிளிலே கிழக்குத் தொட்டு
அகாரமுடன் உகாரஞ்சவ் வகாரம் போடே 1

**முடிவு**

வாடாதே யென்தாய் பூசை நல்ல வர்க்கு
யெய்துமடா கருமிக்கில்லை
பாடியிந்த பதின்மூன்று பாட்டுக் குள்ளே
பரைபூசை சிவபூசை பணிந்தி டாயே 13

சருக்குரு பாதந் துணை
தேவி சகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் வாலை தனைப் பூசை செய்யும் முறையும், அதற்கான சக்கரங்களும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1604 சுவடி எண்: 797

## பஞ்சமுகத் தியானம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7–8 வரிகள். பொருள்: பூசை முறை. அளவு: $40\frac{1}{2} \times 4$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

எதிரில்லா வஞ்சுமுக மெஞ்சு மெழுத்து மாகி
ஏகபொரு ளாத்திருபத் தஞ்சு மாகி
எதிரில்லக் கலைக்காணம் விஞ்சை யாகி
யிதையதிகம் ரென்றுக்கும் முன்னே யாகி

முடிவு

சூது புரி விஷ்ணுவின் மாய்கை தோன்றும்
கனவதான சஞ்சரியம் அங்சிவாயநமா வென்னில்
கடும்பிறவை ஆதித்தன் றதம் காணும் பாரே! 20
சற்குரு முன்னிற்கவும்
குருவே துணை

காலம்

இல்லை

குறிப்பு

இதில், ஐந்தெழுத்து, சிவனது ஐந்து முகங்கள், ஒவ்வொன்றும் இருபத்தைந்து முதலானவை பேசப்படுகின்றன.

---

வரிசை எண்: 1605 சுவடி எண்: 798

# கண் வைத்தியம்

ஏடுகள்: 41. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 39 × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க
கண்ணுக்கு கிறிதையும் குணமும்
வாக்குண்டாம் ... ... ... ... ... ... ... தமக்கு
நூல்
எல்லாக் கண்ணோக்காட்டுக்கும் அதில் லொடுக்க
மாவது வேதினை கத்துதல் சொறிதல் சரசரப்பு
தண்ணீர் வடிச்சல், எரிப்பு இவைத்தை

முடிவு

சுண்ணாம்புத் தெளிவு மரபடி அரைக்கால்
துவரை இது ஊறப் போட்டு அந்தத்
தண்ணீர் படி அரைக்கால் ஆகபடி காலே அரைக்காலும்
உதையத்திலே சாப்பிடவும் தீருவேறும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கண்ணுக்கு மருந்து, கண்வலிக்குப்புகை, புழுகண்ணுக்கு பொடி, இளிச கண்ணுக்கு, மருந்தீட்டுக்கு, செற்ப விப்புருதிக்கு சூசிகா அஞ்சனம், நசியம், மற்றும் பல தலைப்புகள் உள்ளன.

---

**வரிசை எண்: 1606** **சுவடி எண்: 799.**

# பூரணி மந்திர சாத்திரம்

ஏடுகள்: 33. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7–9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: $39\frac{1}{2} \times 4$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணி

மவாயநசி
யநவாசிம
நமசிவாய
வாசிமயந
சியநமவா

**முடிவு**

| | | | | |
|---|---|---|---|---|
| வ | ய | ம | ய | ந |
| ந | ய | மீ | வ | ய |
| ய | ஞ | வ | யி | ம |
| ம | வ | ய | ந | மீ |
| ச | ய | ந | ம | வ |

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பலவகையான மந்திரங்களும் சக்கரங்களும் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1607 சுவடி எண்: 800.

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 83. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 22½ × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

கற்கடக சிங்கி சாதிக்காய் சாதிப்பத்திரி
கிராம்பு' குராசாணி, மாச்சக்காய், திப்பிலி
கடுகரோகணி, ஏலம், லவங்கம் கோஷ்டம்
அதிமதுரம் யிருசீரகம் சுக்கு

## முடிவு

கொடுங்கையாடின யெண்ணை—உப்பிலைப் பத்தியம்
சகலவியாதி வயத்தாலே.........

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சிறுபிள்ளைகட்கு நாக்குப்பூச்சி, கீரிப்பூச்சி விழ எண்ணெய், பவுத்திரத்துக்கு கையாட்சி, குஷ்ட்டம், சிரங்கு, அசுகுணி இதுக்கு மருந்து தேளுக்கு ஆட்சி, கோரோசனை மாத்திரை மற்றும் பல தலைப்புகள் உள்ளன.

இது குழந்தை வைத்தியம் எனலாம்:

வரிசை எண்: 1608 சுவடி எண்: 801-a

# வேதாந்த பூரணம்

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள்: பொருள்: வேதாந்தம். அளவு: 19 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து. தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

(கொ)ள்ளப்பா ஆண்டொன்று அந்தி சந்திக்
குணமாகக் கொண்டுவரக் குணத்தைக் கேளு
(வி)ள்ளப்பா மூலமதி லனலோ மீறி
பித்தமது மேற்கொண்டு செந்தீப் பத்தி

**முடிவு**

பத்தான பதிதனிலே வைத்துப் பூசிப்
பதியான வாசியது சித்தி யாகும்
வித்தான வினையறுக்கும் ஞானசித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முத்தே 25

சற்குரு பாதமே துணை

**காலம்**

பிரபவ வருஷம் வைகாசிமீ 21

**குறிப்பு**

இதில், தொடக்கம் 2 ஏடுகளும், 7 செய்யுட்களும் இல்லை. 24-வது பாடலில் ''அமருவது மானந்த பூரணமும் முத்தே!'' என்றுள்ளது.

வரிசை எண்: 1609 சுவடி எண்: 801-b

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 14. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 19 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

விஷக்கடி மருந்து

வெள்ளை குண்டுமணி பருப்பு, நாவைப்பிசின்
எருக்கன்பால் விட்டு அரைத்து உருட்டி
காயவைத்துக் கொண்டு தேள் கொட்டினால்
முலைப்பால் எருக்கன்பால் அல்லது உமிநீர் வேறு

**முடிவு**

**செகவசியத்துக்கு ரசமணி**

முத்துருக்கஞ் செவி முலைப்பால் விட்டரைத்து
குகை பிடித்து குகையில் பூனகங் கீழ்மேல்பூசி
காயலவைத்து ஷிகுகையில் ரசம் வராகனெடை–1
விட்டு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஊழிப்பேதி வகை, குணம், மேக ஊரல், கடிவிஷம், அரிப்பு இதுகளுக்கு மருந்து, வெண்கரநிதைக் கோண்டு, ரசமணி, பல் வலிக்கு தூள், கிஷாயம் முதலான தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1610 சுவடி எண்: 802

# குருமுனி சூத்திரம் – 5

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $19 \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 30. எழுத்து: தமிழ். ஆசிரியர்: குருமுனி. முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்**

பரந்தானே வெளியாச்சு ஒளிவு மாச்சு
பாய்கின்ற வாய்வாச்சு வன்னி யாச்சு
உரந்தானே புனலாச்சு மண்ணு மாச்சு
உடலான சீவசித்து உதிக்க லாச்சு
மரந்தானே புல்லுமுத லுண்டாக லாச்சு
மார்க்கமென்ற நாலுவகை யோனி யாச்சு
சிறந்தானே யேழுவகை தோத்த மெல்லாம்
யெழுத்தருவின் பூரணத்தின் சியல்தா னொன்றே! 1

**முடிவு**

ஆசையல்லோ பலபலவாய்ச் சுற்றிச் சுற்றி
அதுதானோ யிதுதானோ யென்பார் மாண்பார்
ஓசையற்ற மணிபூர கத்தைச் சொல்லி
உரைத்துவிட்டோம் கருச்சூக்ஷ்ம அய்ந்தும் முற்றே! 5

சற்குருநாதன் துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பஞ்ச பூதங்களின் உற்பத்தி தோற்றம் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1611 சுவடி எண்: 803

# குருமுனி சுருக்கம் - 1

ஏடு : 1. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 10. எழுத்து: தமிழ். ஆசிரியர்: குருமுனி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

தெரிசனமாஞ் சிவயநம வங்கென் றோது
திரும்பவே அங்கிலியும் வங்கென் றோது
சரிதையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியும் சங்கென் றோது

**முடிவு**

பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாய்வு
பார்க்கையிலே ஒம்சிவய வசியென் றோது
துரியமடா துரியத்தில் அப்பு உப்பு
சூட்டினேன் பாறையுப்பைச் சொல்லினேனே! 1

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

ஒரே பாட்டில் ஐந்தெழுத்துண்மைகளை அடக்கிக் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1612 சுவடி எண்: 804

# அகத்தியர் தீட்சா விதி - 200

ஏடுகள்: 97. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
வானத் தாவிய பொதிகை மகத்தான்
ரிஷியுடைய வாக்கின் நேர்மை
பானத் தாவிய பூசை பரிவான
சிவயோகப் பண்போர் கேள்மின்

**முடிவு**

பணிமாறு காலத்தே சகலசித்தும்
பரிவாகத் தாவென்று கையால் வாங்கி
பணிமாறு காலத்தே பணிந்து தெண்டன்
பண்ணுவாய் பூசைவிதி தீட்சை முற்றே! 201
அகத்திய குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 512/288-e போன்றது.

---

வரிசை எண்: 1613 சுவடி எண்: 805

# அகத்தியர் - 30

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்று நதிகிரியென்றும் படைத்த வாறும்
காரணமாந் தேவியெங்கு நிறைந்த வாறும்
கற்பமுண்ட ரிஷிகள் சித்தர் சாகாத வாறும்

**முடிவு**

ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசுத்த மென்றேன்
(அ)ய்ங்கதனம் பண்ணுகின்ற அகந்தை சொன்னேன்
பாடுகின்ற முப்பதுக்குள் பிடித்து விட்டேன்
பரமகுரு சொன்னபடி பாடி னேனே! 30
சற்குரு கடாட்ச முண்டாக வேண்டியது

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், நூல் துகை, ஞானம், ஆகிய தலைப்புகளே உள்ளன.

---

வரிசை எண்: *1614* சுவடி எண்: *806*

# அகத்தியர் - 12

ஏடுகள்: *4*. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: *5-7* வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: *70*. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தாயான உன்மனையாள் பாதம் போற்றி
சாஸ்த்திரமோ ஆயிரத்தி யிருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாரு மதைக்குரிக்கிரு நூறு சொன்னேன்
கனிவான யிந்தநூல் பனிரெண் டுக்குள்
வாயாறச் சொல்லுகுரேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்டம் வளமை கேளே! 1

முடிவு

நாயென்ற ஆணுவத்தை அடக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்ட வேணும்
தேனென்ற சற்குருவைக் காண வேணும்
சித்தியாம் பனிரெண்டுஞ் சிறக்க முத்தே! 12

காலம்

இல்லை

குறிப்பு

இதில், 9-வது பாடல் இல்லை. அதற்கு இடம் விட்டு எழுதப்பட்டுள்ளது. இது எமது சுவடி எண் 605/321-c அகத்தியர் வகாரச் சுருக்கம்-12 போன்றது.

வரிசை எண்: 1615 சுவடி எண் 807

# அகத்தியர் பாடல் - 5

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

நாடியதோர் தந்திமுகன் தனைப்ப ணிந்து
நயமாக உரைத்திடுவார் நந்தி பின்னுந்
தேடியதோர் மந்திரத்தால் அஷ்ட்ட சித்தி
திறமாக உரைக்குறேன் யோகி யோர்க்கு

முடிவு

பாசமுடன் நீசேர்ந்து மவுன மாகிப்
பாங்கான நாதவொலி சிதம்ப ரத்தில்
ஓசையுடன் உறுதியதாய்த் தேறும் பாரு
ஒருவருக்கும் விள்ளாதே அஞ்சும் முத்தே! 5
குருபாதந்துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 400/236-h; 479/267-c போன்றது.

---

வரிசை எண்: 1616 சுவடி எண்: 808

## அகத்தியர் சுக்கிஷும்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு; 7 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 20 × $2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பத்தியுடன் பார்ப்பதியைப் போற்றி செய்து
பரிவாகக் குருமுனிதான் பாரி லோர்க்கு
சத்தியமாய் முறைப்பாடு யேவல் பில்லி
சயித்தானோ தேய்வருத்தஞ் சார துன்பம்

**முடிவு**

வரிசையென்ற சத்துருகை யன்னம் வாங்கி
மகிழ்ந்துண்ண மகன்தந்தை வங்கி ஷத்தோர்
தருசுடனே செய்தமுறைப் பாடு தீரும்
சத்துருக்கள் செய்தாலுஞ்... ... ...

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஏவல் பில்லி சூனியம் முறைப்பாடு முதலியன கூறப்பட்டுள்ளன. 6 பாடல் களே உள்ளன.

---

வரிசை எண்: 1617 சுவடி எண்: 809

# பூரண சூத்திரம்-16

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணமே தெய்வமென்று உரைத்தீ ரய்யா
பூரணத்தை யின்னதென்று புகல வேணும்
காரணத்தைச் சொல்லுகுரேன் நினவாய்க் கேளு
கலையான பதினாறும் பூரணமே யாகும்
மாறணமா யுலகத்தோர் மதிம யங்கி
மதிகெட்டுப் பூரணத்தை யிழந்தா ரையோ
வாரணத்தில் மனம்வைத்துப் பூரணத்தைக் காக்கில்
வாசியென்ற சிவயோகம் வாழ்க்கை யாச்சே 1

**முடிவு**

கருத்துடனே அறிந்துகொள்ளு கலைமா றாதே
காரியத்தை நினைவாலே கருதிக் கொள்ளு
சுருதிசொன்ன சோதியெல்லாம் சுருக்கிச் சொன்னேன்
சூஷ்த்திரம்போல் பதினாறும் தொகுத்தேன் முற்றே! 16

குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் பூரணத்தின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1618 சுவடி எண்: 810

# ரோமரிஷி முப்புவின் கரு

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $20 \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: உரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

கருவென்ன வழலையென்ற முப்பூ தன்னை
காணவென்றா லென்குருவைக் கருத்தில் வைத்து
உருவென்ன வாதத்தி லண்ட பிண்டம்
உண்மையென்ற கருவதனை யுரைக்கக் கேளு

முடிவு

போமென்ற முப்பூவின் சுண்ணந் தன்னை
புகழ்பெறவே பீங்கானில் வைத்து மூடி
ஆமென்ற ஆத்தாளைப் பூசை பண்ண
அதீதமென்ற சக்கரத்தைச் சொல்லக் கேளு

காலம்

இல்லை

குறிப்பு

இதில், 36 செய்யுட்கள் உள்ளன. 37-வது செய்யுள் பாதியே காணப்படுகிறது. முப்புவின் கரு விபரம், பூமிநாதம், விளைவின் நில விபரம், இரவினாத முப்பு விபரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1619 சுவடி எண்: 811

# ரோமரிஷி 500-ல் ஞானம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 20 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

அருளுவே னகாரமென்று ஞானந் தன்னை
அறியாமல் ஞானியவர் யதமாய்ப் போனார்
பொருளேது ஒன்றுமில்லை சிவத்தின் தீட்சை
பூட்டுவேன் சத்தியுட தீட்சை யெல்லாம்
அருளவே சொன்னதெல்லாம் வேறொன் றில்லை
மார்க்கமென்ன அகாரமதை சிவம தாகுந்
தெருளவே உகாரமது சத்தி யாகுஞ்
சேரடா விதுரண்டும் ஒன்றாய்த் தானே! 497

முடிவு

மெய்யாகப் பணம்போலே தொட்டுப் போடு
வெகுசுறுக்காய் நீறியது பற்ப மாகும்
பொய்யொன்றும் போகாது யிந்த நூலில்
பூட்டினேன் கருக்களெல்லாம் பூண்டு பாரே! 598

காலம்

இல்லை

குறிப்பு

இதில் 497 முதல் 508 செய்யுட்களே உள்ளதால் இது வேறொரு நூலின் ஒரு பகுதியாகும். இதில் மருத்துவமும் பேசப்படுகிறது.

---

வரிசை எண்: 1620 சுவடி எண்: 812

## வால்மீகி ஞானம் - 16

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வால்மீகி. முழுமை: மூற்றுமுளது.

தொடக்கம்

ஹரிஓம் குருவே துணை
இருள்வெளியாய் நின்றசிவன் பாதம் போற்றி
எழுத்தினுட விபரமதை விரித்துச் சொல்வேன்
அருஉருவாய் நின்றதுவே யெழுத்த தாகும்
ஆதியந்தம் அண்டபிண்டம் அதுவே ஆகும்
திருஉருவாய் ரவிமதியாய் நின்ற ரூபம்
சிவசத்தி திருமாலின் ரூப மாகும்
வருஉருவே சிவசத்தி வடிவ தாகும்
வந்ததிலும் போனதிலும் மனத்தை வையே! 1

முடிவு

தேனவனாஞ் சித்தருக்குத் திகட்டா மூலி
சிறப்பாக உடலுக்குப் பதியே யாகும்
கோனவனா யிருக்கவென்று குறுக்கிச் சொன்னேன்
குவலயத்தில் பதினாறுங் குருத்தான் முற்றே!
மனோன்மணி கிருபை யுண்டாக வேணும்

---

காலம்

இல்லை

குறிப்பு

இதில் ஞானமார்க்கம் பேசப்படுகிறது.

---

வரிசை எண்: 1621 சுவடி எண்: 813

# இராம தேவர் பாடல் - 10

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை. 150. எழுத்து: தமிழ் ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

காணப்பா யேரியிலே விளைந்த பிண்டம்
கடிதான மாங்கிஷத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தின் வாய்பிளந்து அதினுள் போடு
ஆணப்பா பெண்ணோடே கூடி னாப்போல்
அப்பனே னாதமங்கே யிரங்கும் பாரு
தோணப்பா லோகந்தான் கூட்டி யொன்றில்
சுகமாக யிணங்கனையும் அதினுள் போடே. 1

முடிவு

பாடல்போல் சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பத்துமே சூஸ்த்திரமே பாடல் முத்தே! 10
குருகிடாட்ச முண்டாக வேணும்
நயந்திடக் கழிச்சலுக்கு..................... சிறப்புச் செய்யே. 11
ஊழிவினை மூன்று வகைக் கழிச்சல் முற்றும்.
சற்குரு நாதன் துணை.

காலம்

இல்லை

குறிப்பு

இதில், 6வது ஏட்டில் 10-வது பாடல் முடிந்து 11வது பாடல் ஆரம்பம் ஆகிறது. இது எதன் இறுதி ஏடு என்பது விளங்கவில்லை

---

வரிசை எண்: 1622 சுவடி எண்: 814

# போகர் முப்புச் சூத்திரம் – 5

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

காரணமாயி மூலமாங் குருவின் பாதம்
கருணைபெருஞ் சித்தர்முதல் ரிஷிகள் பாதம்
வாரணமா யெனையாண்ட குருவின் பாதம்
வணங்கியே நித்தநித்தம் வாதம் பார்த்தேன்
பூரணமாம் நிர்மலத்தாய் யெனக்குச் சொன்ன
புகழான வாதத்தின் வழலை மார்க்கம்
காரணமா யிந்தநூ லஞ்சு மஞ்சுங்
கணபதியு கந்தனொடு கார்ப்ப தாமே! 1

## முடிவு

ஆமப்பா அகாரத்தில் உகாரங் கூட்டினால்
அம்பலத்தில் நடம்புரிந்த ஆட்டுங் கரணும்
ஓமப்பா பிரணவத்தை வளைத்துக் கட்டி
ஓடுகிற சரக்கெல்லாம் சுண்ணம் பண்ணும்
நாமப்பா நவலோகந் தன்னி லூட்ட
நலமாக ஒன்பதரை தப்பா தப்பா
காமப்பால் கலவியினால் வேதை சொன்னேன்
கைகண்ட யிந்தநூல் அஞ்சும் முற்றே! 5

போகர் சுவாமியார் முப்புச் சூத்திரம்
அஞ்சு முற்றும்
குருபாதந் துணையாக வேணும்

## காலம்

இல்லை

## குறிப்பு

முப்பு பற்றிய சிறப்புக்கள் இதில் பேசப்படுகிறது.

வரிசை எண்: 1623 சுவடி எண்: 815

# தன்வந்திரி வைத்தியம் - 71

ஏடுகள்: 27. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 20 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆகியாங் கிணேசன் காப்பு
ஆதிமறை வேதங் காப்பு
சோதியா முனிவர் காப்பு
சோதித்த பெரியோர் காப்பு
நீதிசேர் செம்போர் காப்பு
நிவித்திடு ஞானங் காப்பு
அனாதியாய் நின்ற சத்தி
அமைந்திடுந் தேவி காப்பு! 1

**முடிவு**

பேரான உத்திரத்தில் மூவா யிரம் பேர்
பிரபல்லியங் கைகண்டு தேர்ந்தார் பாரு
ஆரான பொன்மொழிதான் மூன்று லட்சம்
அப்பனே அதிலிருக்கும் வாதமெல்லாம்
வாரான முன்னூத்தில் திறந்து சொன்னேன்
வளமான முன்னூத்தைப் பாரு பாரு
னாரான வென்மொழியைக் கண்ட பேர்க்கு
நலமாக வேயோக பதவி முத்தும்! 73

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மாந்த வெண்ணெய், மேகத் தெண்ணெய், பவள பற்பம், வல்லாரை கிருதம், கலிக்கம், அஷ்டவயிரவ மாத்திரை ஆகியவை பேசப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1624 சுவடி எண்: 816

# தெட்சிணாமூர்த்தி கெவுனம் - 14

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 19½ × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ் ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமா மாத்தாள் பாதம்
சோதிநிர மாகிநின்ற கணேசன் பாதம்
சொல்தனக்கு மெட்டாத சுடரொளியின் பாதம்
வேதியனும் நிறைந்துநின்ற நந்தி பாதம்
வேதாந்த சாஸ்திரத்தின் வெளியின் பாதம்
பராபரத்தின் பாதமலர் காப்புத் தானே! 1

**முடிவு**

பார்க்கையிலே யிம்முறையைச் சொன்னா யானால்
பாழான நரகமே யெய்தும் பாரு
யிருக்கையிலே சீஷனுட மனதைக் கண்டு
கைமுறையாய்ச் சொல்லி விட்டேன் ஞான மார்க்கம்
யேர்க்கையிலே ரசமணியின் மார்க்கத் தானும்
எனக்காகச் சொல்லிவிட்டேன் யெழும்பு மார்க்கம்
சேர்க்கையிலே யெம்முறையை உனக்குச் சொன்னேன்
செழுங்கருணை பதினாலுஞ் சிறக்க முற்றே! 14

சற்குரு கிடாட்ச முண்டாக வேணும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் விந்து மணி, கெவுன மணி, முதலான தத்துவங்கள் பேசப்படுகின்றன.

———❀———

வரிசை எண்: 1625 சுவடி எண்: 817

# ரோமரிஷி - 16

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: தத்துவம் + மருத்துவம் அளவு $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

தந்திமுகத்தோன் சலங்கைத்தாள் காப்பு
சகலபொரு ளாய்நிறைந்த தாயார் காப்பு
முந்திஉரைத் தேன்முதனூல் அம்ப துக்குள்
மூலமுதல் திரிகோணம் வாசி வாதம்

சுந்தரன்போ லறிவுடைய மக்களுக்குத்
தொடுகுறியும் விடுநிலமும் தோணுந் தோணும்
யிந்தமுறை பதினாறுஞ் சொன்னேன் மைந்தா
யிரோமரிஷி நூலுக் கெதிர்நூ லொன்றில் தானே! 1

**முடிவு**

ஆகாத வேளையிலே கண்டால் சிப்பி
ஆகாச வித்துவல்லோ முத்தாப் போச்சு
சாகாத யின்னூலில் ஆணைக் கல்லு
சத்தியுவர் சூடநங்கே சத்தே யிட்டால்
வேகாத யின்மூன்றும் சேர்ந்தா லய்யா
வெண்களஞ்சி கெற்ப்பநீர் விட்டார்க் கெல்லாம்
போகாதே குருமுடிக்கும் பாக மெல்லாம்
பூட்டறிந்து பார்த்தவர்க்குப் பொருள்தான் முற்றே! 16

சற்குரு பாதமே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தலைப்புக்கள் இல்லை

---

வரிசை எண்: 1626 சுவடி எண்: 818

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 59. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-13 வரிகள். பொருள்: மருத்துவம், சோதிடம், மந்திரம். அளவு: $26 \times 3\frac{1}{2}$ செ. மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

யிடுமருந்து

யிரதம் காஷயிடை காந்தம் காசு யிடை
வெள்ளைப் பாஷாணம் பருத்தி விதை இவளவு
மறுளுபத்து விதை மூன்று களிப்பாக்கு
நாயிபாகல் விதை மூன்று

**முடிவு**

உப்பு செரக்கா தொவரை பாசிப்பயறு வெது
வன்னிப்பட்டை கண்டங்கத்திரி
ஓம் பதுனாள் —பயறதுளாள முரிவு
இருபதுனாள் சீரகரம் பட்டை தள்ளவும் 69
சுத்த வாய்வுக்கு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பலவிதமான மந்திரங்கள், அதற்குச் சக்கரங்கள், தும்மல்காதல், கெவுளிகாதல், சாலநிகண்டு பாடலாயிருந்ததை அட்டவணை நோட்டாக எழுதியது; திரிவசியம், மற்றும் பலவித மருத்துவங்கள் உள்ளன. 40-வது ஏடு இல்லை.

வரிசை எண்: 1627 சுவடி எண்: 819-a

# தெட்சணாமூர்த்தி பலதிரட்டு-8

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 80 எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பிசுமில்லா ஹிர் றகுமா னிற்றகீம்

பாடுறோம் பலதிரட்டு சூஸ்த்தி ரந்தான்
பாங்கான பாரீப்பதித்தாய் பாதம் போற்றி
நாடுறோம் சகாரமுதல் மகாரந் தொட்டு
நலமான சிகாரமது அதுக்குள் காணும்
தேடுறோ மாதுமுத லுப்புக் காச்சி
சிகசால மாடுகின்ற துருசுங் கூட்டி
ஆடுறோ குகைசெய்து சூதம் விட்டு
அயிந்தெருவில் புடம்போட சிகப்பு மாமே! 1

**முடிவு**

அறுவான அஞ்செருவில்ப் புடத்தைப் போடு
அப்பவல்லோ ஆயிண்டும் காச்சி யாச்சு,
பறுவான பலதிரட்டு சூஸ்த்தி ரந்தான்
பதினெண்பேர் பதநினைந்தால் பலிக்கும் தானே! 8
ஆமீன்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் பலவகை மருத்துவங்கள் பேசப்படுகின்றன.

---

வரிசை எண்: 1628 சுவடி எண்: 819-b

## சட்டைமுனி சூத்திரம்-8

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 80 எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பிஸ்மில்லா யிற்றகீமான் நிற்றகீம்
ஆதியென்ற கைலாச மாயி பாதம்
அழகான யெனையீன்ற அய்யரி பாதம்
சோதியெழு தென்பொதிகை யாசான் பாதம்
தொழுதிரஞ்சி வேதாந்த சூஸ்திரஞ் சொல்வேன்.

**முடிவு**

யேச்சப்பா குருவருளால் வாங்கிக் கொண்டால்
யியல்பான பரதேசிக் கிட்ட மாகாது
பாச்சந்த குருபதத்தில் பொருளை யெல்லாம்
பாங்காக மனதுவைத்து பக்கு வாரே! 8
ஆமீன் ஆமீன்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கெந்தி சூதம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1629 சுவடி எண்: 819-c

## சட்டைமுனியார் மாதாந்திர நூல் - 10

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 80. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

தப்பாது பங்கினி சித்திரையி னுள்ளே
தவறாமல் சகலகுரு வெல்லாம் பண்ணும்
ஒப்பாது தைமாசி ரெண்டுக் குள்ளே
உரைப்பாய்ச் செயநீரை ஊட்டி வாங்கும்
கோப்பான அற்பிசை கார்த்திகை யினுள்ளே
கொஞ்சியதோ ருருக்கினத்தை குமட்டி யேற்று
சேப்பான ஆடிதொட்டா வணியி னுள்ளே
சிரப்பான திராவகத்தை சேர்ந்து வாங்கே!

**முடிவு**

பண்ணுவது மயக்கமுற்று அரியே நென்றால்
பாசாண்டி யாகுமென்று பரிந்து தள்ளே
கண்ணுவது கவனித்து யெதுத்தா னாகில்
சாட்டிரதோர் சாரணையேக் கருதிக் கேளே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் இன்னின்ன மாதங்களில் இன்னின்ன மருந்துகள் செய்ய வேண்டும் என்றும், இந்த நூலைத் தகுதியற்றவர்கட்குத் தரக் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1630 சுவடி எண்; 819-d

# அகத்தியர் சூத்திரம் - 13

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பிசுமில்லா யிற்றகீ மாநிற் றகிம்

காரமென்றால் பல்லியுட கல்லே காரம்
காரத்தில் கடுங்கார மேற வென்றால்
சாரமென்றால் சாரமது பூமி நாதம்
சாதகமாய்ச் சிலத்தாலே யேழு சுத்தி

**முடிவு**

தந்திமா வெள்ளியொன்றி லொருமாப் போடு
தாரணியில் வயது பதி னாறு பிள்ளாய்
நந்துலவு மாத்தாளைப் பூசித் தாக்கால்
நாட்டுவாள் வேதையிட்டு நடத்திப் பாரே! 12

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் 12 செய்யுட்களே உள்ளன. தேசி, அமுரிநீர், செந்தூரம் முதலானவை கூறப்பட்டுளது.

வரிசை எண்: *1631* சுவடி எண்: *819-e*

# போகர் புளியுப்பு

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பிசுமில்லாயிற் றகீமா நிற்றகீம்

கிடையாத புளியிலுப்பை
கேட்கிலும் வல்லோர் சொல்லார்
அடையாத புளியினுப்பின்
அதுவெல்லாம் சொல்லக்கேளு
குடையாத சீனமுப்பின்
கூட்டினு மொருகை யாகும்
அடையாத துருசுசீனம்
பகரிது துகையொன் றாமே 1

**முடிவு**

கண்டதோ ருப்பை விட்டால்
காடுமா சத்து மில்லை
கண்டதோர் பெரியயீசன்
கயற்கன்னிக் கருவி னாரே! 30

போகனாதர் புளியுப்பு துரவு
ஆமீன்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சரக்கு சுத்தி முறை, புடம், கவசம் முதலிய கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1632 சுவடி எண்: 819-f

# அகத்தியர் பூரண சூத்திரம் - வாத முறை

ஏடுகள்: 7 சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ: கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பிசுமில்லாயிற் றகீமா நிற்றகீம்

கைக்குள்ள விதமருதான் வருக வென்றால்
கருவை நான் சொல்லுகுரேன் கனிந்து கேளும்
மெய்க்குள்ளா அன்பதுக்குள் சொன்ன முப்பு
வெளியாகச் சொல்லிவிட்டேன் சுத்தி யில்லை

**முடிவு**

வீரமன்றோ வாதத்துக் காதி யங்கம்
விடுபட்ட தாயாணை உபரசத்தைத் தின்ன
சாரமென்றோ காரமென்றோ துரிசி யொன்றோ
சலச்சவடோ பூனீரு முப்பத்தொ....................

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் 82 முதல் 112 செய்யுட்களே உள்ளன. முப்பு பற்றிக் கூறுகிறது.

---

வரிசை எண்: 1633 சுவடி எண்: 819-g

# மெய்ச்சுருக்கம் - 51

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ. மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பிசுமில்லா யிற்றகீமா நிற்றகீம்

அண்டமுதல் பிண்டமென்ற தேட்டி னாலே
ஆத்தாளும் அப்பனுந்தான் கேட்டி னாலே
கண்டதொளில் லாடுவதும் மேட்டி னாலே
கரைகாண தாட்டமென்ற தேட்டினாலே

**முடிவு**

போதையிலே சொல்லிவிட்டோ மென்று சொல்லி
புகழ்முனிவர் தாமொளிந்தா ரிந்த நூலை
பேதைமைபோ லவரிடத்தில் தொண்டு பண்ணி
பின்புநான் வாங்கிவந்தேன் பேணிப் பாரே! 15

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், இந்திரகோபப் பூச்சி, சம்பளச்சாறு முதலியன கொண்டு செய்யப்படும் மருந்து வகைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1634 சுவடி எண்: 819-h

## சன்னி தீட்சை - 1200-ல் வாதம் ரெண்டாங் காண்டம்

ஏடு: 1. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 30. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

மாட்டோமே ஆண்டொன்றில் யேளு பூவு
மதியான பவரணைதொட் டேளு நாளு
பூட்டோமே பூசை செய்து விறுக னூரு
பூவையரே வேர்மனது கொள்ளா மல்த்தான்

**முடிவு**

புகையாமல் வாதமடங்கிரது போச்சுபொன் போலே
பொன்போலே சோடசமாந் தீட்சை யென்ன
துகையாமல் பதினாறு வயது பின்னே
துணையான பனிரண்டு தீட்சை யாமே

**காலம்**

இல்லை

**குறிப்பு**

வாதம் பற்றி ஓரே ஏட்டில் எழுதப்பட்டுளது. பாட்டெண் இல்லை.

வரிசை எண்: 1635 சுவடி எண்: 819-j

# அகத்தியர் கற்கடை சூத்திரம் - 30

ஏடு: 1. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 30. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியான கன்னி அழியாத பிண்டம்
அப்பனே அதில் விளைந்த பிண்ட மானால்
நீதியா முண்டைக ளில்லா பிண்டம்
நிச்சமாச் சொல்லுகுரேன் விபரங் கேளு

**முடிவு**

ஆனென்ற யெட்டுஞ் சல்லிய மூலம்
அப்பனே யிதுதாண்ட ருதுவே ஆதி
வானென்ற ஆடியதோர் கருவைக் கேளு
வளமான அவன் கால்க்கீள் வலமண் ணாமே

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது கருக்கிடை சூத்திரம். 2 செய்யுட்களே உள்ளன.

வரிசை எண்: 1636 சுவடி எண்: 819-j

# சட்டை முனியார் 1010-ல் வாத அங்கம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $18\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

காணாத வாதத்தின் கருவைச் சொல்வேன்
கலந்துரைத்தார் சித்தர்முதல் ரிஷிகள் கோடி
ஊணாத வாதத்தில் கருவு தோன்றுஞ்
சிறியதோர் வசியத்தில் கருவு தோன்றும்

**முடிவு**

கூரணியும் ஆகாச உப்பைக் காண
குருசிலிடுங் குருசிலிடுங் கும்ப னாளே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் பல வகையான செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன. திரட்டுபோல் காணப்படுகிறது. பூனீரு குரு, அதன் பெருமை சுண்ணக் குகை முதலியன உள்ளன. செய்யுட்களின் எண்கள் தொடராக இல்லை.

---

வரிசை எண்: 1637 சுவடி எண்: 8௭0

# சட்டை முனியார் நிகண்டு - 205

ஏடுகள்: 21. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: நிகண்டு. அளவு: 32×4 செ மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ் ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக

ஆதியந்தமில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
ஆதியந்த மாகிநின்ற ... ... ... ... ... ... ...
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே

**முடிவு**

... ... ... ... ... ... ... ... ...
ன்று மனம்பிடித்து நிலையில் நில்லு
நிட்சேபந்தா னென்னாலச் சித்தி யாமே! 205

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் வைத்திய சரக்குகளின் வெவ்வேறு பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1638 சுவடி எண்: 821.

# போகர் காரசாரத் துறை - 60

ஏடுகள்: 14. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 4-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 34 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஹரி: ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

பரமான திருகோணத் துள்ளாம் வட்டம்
பதயிருந்த குண்டலித்தாய் பாதம் போற்றி
திரமான வாறுதலம் கடந்து மேலே
திருகுசுளி முளைநாடி யூடே சென்று

நூல்

காப்பாக சூத்திரமோ ரெண்டாங் காண்டம்
கண்டறிந்த கொங்கணரே காட்சித் தோமே
வாய்ப்பாக அறுபதுக்குள் கார சார
மகிமை யெல்லாம் உமக்காக வருந்திச் சொல்ல

## முடிவு

மண்ணுமில்லை விண்ணுமில்லை நீயே தானாய்
மகாவகண்டப் பரவளியே மகுத்து வந்தான்
எண்ணரிய ஞானமெல்லாம் நந்தி சொல்ல
யிதமான சூத்திரமுங் கடைதான் முற்றே! 62

## காலம்

ஈஸ்வர வருஷம் ஆவணி மாதம் 20-ஆம் தேதி இடையகோட்டையிலிருக்கும் வயித்திலிங்கம் பிள்ளை குமாரன் வெள்ளையப்பிள்ளையென்று பேர் விளங்கிய அருணாசலம் பிள்ளை தனக்குச் சொந்தமாக வேணுமென்று போகர் சூத்திரம் அருளிச் செய்த காரசாரத்துறை 60 எழுதி முகிந்தது.

முற்றிற்று
சிவமயம்
ராமசெயம்

## குறிப்பு

இதில் காரசாரம் இருபத்தஞ்சுக்கும் பேர், உபசரம் 125-க்கும் பேர், வைப்புப் பாஷாண முப்பத்திரண்டுக்கும் பெயர், பிண்ட பஞ்சபூதம், பஞ்சமுத சரக்குப்பேர், யெரிப்புத்திட்டம் ஊத்து நிதானம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1639 சுவடி எண்: 822-a

# போகர் சூத்திரம்—8

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்; மருத்துவம் அளவு: 14 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 60. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஒன்றான வேதாந்த சூஸ்த்தி ரந்தான்
ஓதுகிறேன் ஆதியுமை பாதம் போற்றி
பன்னான வய்ப்பு முதல் வாதமுஞ் சானம்
பாங்கான பிரணாயங் குளுகை சித்தி

**முடிவு**

ஆச்சப்பா யிந்தஉப்புக் குசை னுள்ளே
உத்தமனே துருசுமது சுண்ண மாச்சே
மூச்சப்பா கருவெல்லாம் வெளியாய்ப் பாடி
முடித்துவிட்டேன் எட்டினுள்ளே மூட்டு வீரே! 9

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், குளிகை செய்து தின்ற விபரம், கருங்குன்றி சுன்னம் செய்யும் விதம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1640 சுவடி எண்: 822-b

# ராமதேவர் கர்மகாண்டச் சுருக்கம்

ஏடுகள்: 23. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4–5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 14 × 3 செ மீ. கி. எண்ணிக்கை 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதிகுரு வானதாரு பிரமன் பாதம்
அனுதினமு நெஞ்சில்வைத்து யிருளே னோக்கி
சோதிவெளிக் கப்பாலே துலங்கஞ் சேத்தி
துணை யெனவே கருமாறண சுருக்கமுஞ் சொல்ல

**முடிவு**

பருசுடைய பூரணத்தை வணங்கிப் போத்தி
பலகாலுங் கேசரத்தில் மனத்தை வைத்து
அறுமெயெனும் அமுற்தமது நிலையைப் போத்தி
அருள்பெருகுங் குறுவையன்றி அம்பாய்ப் போத்தே 30

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 372/228-f 'ராமதேவர் சூத்திரம் முப்பது' போன்றது.

---

வரிசை எண்: 1641 சுவடி எண்: 823-a

# கருவூரார் பல திரட்டு - சாரக்கட்டு

ஏடுகள்: 174. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 29 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சீர்பெருகும் வேதாந்த சூத்தி ரத்தை
... ... ... ... ... ... ... ... ... ... ... ...
கார்பெருகுங் குழலாயி பாதம் போற்றி
கயிலாசத் திருமூலர் பதமும் போற்றி

**முடிவு**

அளங்கிநின்று அலையாமல் ... ... ... ...
ஆத்தாளைப் பூசித்து அமுர்தங் கொண்டு
தளங்கிநின்று ... ... ... டே கற்பங் கொண்டு
சதநித்த மேஅறிவாய் திரட்டு முற்றே 300

கருவூர் நாயனார் பல திரட்டு
எழுதினது முற்று
குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சாரக்கட்டு, அயத்தரம்பிரம், சூத வெள்ளி, லிங்க மெழுகு, சூதக்கட்டு, அஞ்சனம், இந்திர கோபம், சாதிலிங்க முறை, செய நீர் வைப்பு முதலியன உள்ளன.

இதன் பின்னர் அட்டவணை எழுதிய ஏடுகள் மூன்று உள்ளன.

---

வரிசை எண்: 1642 சுவடி எண்: 823-b

# அழுகண்ணிச் சித்தர் பாடல்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள்: பொருள்: மருத்துவம். அளவு: 29×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அழுகண்ணிச்சித்தர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

முப்பு வழலைத் துறை முறை

ஆனமுகவன் யென்னாத்தாளே!
அடியினையைப்போத்தி செய்து
ஆதிதிரு மூலர்-யென்னாத்தாளே!
அன்புவைத்தே னென்தலை மேல்
வாதமுறை போகர்பத-மென்னாத்தாளே!
வைத்தே னுளந்தனிலே

**முடிவு**

அத்தி யதன்பிலமா-யாத்தாளே!
ஆயிர மாம்வயசு
உத்தமர்க்குச் சொன்னேனான்-யென்னாத்தாளே!
யுசர(மாயி) கண்டதெல்லாம்
பத்தியுள்ள பத்தர்கட்கு-யென்னாத்தாளே!
பலிக்கும்பார் கண்டாயே!

அழுகண்ணிச்சித்தர் பாடல் முற்றும்

குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பூரச் சுண்ணம், கெந்தகம், சூதம் முதலியன பேசப்படுகிறது. பெரிய ஞானக்கோவை அழுகணிச்சித்தர் பாடலின் வேறாயது.

இதன்பின் நட்சத்திரக் குறிப்பு எழுதிய ஏடுகள் 2 உள்ளன.

வரிசை எண்: 1643 சுவடி எண்: 823-c

# சட்டைமுனி சோடச சூத்திரம்

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 29×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சோதியெனுந் தூரியவெளிக் குருவே அய்யா
சொற்பெரிய கயிலாய மயமே ஞானத்
தாதியே ஞானத்துக் கேளு மார்க்கம்ந்
தாத்தேயென்று சொன்னா லார்தான் காண்பார்

**முடிவு**

வாமப்பா ரெண்டுகண்ட வாதத் துக்கு
மகத்தான சூத்திரமிரு நூறுஞ் சொன்னேன்
தாமப்பா சூத்திரமு நிகண்டு சொடசச்
சாத்திரமும் பார்த்தவர்க்கு முத்தி யாமே! 53

சட்டைமுனி நாயன்
சோடச சூத்திர முற்றும்
சிவமயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வாதத்தின் குணம் முதலியன கூறப்படுள்ளது.

வரிசை எண்: 1644 சுவடி எண்: 823-d

# சிவவாக்கியர் சூத்திரம்

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $28\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 80. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சிவவாக்கியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாகக் குருவே துணை
பூமி நாத மேகமே
புனல் சொரிந்த பூவதாம்
ஆம டாவி முகத்தி
லாயி ருந்த யிந்தடா
சோம னாத மீறியே
சுருபம் வைத்த சத்தியாம்
ஏம வித்தை பூரண
மிருக்க வட்ட சித்தியே!

**முடிவு**

ஓதி மம்போல் நந்திதா
னுபதேச மென்று செப்புவார்
ஆதி யான பூரணம்
அறிந்து பாரு சோதியே!
சூத்திர முற்றும்
குருபாதம் ரட்சிக்க
தேவிசகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, உப்பு, முப்பு பற்றிய செய்திகளைக் கூறுவது.

---

**வரிசை எண்: 1645** **சுவடி எண்: 823-ஒ**

# கோரக்கநாதர் சமயாதீத விளக்கம்

ஏடுகள்: 40. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4–5 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $28\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கோரக்கர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அத்தி முகவனை மத்த மதலையை
நித்தம் நினைபவர் முத்தி பெறுவரே!
நூல்
உலக முதற்பொருளை
யும்பர்க் குணர்வரிதாம் பொருளை
ஆதியவே தாமகத்தின்
அடர்ச்சியின் முப்பொருளை

முடிவு

பேதியாம் பகிரணம்
பின்கிரியா மண்டம் பேரண்டத்
துள்ளாகு மாபூதத் தண்ட
மாதியான் படைத்த ளித்தங்
கப்பாலைக் கப்பா
லனாதியாய் நின்ற நிலை அறிவிப்பாரோ! 82

காலம்

இல்லை

குறிப்பு

தத்துவ விளக்கத்தோடு சமயாதீதம் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1646 சுவடி எண் 824-a

# தெட்சிணாமூர்த்தி - 1200ல் வைத்திய காண்டம்

ஏடுகள்: 57. சுவடியின் நிலைமை: மிசமிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஹரி: ஓம் நன்றாக
காரணமா மூலமெனும் வெளியில் நிற்குங்
கணபதியும் வல்லவையும் தேவர் காப்பு
பூரணமாம் பராபரனும் சிவனும் ......
பொருந்திநின்ற பஞ்சகர்த்தர் கரணங் காப்பு

முடிவு

நவகோடி சித்தர்களும் காண மாட்டார்
நாதாந்த வளலை வழி திறந்து சொன்னேன்
அவயோகி யாகாதே வெளியே போட்டு
அலையாதே வயித்திய கரண்ட முற்றே! 298

காலம்

இல்லை

குறிப்பு

இதில், ஆகிருஷணம், வித்துவேஷணம், பேதனம், மாரணம்வசியம், பண்டித சாபநிவர்த்தி, திரிலோக லேகியம், கெந்தி பற்பம் சாதிலிங்கம், கெவுரி மெழுகு முதலான பல தலைப்புகள் உள்ளன.

ஏடுகள் மிகவும் செல்லரிக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1647 சுவடி எண்: 824-b

# அகத்தியர் சாலத்திரட்டு 2-வது வாத காண்டம்

ஏடுகள்: 55. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஹரி: ஓம்

கானமுத்தி வயித்தியமுதல்க் காண்டத்தி லுள்ள
சகலமருந் தானதெல்லாம தகுதி யாக
வானமுத்தி பெற்றபெரி யோர்க்கா மப்பா
மகுத்தான வாதவித்தை யினிமேல் சொல்வோம்

முடிவு

போவானே இருதயத்தில் பத்தி முத்தி
புகுவானோ புகமாட்டான் பொன்னா மென்னூல்
பாவான முன்னுரண்டாம் காண்டந் தானும்
பதனமடா ரசவாத மான முற்றே! 294

அகஸ்த்தியர் ஆயிரத்திருநூறு
ரண்டாங்காண்டம் வாதம்
எழுதி முடிந்திது முற்றும்
தெட்சிணாமூர்த்தி ரட்சிக்கவும்
குருவே துணை

காலம்

இல்லை

**குறிப்பு**

இதில், நஞ்சு சுண்ணம், பாஷாணக்கட்டு, கருநெல்லி, வெண்ணாவல், மூலிகை குரு, ரெத்தக் கற்றாளை, பாசாணக் குரு சிறுசின்னி பூநாகக் குரு முதலான பலதலைப்புகள் உள்ளன.

ஏடுகள் அதிமாகப் பூச்சியரித்துள்ளன.

---

வரிசை எண்: 1648 சுவடி எண்: 824-C

# அகத்தியர் சாலத்திரட்டு இந்திரசால வித்தை மூன்றாங் காண்டம்

ஏடுகள்: 22. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

மானொருகை மழுவொருகை (தரித்த நாதன்)
வாதமது ...... ...... ......
நானொருகை யிந்திரமா சால வித்தை
நவிலுகிறேன் நந்திகுரு நாதாக்கள் காண

**முடிவு**

வைப்போகிக்குக் குருவருளே வாய்க்கு ........
மற்றமற்ற வித்தைரியல்லாம் வாயா தப்பா
போங்குரநளி நெஞ்சில்வைத்துதி தரிக்கும் பாரு
தண்டுரைத்துக் குறளியைநான் சாற்றக் கேளே 91

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், விஞ்சன முருமாற்ற, குறிசொல்ல நாதவிந்து மை, விஷமிரக்க, உச்சாபுனம், பேதனம், மாரணம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

ஏடுகள் மிகவும் பூச்சியரிக்கப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1649 சுவடி எண்: 825-a

# அகத்தியர் சாலத்திரட்டு முதற்காண்டம் வைத்தியம் முன்னூறு

ஏடுகள்: 70. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 4$ செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை :முற்றுமுளது.

**தொடக்கம்**

காரணமே மூலவட்டந் தன்னில் நிற்குங்
கணபதியும் வல்லபையும் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையும் சிவனும் நந்தி
பொருந்தி நின்ற பஞ்சகத்தாளி கணங்கள் காப்பு

**முடிவு**

நவகோடி சித்தர்களும் காண மாட்டார்
நாதவிந்து வழலைவழி திரந்து சொன்னேன்
அவயோகி யாகாதே வெளியே போட்டு
அலையாதே வைத்திய காண்ட முற்றே 299
முதற்காண்ட முற்றும்

**காலம்**

முதல் ஏட்டில் சு(ந)ளவருஷம் தை மாதம் 4 - ஆம் தேதி வெள்ளிக்கிழமை அஸ்த்த நட்சேத்திரம், அமுர்தயோகமுங் கூடிய சுபதினத்தில் காலை நாழிகை 9 -க்கு எழுதிய வைத்தியச் சுவடி

பெரியோர்கள் வாலை பழைய சுவடியெனக்கு யெழுதத் தந்து பார்க்கிர குருசெ அவர்கள் பாதாரவிந்தமே துணை.

கடைசிஏட்டில்

**குறிப்பு**

சு (ந)ள வருஷம்பு ரட்டாசி மாதம் 20-ஆம் தேதி திங்கட்கிழமைப ரணிநட்சேத்திரமுங் கூடின காலை மணி 9 -க்கு எழுதி முடிந்தது.

2 - ஆம் காண்டம் எழுதத் துவங்கப்பட்டது.

இது, எமது சுவடி எண் 1646 / 824 – a போன்றது

வரிசை எண்: 1650 சுவடி எண்: 852-b

# அகத்தியர் சாலத்திரட்டு வாதத்துரை இரண்டாங்காண்டம்

ஏடுகள்: 58. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 24½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்

தானமுத்தி வைத்தியகாண் டத்திலுள்ள
சகலமருந் தானதெல்லாந் தகுதியாக
வானமுத்தி பெற்றபெரி யோர்க்கா மப்பா
மகத்தான வாதவித்தை யினைமேற் சொல்வேன்

**முடிவு**

போவானோ விருதையத்தில் பத்தி முத்தி
......... புகமாட்டான் பொன்னா மென்னூல்
பாவான முன்னூறு ரண்டாங் காண்டம்
பதனமடா ரசவாத ...... முற்றே! 595
வாதகாண்டம் இரண்டாங் காண்டம்

முற்றும்

குருபாதம் முன்னிற்க

**காலம்**

இந்நூல் தொடங்கிய காலம்
முன்னர் உள்ள சுவடியில் குறிப்பிடப்பட்டுளது

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 1647 / 824 -b போன்றது

வரிசை எண்: 1651 சுவடி எண்: 825-c

# அகத்தியர் சாலத்திரட்டு மூன்றாங் காண்டம் - இந்திரசால வித்தை

ஏடுகள்: 65. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 24½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
வாதமது வளியுமாத்தா ளாதி யந்தம்
நரனொருளக யிந்திரமா சால வித்தை
நவிலுகிறேன் நந்திகுரு நாதாக்கள் காண

**முடிவு**

வாரடா வந்தாக்கால் மூன்றாங் காண்டம்
வகையான மாரணம்செய் சனத்திற் சாவான்
பாதகமே செய்யாதே ......... .........
பாடியிதின் வெவ்வேறே காண்ட முற்றே! 290

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 1648/824-c போன்றது.

**வரிசை எண்:** *1652* **சுவடி எண்:** *825-d*

# அகத்தியர் இந்திர சாலத் திரட்டு - மாந்திரீகத் துறை 4-ஆம் காண்டம்

**ஏடுகள்:** *3.* **சுவடியின் நிலைமை:** மிகமிகப்பழுது. **பக்கத்திற்கு:** *8-9* வரிகள். **பொருள்.** மாந்திரீகம் **அளவு:** $24\frac{1}{2} \times 4$ செ.மீ. **கி. எண்ணிக்கை:** *60.* **எழுத்து:** தமிழ். **ஆசிரியர்:** அகத்தியர். **முழுமை:** முற்றற்றது.

**தொடக்கம்**

போடி வித்தை

வேறுதுறை யறியாத சித்தர்க் கெல்லாம்
மெய்யான இந்திரமா சரலம் பாடக
கூறுகிறேன் மாந்திரீக வரலா றெல்லாம்
குமரகுரு பரமுருகா சரணம் போற்றி

**முடிவு**

நாட்டிச்சவ் வாது புனு குடனே வாசந்
தாய்தனக்குப் பூசித்து யதினுள் ளேதான்
தளபாட முன்சொன்ன காட்டுந் பட்சி
மாயபக வழி நிறுத்திச் சேவி சேவி
வாரடிவந்தேரிச் சாடென் றோதே 915
ஓதையிலே............

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் மோடிவித்தை, சுட்டக்கள்ளி முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1653 சுவடி எண்: 826

# கொங்கணர் முக்காண்டம்

ஏடுகள்: 90. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 1300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றறாது.

**தொடக்கம்**

ஹரி ஓம்
சவுக்கார எண்ணை போக்க
போசிசென்ற சவுக்கார எண்ணை போக்க
புகலுவேன் ......... ......... கூட்டி
வாச்சதுதாள் ரவிமுகத்தில் உலரப் போட்டு
..............ச்சு வெச்ச பின்பு

**முடிவு**

வெட்டிய மாவன் பட்டை வில்வத்தின் பழத்தின் சாறு
வெட்டிய முத்தக்காசு நிலவேம்பு பிறக்குமாகும்
தட்டிய சுக்குக் கூட்டிச் சம.........
காச்சிக் கொண்டால் ...... பூர்த்தி

**காலம்**

இல்லை

**குறிப்பு**

ஏடுகள் தூளாகும் நிலையில் உள்ளன.

இதில், ஜாலம், வாதகாண்டத்தில் சவுக்காரச் சுன்னம், உப்பு தொடுகுறி கட்டின மறியவும். குருமுளாக்கி நீத்தின சரக்கு அறியவும் முதலான பல தலைப்புகள் உள்ளன.

ஏட்டில் தலைப்பு இல்லை சுவடியில் எழுதி ஒட்டப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1654 சுவடி எண்: 827

# அகத்தியர் கட்கம் - 1500

ஏடுகள்: 275. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $34\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 6000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை:

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 1168/561 அகத்தியர் பன்னிரண்டு லட்சத்துக்கு சூத்திரம் – 1200 போன்றது.

---

வரிசை எண்: 1655 சுவடி எண்: 828-a

# வயித்திய சூடமணி

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8–10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $32 \times 4$ செ.மீ. கி.எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

நன்றாக

மங்கலத் தொகையும் பஞ்ச லக்கணமும்
வளம்பெறு ஞான முன்னூறும்
சங்கமுத் தமிழின் முறைதெரிந் தவர்க்குத்
தயைபுரிந் தருள்வளி தருவோன்

**முடிவு**

செப்புக மூன்று மூக்கில்ச்
செறிந்தகன் னத்தில் நாலு
மெய்ப்பது விரண்டு நெற்றி
விளங்கிய பிடரி ஒன்று
ஒப்புறு கழுத்தி லேனச
உரைத்திடும் வாதம் பத்து
தப்புறு வாத சன்னி
தானொரு பத்து மூன்றே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வாத சன்னிய கூறுகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1656 சுவடி எண்: 828-b

# சூலை நிதானம்

ஏடுகள்: 20. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 32×4 செ.மீ. கி.எண்ணிக்கை: 850. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியான் வகுத்து நால்வர்க்
கருள்செய் யாயுள் வேதம்
ஓதிய சூலையீ ரொன்பா
னுறுபெயர் குணங்கள்

**முடிவு**

கொடுநீ கரண்டி மண்டலமுங்
கொடிதாஞ் சலப்பிற மேகமதால்
கூறுந் தொந்த சூலையெல்லாம் பொடியம்
பக்கசூலை இவை போகுமென்று புகன்றனரே. 120

சூலை நிதான முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வயிற்று வலிக்குண்டான காரணங்களும் மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1657 சுவடி எண்: 828-c

# கெற்பக் குறி - 16

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பாரப்பா பெண்மலடாங் கெற்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்டாய்த் தானே
ஆரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலடு ஆரு மில்லை

**முடிவு**

யதுவாகு மிதுவாகு மென்று யெண்ணி
யலைந்துலைந்து திரியாமல் அருளை நோக்கிப்
பொதுவாகும் நினைவுகொண்டு யிருப்போ ராகில்ப்
புத்திசித்தி முத்திமுதல்ப் பனித மாமே! 16

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மலடுபற்றியும், கருமுறை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

---

**வரிசை எண்: 1658** **சுவடி எண் 828-d**

# குண வாகட கவி

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: மூற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியாம் யேகநாத
னடியினைத் தொழுது போற்றித்
தீதுறு வியாதி தன்னைத்
தெளிவிட னறிய வேண்டிக்
கோதில்லா பேசுங் நல்லோர்
குணமிகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே
நெறியுட னுரைத்தார் தாமும்

முடிவு

விஷநீர் முத்தித் திமிர்வாதம்
மேனியில் தங்கித் தடிப்பாகும்
நிசமாய்க் கால்கை வெடிப்பாகும்
சியமாய்ப் பாச் சொல்லுகிறேன்
தீரும் தீரும் விஷநீரே! 80
குருவே துணை

காலம்

இல்லை

குறிப்பு

இதில், குணகவி, கெர்ப்ப ரோகக் கவி, முதலியன கூறப்பட்டுள்ளன. செய்யுள் முடிவில் வேறு என்றிருப்பதனால் இது குறை சுவடி போல் காணப்படுகிறது.

வரிசை எண்: 1659 சுவடி எண்: 828-e

# வாத நிதானம்

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 32×4 செ.மீ. கி. எண்ணிக்கை 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஆதி யானுமைக் கோதிய மாமறை
வாத ரோக வகையுங் குணங்களும்
தீது சாத்தியம் சாத்தியச் செய்கையும்
பேதி யாமல்ச் சிகுட்சையைப் பேசுவாம் 1

முடிவு

தாவு சிரசுர பாதமடி படி டோதி
இடையிடைத் தாள்வி பாயும்
நடுவர் வாக்கினுரையது வாயினிடை
பிதிராய் வெ வுரை தடுமாறி யுரையது
கூறலரிய வொண்ணாத்
தாவி முயலகன் வாதமிது வென
நீதிமுனி பகர்வேதமே. 117

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், அரைக்கு மேலே சாத்தியம், பத்துக்குப்பேர் காட்டசாத்திய முப்பதுக்கும் 1 வகை, வாத சருவாங்கம் கபாலவாத குணம், நேத்திரவாத குணம், அலகுவாதத்தின் குணம், பிடரிசி வாதத்தின் குணம், கடைவாதத்தின் குணம், இவைக்கு ஒத்தல், சிந்தாமணிக்குளிகை முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1660 சுவடி எண்: 828-f

# கெந்தக ரசாயனம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32×4 செ.மீ. கி.எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர் அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கோலக் கெந்தகம் ஆறு பலங்
குருவை விரவிச் சுத்தி செய்து
சிலந் திரிகடுகு திரிபாலை
சித்திர மூலம் வாலுவை
காரக் காரக் கோலறு களஞ்சி
கையான் பொடி சிறுனாகப்பூ
ஏலம் அரத்தை கிராம்போமம்
யிருசீ ரகம்வகைக்கு நாற்களஞ்சே. 1

**முடிவு**

நாலு களஞ்சி லோகபற்பம்
நல்லசீனிக் கதலிப்பழம்
கோலம் பெறவே நெய்தேனில்
களஞ்சொன் றருந்த கிரந்திபல
கோலச் சூலை பதினெட்டுங்
குட்டங் குணமிவை தீரும்
வாலப் பருவ விளிதுலங்கு
மதமாங் கெந்தக ரசாயனமே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் ஒரு ஏட்டின் பாதியில் மட்டுமே கெந்தக ராசயனம் எழுதப்பட்டுள்ளது. பின்னர் ஏடுகளில் வாத வைத்தியம் எழுதப்பட்டுள்ளது. சுவடி கெந்தக ரசாயனம் என்ற பெயராலே பதிவாகியுள்ளது.

---

வரிசை எண்: 1661 சுவடி எண்: 829-a

# சுந்தரானந்தர் சூத்திரம்

ஏடுகள்: 20 (3–22). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 700. எழுத்து, தமிழ்] ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

..................
நாமப்பா யிச்சிலத்தில் வீர பூரம்
நஞ்சான பிசினோடு ....................
......... மென ரெத்தமாச்சு
சங்கைபெத்த உப்பதனைக் கட்டிப்பாரு

**முடிவு**

தானென்ற (யேல) மதையறிய வேணுந்
சத்திசிவம் ரெண்டையுந்தா னறிய வேணும்
கானென்ற கும்பிடுத லறிய வேணும்
கருவான அண்டவித்தை அறிய வேணும்
தானென்ற கற்பமது உண்ண வேணும்
சாத்திரந் தானிது நூத்திப் பத்தே!
சுந்தரானந்த சூத்திரம் எழுதி முடிந்தது
முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D-669/342-b 'சுந்தரானந்தர் பாடல் சூத்திரம்' போன்றது.

வரிசை எண்: 1662 சுவடி எண்: 829-b

# ஞானபிண்ட உற்பத்தி

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஒன்றான கயிலாச பரம்பரையாய் வந்த
உத்தசிவ மூலகுரு பதத்தைப் போற்றி
நன்றான மாலாங்கர் எழுபர்பதம் போற்றி
நலம்பெரிய பேசகருட பதத்தைப் போற்றி

**முடிவு**

வானென்ற வதுகடந்து சிலம்பொலியில் புக்கி
மயங்கியங்கே மாரிவந்தென் மக்காள் மக்காள்
பானென்ற ரவிகோடி காந்தி யான
பரமகுரு மூலபதம் பணிந்தேன் முற்றே! 23
திருச்சிற்றம்பலம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பெண்கள் கருத்தரிக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1663 சுவடி எண்: 829-c

# கொங்கணர் சோடச சூத்திரம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8. வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 80. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆயிரத்தன் னூத்திலே அரிந்தெடுத்த மந்திரம்
பாயிரத்துள் வானபாடல் பத்துநான்கு வொன்றிலே

**முடிவு**

சாரும் சிங்கி துரிசு சவ்வீரன்
சோகுங் குமரிதரா லப்பியே
சாகியும் நல்ல ......ன்னி தனிலே
வேக வேகொடு ஒன்பது மெய்யிதே! 17

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D. 677 / 347 – b. கொங்கணர் சோடச சூத்திரம் 40 போன்றது. இதில் 17 செய்யுட்கள் உள்ளன

வரிசை எண்: 1664 சுவடி எண்: 829-d

# கொங்கணர் சூத்திரம் - 41

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு 8. வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆயிரத்தி னூத்திலே அறிந்தெடுத்த மந்திரம்
பாயிரத்து ஞானபாடல் பத்தும் வான்கு மொற்றிலே

**முடிவு**

குறியான மூலங் குலாவு மவுனத்தில்
அறிவாய் சிவசத்தி அடிச்சத்தி யாமே! 41

சிவமயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D. 677 / 347 - b சுந்தரானந்தர்
சோடச சூத்திரம் -40 போன்றது.

வரிசை எண்: 1665 சுவடி எண்: 829-e

# மனோன்மணி கக்கிஷ பீடம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மந்திரம். அளவு 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஓமென்ற கணபதியின் பாதம் போற்றி
ஒளிகண்ட நாதாக்கள் பாதம் போற்றி
ஆமென்ற கக்கிஷத்தைப் போகர் நாயர்
அனுக்கிரகம் அறுபத்து நாலும் பாட

**முடிவு**

பரையான பகவதிதாய் பாதம் போற்றி
பண்பான அகாரமுதல் ஷகாரம் நாட்டு
வரையான பஞ்செழுத்தும் யேளெ ஞத்தும்
நாட்டுவன்மை பகவதாய் வளியி தாமே 14

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் மனோன்மணி எழுந்தருளச் செய்தல் முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1666 சுவடி எண்: 829-f

# ஆதி சிதம்பர நடனம்

ஏடு: 1. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×8 செ.மீ. கி. எண்ணிக்கை: 40. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கண்டலென யீசனுக்கு
சன்னாவத்து தான் மூன்று
ஒன்றிய வீரம் சோமன்
ஒடுங்கிய உப்பே பானம்

முடிவு

ஊத்தான வழலை விட்டால்
உலகத்தில் வாதமா
மோச்சென்ற நீரை விட்டால்
செளுங்களுச மாமோ
சொல்லுக கூத்தானைக் காணாவாதி
கோடிதாள் செளன மென்ன 641

காலம்

இல்லை

குறிப்பு

இது, ஏதோ ஒரு சுவடியின் 641-வது பாடல்.

வரிசை எண்: 1667 சுவடி எண்: 829-ஓ

# ஆதியில் என்னைப் பெற்ற ஆத்தாள் நிருவாணி பூசை

ஏடு: 1. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

உத்துப்பார் கருத்தை யூனி ஓடாமல்ப்
புலன்களொடும் ஒத்துப்பார்
கிணேசன் சரணம் பார்

முடிவு

நலம்பித்த விடரடராமல்
மூச்சிந்தப் படியே பேறு
உத்தமர் ஒருத்தர் காணே! 581

காலம்

இல்லை

வரிசை எண்: 1668 சுவடி எண்: 829-h

# கடைக்காண்டம் சுருக்கம் — 10

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8. வரிகள். பொருள்: மருத்துவம் அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பிற்காண்டம் சொல்லுகிறேன் அய்ங்கரனே காப்பு
பின்கலையும் பீடகலையுஞ் சுழினை தானும்
நற்கண்டம் புவனையுட சக்கரத்தை
நன்றாகச் சொல்லுகிறேன் நாற்சதிர மப்பா

**முடிவு**

உருதி சொல்வேன் ஒகோகோ வென
லேகம் பாதி செய்து
மற்றதந்தப் பதியிலே அறையின் தள்ளி
மைந்தனே யின்னமொரு வகைதான் கேளு
அத்துருவ அரை தனிலே அஞ்சரம் வீட்டில்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சிதம்பர பூசை முதலியன கூறப்பட்டுள்ளன

வரிசை எண்: 1669 சுவடி எண்: 829-i

# தெட்சணாமூர்த்தி - 5

ஏடுகள்: 2 சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஒளிவான பூரணதைப் பூசை செய்தால்
ஒருகாலும் சாவில்லை உயர்வார் தானார்
வெளியான மூலத்தே நந்தி யென்று
மின்கோதே அம்மென்றும் விண்டு சொன்னார்

**முடிவு**

ஒன்றான பொருளிதுவாம் உத்துப் பாரு
ஓகோகோ என்னசொல்வேன் வரமே
யென்றேதான் புதுமை புதுக் கதித்தெ ழுந்தே
காணார்யிப் போதே என்று பொலிகழ்ந்து விகழ்த்துவாரே! 5
தெட்சிணாமூர்த்தி அஞ்சு
எழுதி முடிந்தது

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் அகரா உகாரங்கள் விரிவாகப் பேசப்படுகின்றன.

---

வரிசை எண்: 1670 சுவடி எண்: 829-j

## தெட்சிணாமூர்த்தி - 8

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அறிந்துபார் ஒருகோணம் சுளியா நிற்கும்
அதுக்குள்ளே வங்குசிங்கு ரெண்டும் நிற்கும்
நிறந்துபார் சிவசத்தி ரெண்டெ ழுத்துமாகும்
நேராக யிதன்பேர்தான் நந்தி நந்தி

**முடிவு**

சாகாத காலையங்கே யறிவிப் பான்பார்
சற்குருவும் அவனாவான் தானு மாவான்
வேகாத பாண்டமென்றே அருளிச் செய்து
வேறுவெளியும் பரவெளியும் அருள லாமே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் 7 செய்யுட்களே உள்ளன. காயசித்தி முதலியன உள்ளன.

வரிசை எண்: 1671 சுவடி எண்: 829-k

## தெட்சிணாமூர்த்தி - 10

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D. 1050/469-g போன்றது.

வரிசை எண்: 1672 சுவடி எண்: 829-l

## தெட்சிணாமூர்த்தி - 12

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D. 1630/819-d போன்றது.

வரிசை எண்: 1673 சுவடி எண்: 829-m

## தெட்சிணாமூர்த்தி வகாரம் - 16

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூறணமாம் புங்கவன்றன் பாதம் போற்றி
புகள்பெரிய சிவகாமி ஆத்தாள் போற்றி
காறணமா மறிவில்நின்று மனத்தைப் போற்றி
கந்தனுக்குங் கருணை பெறச் சீஷனாகி

**முடிவு**

கூறினபின் நீராச்சு வீரம் பூரம்
கூடவிட்டுச் சரக்குகளில் தடவி வாட்டி
மாறினபின் கடிகையஞ்சு ருக்கு தாக்க
மாண்டுபோம் நவலோகும் பொன்னாகும் பாரே. 16
தெட்சிணாமூர்த்தி வகாரப் போக்கு
சூத்திரம் பதினாறு.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், செந்தூரம், இரசவாதம் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1674 சுவடி எண்: 829-ர

# போகநாதர் - 5

ஏடுகள்: $1\frac{1}{2}$. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25×3 செ.மீ: கி.எண்ணிக்கை: 80. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: மூற்றுமுளது.

**தொடக்கம்**

காறணமாம் மூலமாம் குருவின் பாதம்
கருணைபெறுஞ் சித்தர்முதல் ரிஷிகள் பாதம்
வாறணமா யெனையாண்ட பெரியோர் பாதம்
வணங்கியே நித்தநித்தம் வாதம் பார்த்தேன்

**முடிவு**

நாமப்பா நவலோகந் தன்னி லூட்ட
நலமாக ஒன்பதரை தப்பா தப்பா
கரமப்பா கல்வியினால் தேவை சொன்னோம்
கைகண்ட யிந்தனூல் அஞ்சு முத்தே. 5

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், இரசவாதம் சொல்லப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1675 சுவடி எண்: 829-o

# கொங்கணர் - 8

ஏடுகள்: 2½. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

அடிசெறிக்கி யென்றழைத்தால்ச் சுந்தரமே அய்யா
அப்பவல்லே கேட்டபொரு ளெல்லா மீவாள்
தடியடிதா னுந்தனுக்குப் போடி யென்றால்
சண்டாளா சாகாதே வீட்டே போடா.

**முடிவு**

உருக்கி நித்தம் தினமழைத்தால் முடியு மோதான்
ஓகோகோ போலப் பெண்ணில்லை கண்டாயி கண்ணாடி
மறகாதே யெடைச்செருக்சி சத்தே கூடி
பேரின்ப வீட்டிலிருந்து நிதம்பிளைப்போம் வாடி 8

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது சிலேடை முறையில் கூறப்பட்ட செய்திகளாகும். தத்துவப் பொருளுணர்த்து கிறது. இது எமது சுவடி எண் D. 1063/473 போகர் ஞானம் போன்றது.

---

வரிசை எண்: 1676 சுவடி எண்: 829-p

# தெட்சிணமூர்த்தி - 16

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதி நடு மூலத்தின் வெளிக்கு ளான
அய்ங்கரனே அடிதொழுது அரனே போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்லச்
சூத்திரந்தான் பதினாறு சுருக்கம் பாட

**முடிவு**

பகருவாள் விட்டகுறை தொடுத்தோர்க் கெல்லாம்
பதினெண்பேர் நூல்பார்த்து வகைதோ ணாது
பகருவாள் பகருவாள் நிலைநின்று வாசி யூதில்
பலிக்குமடா சூத்திரந்தான் பதினாறு முத்தே 14

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் பதினான்கு பாடல்களே உள்ளன. ஆயினும் 14 - ஆம் பாடலில் பதினாறு முற்றே என்றுளது.

---

வரிசை எண்: 1677 சுவடி எண்: 829-q

## தெட்சணாமூர்த்தி - 10 பிண்டநீர்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7–8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D. 361 / 226 - e போன்றது.

---

வரிசை எண்: 1678 சுவடி எண்: 829-r

## மச்சமுனி சூத்திரம் - 80 வகாரம்

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லென்னாளுந்
தப்பாமல் எண்பதிலே சாருவா
யப்பாநின் மச்சமுனி யாகி மறை நான்கும்
மைங்கரனே மெச்சவும் நன்மை தருவாய்

### முடிவு

அப்பா பராபரத்தான் யெழுத்தைச்
செப்பச் சிவமாம் சேர்வும் முத்தியே 82
மச்சமுனியார் -82

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், முப்பு, வாதம், சுண்ணம், வீரம், பூரம் முதலியன சொல்லப்பட்டிருக்கிறது.

---

வரிசை எண்: 1679 சுவடி எண்: 829 -S

## கொங்கணர் - தீட்சை வழலை

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25 × 3 செ.மீ கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

சாஸ்த்திர மாறுகாண்டம் விரித்துச் சொன்னேன்
தனைக்குறுக்கி முன்றுகாண்டம் அதன் நூறு முத்தும்
சூஸ்த்திரந்தான் மூன்றுரைத்தேன் சுற்ப நூறு
தோசமில்லை மோகமில்லை சொல்லக் கேளு

### முடிவு

அரிந்தவகை கடுங்காரம் ஆருஞ் சொல்லார்
அதை விட்டுக் கடுங்காரம் வெவ்வே றென்பான்
சிந்தையிலே ஞானமொழி கூடும் போல
.......... .......... .......... ..........

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில் தீட்சை யென்ற வழலை மார்க்கம், கல்லுப்பு முதலானவை கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1680 சுவடி எண்: 829-t

# கொடிக்கவி

ஏடு: ½. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். பொருள்: இலக்கியம். அளவு: 25×3 செ மீ. கி. எண்ணிக்கை 20. எழுத்து: தமிழ். ஆசிரியர். உமாபதிசிவம். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

சிவமயம்

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா வுணர்வாய தன்மையனை — நோக்கிப்
பிறித்தறிவு தம்முட் பிரியாமை தானே
குறிக்குமருள் நல்கக் கொடி.

## முடிவு

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்து
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து — நெஞ்சழுத்திப்
பேசுமெழுத் தோரெழுத்துப் பேசாமல் நின்றெழுத்துக்
கூசாமற் கூறக் கொடி.

கொடிக்கவி முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது சைவ சித்தாந்த சாத்திரங்கள் 14 -னுள் ஒன்று. சிதம்பரம் திருக்கோயிலில் திருவிழா தொடங்கும் போது ஏறாமல் இருந்த கொடியை இந்தச் சாத்திரத்தைப்பாடி உமாபதிசிவம் கொடி ஏற்றி வைத்தார்.

வரிசை எண்: 1681 சுவடி எண்: 829-u

# ஞானசாரம்

ஏடுகள்: 14½. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: இலக்கியம். அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர் அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஞானசாரம்

ஒருமைவெண் கோட்டுக் கன்றை
யோரிரு கன்னக் குன்றை
சொரியுமும் மதத்து நால்வாய்
அய்ந்தரத் தும்பி தன்னை
யருவிகன் னாறா மேழை
யன்பருக் கன்றி யெட்ட
திருவடி நலஞ்சே ரின்பத்
தெய்துவாஞ் சிந்தை செய்வாம். 1

**முடிவு**

அனுபவத் தனுவ தாகி
அழியுமால் போற்றி லன்பா
லனுபவ மிழந்த நாளைக்
கழிவுகை மாற தாகி
யனுபவ காயங் கொண்டே
யனுபவ மிழப்பு வாழ
வனுபவம் புலவி யானா
ரருணிலைக் குரியோர் தாமே! 114

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, 'ஞானசாகரம்' என்ற நூலாகக் காணப்படுகின்றது. மெய்ஞ்ஞானம் பற்றிக் கூறப்பட்டுளது.

இதன் பின்னர் ஷெ சுவடியின் அட்டவணை ஏடு உள்பட 4 உதிரிஏடுகள் உள்ளன.

---

வரிசை எண்: 1682 சுவடி எண்: 830

# வைத்திய வாகடம்

ஏடுகள்: 118. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 26 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கௌசிகர் குழம்பு

அல்லா உதவி செய்யவும்

சர்வேஸ்பரனாய் சகலமும் படைத்த

... ... ... ... ... ... ... ... குருபரன

சீசர் குளம்பு சூரணத்தைத் திருவிரல்

... ... ............ ... ...

**முடிவு**

பீங்கானில் வைத்து மேலும்

அதே மாதிரியுள்ள பீங்கான் கொண்டு

மூடி சந்துவாய் சீலை வலுக்கச் செய்து

காயவைத்து ஒரு மிடாவில் அரைத்திறம்

குருமணல் யிட்டு அதின்பிறகு மருந்து கொ......

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், கோடாசூளி மாத்திரை, காடிக்காரச் சுன்னம் 220 வியாதியைக் கண்டிக்கும், மூன்று வித பேதிக்கும் யுனானி கட்டுவாதி மாத்திரை, மகாவீரியதாது புஷ்டி லேகியம், கண்மாத்திரை, சன்னி 13-க்கும் கண்ணுக்கு கலிக்கம், கடுப்புக்கு மருந்து, சகல கழிச்சலுக்கும் தவணத்துக்கும் சூரணம், கல் அடைப்புக்கு, பிரமியத்துக்கு மருந்து, முலைக் குத்துக்கு மருந்து முதலான பல தலைப்புகள் உள்ளன. மருந்துப் பொருள்களும் செய்முறையும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1683 சுவடி எண்: 831-a

# யூகிமுனி கும்மி - 1000

ஏடுகள்: 80. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $32 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: யூகிமுனிவர். முழுமை: முற்றத்றது.

**தொடக்கம்**

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கடவுள் வாழ்த்து விருத்தம்

(முன்னேடு)

உலகெலாந் தமக்குள் ளாக்கி

உதித்திடுங் கதிர்போ லெங்கும்...

நூல்

ஆதி கணபதி பாதமெனத் துதி
ஆறுமுகன் பதங் காப்பாமே 1
பாதி மதியணிந் தார்சிவனும்
உமை பார்வதிக்கி அனுக்கிரகஞ் செய்ய 2

முடிவு

நமஸ்கரித்து மிக்கவே கமலமுனி
மார்க்கஞ் சொன்னேன் - தந்தன 25

79-வது ஏட்டின் இறுதி)
யிஞ்சிசேர் பனவெல்லம் அனுப்பானம் 10-நாள் குடுக்கவும்
யிச்சா பத்தியம்.
திக — சுப்பிரமணிய பிள்ளை

காலம்

இல்லை

குறிப்பு

இதில் முதல் ஏடு மட்டும் கும்மி சந்தம். பின் பாடல்கள் தந்தன-சந்தம் அதன்பின்: மனோரஞ்சித லேகியம், அகஸ்த்தியர் சந்திரோதய லேகியம், மச்சமுனி வாத குடோரிலேகியம், புலத்தியமுனிவர் மதன சங்கிரதலேகியம், புசுண்டருடைய இரும்பான லேகியம், கருவூரார் ஆரோக்கிய லேகியம், திருமூலர் புஜபல திருமந்திர லேகியம், சட்டமுனியார் சூரியப்பிரகாச லேகியம், போகனாதர் மேகனாத லேகியம்' இராமதேவர் ஆனந்த நெல்லி முள்ளி லேகியம், தேரையர் மிளகாதி லேகியம், அபதஞ்சலியார் விந்தை லேகியம், அகத்தியர் ஏலாதிச் சூரணம், பிடிநாக்கீசர் ருகின்வேர் லேகியம், தன்வந்திரி பித்தசாந்தி சூரணம், புசுண்டர் லவங்கப்பட்டை சூரணம், கள்ள கெற்பத்துக்கு மருந்து - விழுவதற்கு, இப்படிப்பல முனிவர்களின் மருந்துகள் செய்முறை கூறப்பட்டுள்ளது. அகத்தியர் சூத்திரம் என்றுளது.

வரிசை எண்: 1684 சுவடி எண்: 831-b

## அகத்தியர் பூரண சூத்திரம் - 16

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள் மருத்துவம். அளவு $32 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

குறிப்பு

இது எமது சுவடி எண் D. 1390/700 – f அகத்தியர் சுருக்கம்-16 போன்றது. பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண்: 1685 சுவடி எண் 831-C

# பிரமமுனி சூத்திரம் -12 சுருக்கம்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு! 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 32 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக

சன்னாசி மூலியென்று சாண்நி லத்தில்
தலைவிரித்து யிருக்குமடா தவசி மூலி
பின்னாசை வையாதே னன்றி வொன்று
பிடுங்கிவந்து தடவிடுவாய் தாம்பி ரத்தில்
சொன்னாலும் தெரியாதோ தீயிற் சுடர்தனை
பொன்னாகும் சன்னாசி லாட மூலி
பூவாகும் காயாகும் பிஞ்சு மாமே 1

## முடிவு

மாவென்பாள் துரியமணி பூரகத்தி னுள்ளே
வந்தமுந்த னாதசத்தி மவுன மூலம்
ஒவென்பாள் உகாரத்தின் ஒளியைப் பாரு
உதித்தொடுங்கி பன்னிரண்டு ஒன்றாய் முற்றே! 12

பிரமமுனி பனிரெண்டு
முற்றுப் பெற்றது

## காலம்

ஆனந்த வருஷம் மாசி மாதம் 21 - ஆம் தேதி மதுரை லயன் தெருவிலிருக்கும் நேட்டிவ் டாக்டர் பெரியசாமிக்கு மேற்படி யூர் பழனிக்குமாரு பண்டிதன் எழுதினது

முற்றுப் பெற்றது

## குறிப்பு

இதில், இரசவாதம், தங்கச் சுண்ணம், துருசுச் சுண்ணம், முப்பூ எடுக்க விபரம், ஊசிநீர் தேசிநீர் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1686 சுவடி எண்: 832

# தெட்சிணாமூர்த்தி ஞானகாவியம் - 1000

ஏடுகள்: 79. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $32\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதிபர மானபதி கருணை கூர்ந்து
அடிமுடியும் நடுவான அருளே காப்பு
பாதிமதி சடைக்கணிந்த பரனே காப்பு
பரஞ்சுடர்க்கும் பாதியுடன் பகுத்த சோதி

**முடிவு**

கேளப்பா கால்முகங்கள் சுத்தி செய்து
கெணிதமுடன் விபூதியையுத் தளமாய்ப் பூசி
வாளப்பா இந்திரன்தன் திசையை நோக்கி
வலக்காலை யிடக்கால்மேல் மடித்துப் போட்டு
கேளப்பா ரேசகபூ ரகமும் பண்ணி
குருபுத்திர னென்று ...........

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் 350 செய்யுட்கள் உள்ளன. 351 வது செய்யுள் குறை. தொடக்கஅட்டை ஏட்டில் 'அகத்தியர்காவிய மாயிரத்தில்-350' என்று எழுதப்பட்டுளது. இதில் கணபதி பூசை சுப்பிரமணியர் பூசை சிதம்பரசக்கரம், கருநெல்லி, கொங்கணர் பெருமை முதலியன சொல்லப்பட்டுள்ளன. இதன் பின் 6 ஏடுகள் ''...ங் கென்பது அனுபோகம்'' என்று தொடங்கப்பட்டுளது மருத்துவமே.

வரிசை எண்: 1687 சுவடி எண்: 833-a

# மச்சமுனி மெய்சுருக்கம்

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனியார். முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

குருமுனியே நந்திகுரு பாதமும் கொண்டு
உறுதிபெற மெய்ச்சுருக்கம் ஓதவே - குருவைக்
கொண்டாடிக் கோனேடெழில் குறிப்பறிந்து முப்பொருளைக்
கண்டார்க்குப் பூரணமே காப்பு 1

### முடிவு

பொருளான ததுகண்டு காட்சி கண்டு
பொய்யாமல் மெய்ச்சுருக்கம் மய்யன் சொன்னார்
பொருளான பொருள் பெறவு மருளே பெற்று
போத்திடுவா யிருப்பாமெய்ச் சுருக்க முற்றே! 53

பரதேவதை துணையாகவும்

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், ஆள் மறைப்பு, முதலானவை சொல்லப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1688 சுவடி எண்: 833-b

## இராமதேவர் - 216 - 500

ஏடுகள்: (13-36)24. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 3½ செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

### குறிப்பு

இது எமது சுவடி எண் D. 1000/450-h போன்றது.

தலைப்பு 216- 500 என்றிருப்பினும் இது 100. ஆயினும் சுவடி எண் 450 hல் 103 பாடல்கள் உள்ளன. அதுவே முழுமை இதன் பின்னர் 1½ ஏடுகளில் 'பித்தசுரம் செய்யும் குணம், இதுக்கு கிசாயம், அகத்தியர் சுவாமி நூல்' என்றுளது.

வரிசை எண்: 1689 சுவடி எண்: 834-a

# வைத்திய நிகண்டு

ஏடுகள்: 18. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: நிகண்டு. அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

மிளகின் பெயர்

வாதமறுக்கு மகாநித்திரை போக்கிப்
போத ... ... ... கிய சித்துளி
காதமரிசி கடுங்காரி கோபத்தி வேதமிளகின்
விளங்கிய நாமமே! 1

**முடிவு**

ஓடினேன் னேர்மையந்தர மலையவீ் தோரும்
உத்துப்பாரா னூலுகளெல்லா மொளிந்து பார்த்தே! 105

தேவிசகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் மருந்துப் பொருள்களின் வெவ்வேறு பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1690 சுவடி எண்: 834-b

# தெட்சிணாமூர்த்தி - 16

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக

அரிதாரம் பிறிதிவியே ஆகி நிற்கும்
ஆனதோர் சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரியே தேயுவாகும்
பின்னையொரு வெள்ளையே வாயுவாகும்
வரிதான லிங்கமா காச மாகும்
வருந்தியே பச்சையாய் மாட்ட லாகும்
தெரியதோ வயித்தியரே யென்னூ லப்பா
சித்தருக்கு சொன்னமுறை சிகத்தில் பாரே! 1

**முடிவு**

மாத்திடில் பரங்கி சூலை
பலகடி முதலா யுள்ள
போத்திடில் தீரு மென்றே
பொதிகைமா முனிவர் சொன்னார்!
பதினாறு எழுதி முடிந்தது
முற்றும்
மகமாயி துணை. லட்சிப்பாள். வயிரவர் துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சகல நோய்களுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1691 சுவடி எண்: 834-C

# வயிரவத் தியானம்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஓம்நமோ பகவிச்சகா தாரதாரக
சடாசா சடாட்சரா ணாகார
ஓம் நமோ நரே தரே வடுக வடுக
தானதண்டா ஆக்கிருய

**முடிவு**

புண்ணாக்கீசர் யேத்திடவே யிடைக்காட்டர்
ராமதேவர் கயிலாச போகரோடு
சிவவாக்கியர் போர்த்திடவே காலாங்கி
புண்ணாக்கீசர் புகழான மச்சரோடு
கொங்கணருமாமே
குருபாதந் துணை
ஆறுமுகந் துணை

**காலம்**

இல்லை

### குறிப்பு

இது முதலேட்டின் முன் ஏட்டில் நடுவரியுடன் ஆரம்பிக்கிறது. முதலேட்டில் சக்கரம் உள்ளது. தலைமுழுக, அண்டவாய்வு தேய, அகாரநெய், நாதமூர்த்தியள் பெயர் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1692 சுவடி எண்: 834-d

## அகத்திய வைத்திய சூத்திரம் - 36

ஏடுகள்: 14. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5–6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

(முகப்பு ஏடு) ஹரி: ஓம்

பாங்குடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் கொளங் கிழாய்

நூல்

அருள்மிகந்து அகண்டபரி பூரணமாயி நின்று
ஆதியந்த சிற்பரானந் தத்தைப் போற்றி
பருவமாய் முன்னூற்றில் வயித்திய வாதம்
சொல்லிவிட்டேன் அதைக் குறுக்கி
முப்பத்தாறாய் பாடினேன் நான்

### முடிவு

வாமப்பா யிந்தவகை மருந்து வைத்தால்
வயித்தியன்பேர் பார்க்கயிலே நோயி களெல்லாம்
ஆமப்பா யெட்டுரண்டு இருவத் தஞ்சுந்
தடையாவே வாசிக்கச் சித்தி யாமே!

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில் பாட்டெண்கள் எழுதப்படவில்லை. முதலேட்டின் முன்னேட்டில் அகத்தியர் கர்ம சூத்திரம் என்றும், முதலேட்டில், 'அகத்தியர் வைத்திய சூத்திரம் முப்பத்தாறு என்றும் உள்ளன.

இதில், செம்பினுடவெள்ளை, காரவெள்ளை, லோகச் செந்தூரம் ஆகிய தலைப்புகள் உள்ளன

---

வரிசை எண்: 1693 சுவடி எண்: 834-e

# அகத்தியர் வைத்தியம் -150

ஏடுகள்: 36. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D. 927 / 433 -a போன்றது.

வரிசை எண்: 1694 சுவடி எண்: 834-f

# கர்ம அனுபோக சூத்திரம்

ஏடுகள்: 100. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: (அகத்தியர்) முழுமை: முற்றற்றது.

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1167 / 560 போன்றது

வரிசை எண்: 1695 சுவடி எண். 835-a

# அகத்தியர் மாமுனி பிள்ளைப்பிணி வாகடம் (குணவாகடம்)

ஏடுகள்: 71. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7-8 வரிகள்: பொருள்: மருத்துவம். அளவு: $29\frac{1}{2} \times 3$ செ.மீ. கி.எண்ணிக்கை: 2200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

குணவாகடம்

ஆதியாம் கடவு ளாணை
யடியிணை போற்றி போற்றி
தீதருவியாதி தன்னை
தெளிவுடனறிய வேண்டி

நூல்

வாலக்கிரக்க குணக்க விப்பு மருந்து
மந்திர யெந்திரமுங்
காலக்கணிப்பு நீர்சொறியுங்
கட்டுஞ் சிலது பேருடனே

**முடிவு**

காச்சி மிதனமாய் வடித்த யெண்ணை
மிகுமரைக் கரண்டி கொள்ள
வொழியவே தீரும் நோய்கள்
விளைக்கரிந்து தீரும் 412

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது சிறு குழந்தைகளுக்கான மருத்துவ நூல். முதலேட்டில்குணவாகடம் என்றுளது. அடுத்த எட்டில் தலைப்பு இருக்கிறது. இதில் செங்கிரந்தி, கருங்கிரந்தி, பட்சிதோஷம் ஊழி தோஷம், தேரை தோஷம், முட்டுத்தோஷம், பெண்பாவை தோஷம் மாந்தகுணம் செரியா மாந்த குணம், தலைமாந்த கிஷாயம், பேர்மாந்தம், விஷமாந்தம், சகல மாந்தத்துக்கு, களிக்கிணம், சுழிக்கிணம், வாக்குணம், அஸ்திசுரம், கத்தாழை எண்ணெய், பூசணிக்காய் நெய், மூலக்கிணம், முக்கல், சன்னிக்கிஷாயம் தயிலம், மஞ்சள்காமாலை, வாந்தி சுரம், இருமலுக்கு, ரெத்தகிணம், மூலகிணம் முதலான பல நோய்களுக்கான மருந்துகள் உள்ளன.

வரிசை எண்: 1696 சுவடி எண்: 835-b

## பாலாகிரிகை சாஸ்த்திரம் கர்மவிர்த்தி

ஏடுகள்: 20(71-90). சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம்&மாந்திரீகம். அளவு: $29\frac{1}{2}\times 3$ செ.மீ. கி.எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
கறைமிடற்ற மாமுக்கண்ணன்
கழல்களைப் போற்றி செய்து
பிறைநுத லணிந்த பேதை
பெண்கொடி யுமையாள் போற்ற

குறைவில்லாக் குமரன் சீசன்
குருமுனி குழந்தை தோஷம்
பறவைகள் பட்சி புள்ளு
பலபல கிருபை சொல்வார் 1

முடிவு

தன்னை யுருவியே மயங்கத்
தானே பீடித்தானே மேளிதம் காட்டி
நீன்ன யறிந்த பயன்படியே
நியுரெந்தே கோர்க்கும் 112

காலம்

இல்லை

குறிப்பு

இதுவும் குழந்தைகள் மருத்துவம், இதில் முத்திங்களில் வயறு நொந்தால், முதல் ரெண்டு, மூன்று......... பதினோராந் திங்களின் குணம், ஓராண்டு, ஈராண்டு குணம், 12–ஆம் ஆண்டு குணம், பாதகப்பறவை தோஷம், பச்சிதோஷம், மாகாளி பட்சி, அரிதன்பட்சி முதலான பட்சிகளின் தோஷம், மாந்தகுணம், மாந்தநெய், கொள்ளிக்கரப்பான், செங்கரப்பான், நாய் முள் குணம், முலைமுட்டி நிதானம் முதலான பல நோய்கட்கு மருந்துகள் பேசப்பட்டுள்ளன. மாந்தீரீக சக்கரங்கள் உள்ளன.

---

வரிசை எண்: 1697 சுவடி எண்: 835-C

## நூற்றியெட்டுக் குறிச்சி

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: இலக்கியம். அளவு: $29\frac{1}{2}\times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

மன்னா குறிச்சி
நெட்டி குறிச்சி
கோசு குறிச்சி
அய்யா குறிச்சி
சென்னல் குறிச்சி
துலுக்கன் குறிச்சி
மலக் குறிச்சி

**முடிவு**

பிலாங் குறிச்சி
வெங்கட்டன் குறிச்சி
ஆகக் குறிச்சி—108

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, குறிச்சி என முடியும் ஊர்களின் பெயர்களைக் கூறுகிறது.

---

*வரிசை எண்: 1698* *சுவடி எண்: 835-d*

# புசுண்டர் ஞானம் 80 - யோகவழி

ஏடுகள்: 51 (93—107). சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: தத்துவம். அளவு: 29½×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து. தமிழ். ஆசிரியர்: புசுண்டர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சிரந்தபரா பரமாகி யெங்குந் தானாய்
தீர்க்கமுடன் ரவிமதியும் சுடர்மூன் றாகி
பரந்தருளு மைம்பூத மாய்கை தோன்றி
பல்லாயிரங் கோடியண்டம் படைக்கும் போது

**முடிவு**

நேறடா நிரம்பதுதான் பொருந்தி நிற்கும்
நிலையான யக்கினியின் மத்தி தன்னில்
வீறடா யதின்வழியே யருள் தான் பாய்ந்து
விண்ணுலகில் வெண்தமிழைச் சொல்லு வானே? 72ε

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், யோகநிலை, சஞ்சார சமிதி முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1699 சுவடி எண்: 835-e

# புசுண்டர் ஞானம் - 80

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 29½ × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து. தமிழ். ஆசிரியர்: புசுண்டர்.. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

முப்புச் செந்தூரம்

சொல்றுவா னந்தவரை வேத மெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிரமத் தாலே
வெல்லுவர் ... ... ... பரிந்த பெரியோ ரெல்லாம்
வாராண்மை பேசார்கள் மவுன மாக
அல்லுபக லற்றதொரு பிரம ரூபம்
யாரறிவா ருலகத்தில் அறிய மாட்டார்
சொல்லறியு மிடந்தனையுங் கண்டு தேரி
சூத்திரமாய்க் கல்லுப்பை வாங்கு வாங்கே! 1

**முடிவு**

னவமான பிரமவல்லி யவ்வளவே யானால்
அவள்சற்தே பேசிவிடும் மரண மாவான்
தவமான வைத்தியர்க்குச் சொன்னேன் கேளு
சண்டாள நீசருக்குத் தான்சொல் லாதே!

முற்றும்

சிவமயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மரைப்புமை, அஞ்சனம், பாசாணக்கட்டு, பட்சி தோஷம், பறவை தோஷம், சன்னிரூபதி முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1700 சுவடி எண்: 835-f

# அகத்தியர் சூத்திரம் - 40

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 29½ × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

தங்க பற்பம்

தெட்சணத்தில் வந்துநாம் பொதிகையிலே யிருந்து
 தினம்பாடின நூல்துறையோ யீடல்லை
பட்சம் வைத்து நாற்பதுதான் பாடினதைக் கேளு
 பரிவாக மருந்திவைக்கித் தொழிலிது வாம்பாரு
சொச்சமதாய்த் தங்கபற்பம் சொல்லக் கேளு
 சுத்தி செய்த எம்மதைத்த கடாயதட்டி
பட்சமப்பா கொச்சிவீர பதங்கம் நாகப்பூரம்
 வளர்சங்கு முடித்தார் மிருதார் சிங்கியே! 1

**முடிவு**

பருவமாய்த் தொழிகளெலாம் கைமுறைக ளறிந்தால்
 பகருமந்திரம் ஓம்சிவ மஷ்ட்டகர மெட்டும்
தருவாக்கும் பாக்கியங்கள் சிவன்பதத்தைப் போற்றி
 தவறாத நூல்களித்தம் பாரு முற்றே. 40

குருபரன் துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தாம்புரபற்பம், கெந்தக பற்பம், நாகப்பற்பம், வங்கபற்பம், ரசபற்பம், வெள்ளிபற்பம், உப்பு பற்பம், பவழ பற்பம், முத்து பற்பம், வெள்வங்க பற்பம், அட்டகர்மம், நோய்தீர்க்க வேரு, தளசெந்தூரம், முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1701 சுவடி எண்: 835-g

# கொங்கணர் 8000-த்தில் சீனி நெய்

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு 6-7 வரிகள். பொருள். மருத்துவம். அளவு: 29½×3 செ.மீ. கி. எண்ணிக்கை 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஓம்

சீர்பெறு நூல்க ளெல்லாம்
 திரட்டியே கனிபோல் வைத்த
பேர்பெரு மெண்ணா யிரத்தில்
 பிரபலஞ் சீனி நெய்தான்

வார்சடைக் குழலி னாள்தன்
மனமகிழ்ந் துரைத்தார் நெய்யை
யூர்பல வியாதி யெல்லாம்
ஒடுங்கிடும் கண்டி லேனே

முடிவு

மண்டிலென் றுன்னி யுன்னி
யளவிடை யாக நெய்யை
கொண்டிட ரோகம் போச்சு
கொங்கணர் சீஷன் வாக்கே! 30

சீனிநெய் முற்றும்

காலம்

இல்லை

குறிப்பு

கொங்கணர் வைத்தியம் எண்ணாயிரத்தில் இந்த சீனி நெய்யே சிறந்தது. அதனால் அதன் செய்முறை தனி நூலாக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1702 சுவடி எண்: 835-h

# இராமதேவர் துறவு - சூத்திரம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $29\frac{1}{2} \times 3$ செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

ஓம்

தானென்ற சூதன் றானும்
சங்கரன் ரூப மாட்சு
வரனென்ற ரூபந் தானும்
மகஸ்த்தான சூத மாட்சு
கானென்ற நீரு மென்று
கலந்ததோர் வாயுவ மென்னா
கோனென்ற சூதன் றன்னை
கூறவுங் கூடா தென்றே! 1

முடிவு

ஆதியி னவ்வாச மிமையான செக யாவும்
பேதகமாய் தீங்கரவே பேசுவது முண்டோ
சாதிபல வானஉயிா சாகாம தெனறே
நீதிமொழி யானபதி னாருமிவை முற்றே! 19

தேகக் கடுப்புக்கு பசுவின்பாலும்
கொழிஞ்சிச் சாறாலாக்கும்
கலந்து சாப்பிடவும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில் சூதத்தின் பெருமை பேசப்பட்டுள்ளது. இதன் இடையில் (129) ஏடு ஒன்று 'சனி பகவான் மந்திரம்' என்றுள்ளது அது; 'சந்திரனையும் சூரியனையும் நமஸ்கரித்துச் சொல்லுகிறது. 'ஓம் கிலி சிவா' நாள் ஒன்றுக்கு நூத்தியெட்டு உருச் செபிக்கவும். ஒரு மண்டலம் நோயாளிக்கு அவிழ்தம் கொடுக்கிறபோது நிவர்த்திக்கிற மந்திரம். 'அங், உங் நங், கிலி ஓம் என்று 108 உருச்சொல்லவும்' என்பது.

---

வரிசை எண்: 1703 சுவடி எண். 835-i

## ஊர்வசி ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள்: 4 (130-133) சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 29½×3 செ.மீ. வி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஏக மாகி யிருந்த பராபரம்
தேக சீவ சைதன்ய சித்தரானை
யோக மரக நினைந்திடு ஊர்வசி
தோகை யான சொல்லு ரதனச் சுருக்கமே. 1

முடிவு

ஆதியின் விநாச மீவையான செகயாவும்
பேதகமாய தீங்கறவே பேசுவது முண்டோ
சாதிபல வானஉயிர் சாகாம தென்றே
நீதிமொழி யானபதி னாறுமிவை முற்றே 16
தேகக் கடுப்புக்கு பசுவின் பாலும்
கொழிஞ்சிச் சாறானாகும் கலந்து சாப்பிடவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சிவ, பிரம்மவிளக்கம், முப்பு முறைகள், குண்டலினி யோகம் முதலியன கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண். D 236/148 போன்றது.

---

வரிசை எண்: 1704 சுவடி எண்: 835-j

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 6 (134–139) சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு:5-7 வரிகள். பொருள்:மருத்துவம். அளவு $29\frac{1}{2} \times 3$ செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நாவரட்சிக்கு

ஆடுதின்னாப்பாளை வேர் முலைப்பாலினாலே யுரைத்து
நாவிலேதடவவும் இதுக்குத் தோஷம் முரியும்

ஒக்காளத்துக்கு

நெல்பொரியைப் பொடித்து யாமணக் கெண்ணையில்
குழப்பித் தின்னத் தீரும்

**முடிவு**

அபினை அரைத்துக் கலக்கி நெற்குளியில் வைத்துக்
கொண்டு நாலு நாளைக்கு ஒருதபா முழுக பத்தியம்
புளிஆகாது தூக்கம் ஆகாது புளியமர நிழலில்
போகக்கூடாது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தலைப்பு இல்லை. நாவறட்சிக்கு, பெழுஞாயறு, படுஞாயிறுக்கு லோக வசியம், பூதப்பசாசுக்கு, சன்னிக்கு நசியம், சூலைக்கு கண்சிவப்புக்கு, கொத்தமல்லிச் சூரணம், முளை மூலத்துக்கு, ரவிமதி, உப்புக்கட்டு வெவுரிபாஷாணக்கட்டு, அயச்செம்பு, முடக்கத்துக்கு, செண்பக தந்திரம், ஆகிய தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1705 சுவடி எண்: 836-a

## அகத்தியர் சூத்திரம் - 50

ஏடுகள்: 14+2. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8. வரிகள். பொருள்: மருத்துவம் அளவு: 27×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து. தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

### குறிப்பு

இது, எமது சுவடி எண் D 652 / 330 - b போன்றது. பா — வேறுபாடுகள் மிக்குள்ளன.

முதலேட்டில், கலைமகள் துதியும்' கடைசி ஏட்டில் விஷநீர் வீக்கப்புண்களுக்கு மருந்தும் உள்ளன.

---

வரிசை எண்: 1706 சுவடி எண்: 836-b

## தெட்சிணாமூர்த்தி பாடல் - 20

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

பாடினேன் கடைமருந்தின் விபரந் தன்னை
பரிவாக அறுபத்து நால்வ கைக்கும்
வாடினேன் மதிமயங்கி வடமொழியைப் பார்த்து
வகையெல்லா மாத்தாளைக் கேட்டுக் கேட்டு
மூடினே முதலைப்போல் பிரக்கிக் கோர்த்து
மூடனுக்குத் தெரியவென்று முறைதப் பாமல்
நீடினேன் நிகண்டுக்குள் நேர்மை யாக
நிறைபாகஞ் சொன்னபடி நினைவாய்ப் பாரே! 1

### முடிவு

காமென்ற காயசித்தி கொடுத்த மூலி
கலந்து நின்ற பேரையெல்லாங் கருவாய்க் கேளு
தேமென்ற சிவகாமி சொல்லைக் கேட்டு
செப்பினேன் வடமொழியைத் தேர்ந்து தானே! 20

குருபரன் துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, வடமொழி வைத்தியத்தினின்றும் செய்த நூல் போலும். நோய், மருத்துவம் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1707 சுவடி எண்: 836-e

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 70. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 27 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 2000. எழுத்து தமிழ். ஆசிரியர்: பலர்: முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

புன(ல)ச் சாப்பிட

எருக்கம் வேரை யினைத் தரைத்து
யியல்பாய் லிங்கமதில் யிரச்சி
பருக்கக் கரம் வைத்தெடுத்து
பதமா மச்சுலகான் தனில்க் குடிக்க

**முடிவு**

நாய்கடிக்கு
மேகத்துக்கு
வாய் பேசாமல் ஆவரங் குளையை
அரைத்துக் கடிவாயில் வைத்துக் கட்டவும்
கல்த்தாமரையைப் பாலிலரைத்துக்
குடுக்கத் தீரும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மேகவியாதிகளுக்கு, மேகவியாதிசகலத்துக்கும், மூலக்கிராணி பேதிக்கு, மூலத்துக்கு சிங்கபஸ்பம், கைகால் முடக்கு உளைவுக்கு மேகவாத உளைச்சலுக்கு ஊஷத்துக்கும் மேகவியாதிக்கும், கரியுப்புச்செந்தூரம் சூதகவலிக்கு முதலான பல தலைப்புகள் உள்ளன. சிறந்த நூலாகக் காணப்படுகிறது.

வரிசை எண்: 1708 சுவடி எண்: 836-d

# சென்னை புரசைவாக்கம் அண்ணாமலை சுவாமிகள் முறை

**ஏடுகள்:** 39. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. **பக்கத்திற்கு** 5-6 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 27 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அண்ணாமலைசுவாமிகள். முழுமை: முற்றற்றது:

**தொடக்கம்**

ஆவரம்பூ ஷெ பிஞ்சு, காய், ஷெ யிலை ஷெ கொழுந்து
ஷெ பட்டை வகைக்கு பலம்-20. காரீயம் பலம்-1
இதைக் கரண்டியில்க் காய்ச்சி மேல்மக்கு நீக்கி
ஆவின் பாலில்ச் சுருக்கிடவும்.

**முடிவு**

லேபனம்

புளிய நடலைக் கிழங்கைக் கீரி உள்க் கடுகு
வைத்து மருநாளெடுத்துப் பூசிப் புணரவும்
முடக்கொத்தானிலை யெருமைத் தயிரிலரைத்துக்
கொள்ளவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தந்த வலி, விரேசனம், ஓரண்ட வாய்வுக்கு, வீரச்சன்னம், தாளக செந்தூரம், லிங்க செந்தூரச் சுருக்கம், ரசவைப்பு, துவாலைக்கு, சகல வியாதிக்கி அனுப்பானத்திலிட உப்பு முதலான பல மருத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1709 சுவடி எண்: 837-a

# அகத்தியர் நாடி சூத்திரச் சுருக்கம்-30

**ஏடுகள்:** 8. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: நாடி பார்த்தல். அளவு: 26 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
வேகமாய் நெறிசேரும் ........... போற்றுவாம்—1
குருவை நினைத்திடக் கொடுவினை யகன்றிடும்........பமன்று—2
குட்டணியை........ விடுத்தேன் துயர்—3

நூல்

கரிமுகனடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கூலத்தில்ப் பிடித்திட நடுவே தொட்டால்
ஒருவிரல் லோடில் வாதம் மற்றிருவிரல் லோடில் பித்தம்
திருவிரல் மூன்றில் லோடில் சிலேட்டும நாடி யாமே.

**முடிவு**

பின்னியது விட்டிலைபோல்த் தெளிர்த்துக் காணில்
பேச்சில்லை மரணமென்று பிலமாய்ச்சொல்லே- 27

**காலம்**

பழனித் தாலுக்கா பழைய ஆயக்குடி-பண்டிதம். இராமக்குடும்பனடிகள் பண்டிதம் பெருமாள்க் குடும்பன் கையெழுத்து. காலம் இல்லை.

**குறிப்பு**

இதில் நாடி பார்க்கும் வகை, நடக்கும் விதம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1710 சுவடி எண்: 837-b

## அகத்தியர் ராசாங்க நாடி சூத்திரம்

ஏடுகள்: 65. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4–5 வரிகள். பொருள்: நாடி பார்த்தல், மருத்துவம். அளவு: 26 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ராசாங்கர் தன்னைப் பார்த்து
நவிலுகிறார் அகத்தீ சர்தான்
ராசாங்கம் அஞ்ஞூறுள்ளே
நாடியை யிசைந்து பார்த்து
ராசாங்கர்க்குரைத் தாரந்த வாத
மாத்திரை ரெண்டாகில்
ராசாங்கர் பித்த மூன்றும்
நடந்திடும் குணம்சொல் லென்றார் 1

முடிவு

சுயம்பிரவி பித்தமுடன் சீதம் சேன்றால்
சொல்லுகிறேன் வாந்திவிக்கல் சுவாசம் காணும்
சியம்பிறவே வந்து கொல்லும் யெட்டா மாசம்
செப்புகிறேன் கொன்றுவிடும் திண்ணந் தானே! 155

காலம்

இல்லை

குறிப்பு

இதில், நாடி பார்த்து, நோயறிந்து சிகிச்சையளிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. மரணக் குறிப்பறிதலும் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1711 சுவடி எண்: 838-a

## போகனாதர் அட்டாங்க யோக ஞானம் - 360

ஏடுகள்: 26. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள் பொருள்: யோகநூல். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து. தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

கரிமுகவன் பதம்போற்றிக்
கடவுள் பதம்போற்றி
கடாட்சித்து யெனையீன்ற
ஆயிபதம் போற்றி
அரியயன்தன் பதம் ... ... ... ...
போற்றி வாணி பதம் போற்றி
யருள்தந்த லெட்சிமித்தாய்
ஆதிபதம் போற்றி

முடிவு

புலர்ந்துமே பிள்ளைகளை வேறே வேறே
போயெங்கும் திரியுமென்று விடையு மீய்ந்தார்
கலந்துமே கருவூரார் தெற்கே சென்று
கடியரிசி கையில்சாபங் கொண்டிட் டாரே! 164

காலம்

இல்லை

குறிப்பு

இதில், திவிர்த்தி யோகம், புத்தி, மணி பூரகம், அனாகதம் குருபதம், மனவிலாசம் பக்குவன், குருவிடத்தில் கேள்வி, முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1712 சுவடி எண்: 838-b

# தெட்சிணாமூர்த்தி ஞானக்குளிகை - யோகம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள் பொருள்: யோகம். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சணாமூர்த்தி முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமா மாத்தாள் பாதம்
சோதி நிறமாகிநின்ற கிணேசன் பாதம்
சொல்தனக்கு மெட்டாத சூட்சா சூட்சம்

**முடிவு**

யேர்க்கவே ரசமணியின் மார்க்கந் தானும்
யென்மக்காள் சொல்லிவிடுவாய் யோக
மார்க்கசொக்கவே யிம்முறையை உனக்குச் சொன்னேன்
செழுங்குருணைப் பதினாலில்க் கடாட்ச முற்றே

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், யோகமார்க்கம் மறைமுகமாகச் சொல்லப்பட்டுளது.

---

வரிசை எண்: 1713 சுவடி எண்: 838-c

# சுப்பிரமணியர் அகத்தியருக்குபதேசித்த ஞானம்

ஏடுகள்: 26. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-11 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சுப்பிரமணியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அண்டத்த பராபரமான பரையின் பாதம்
பயனெங்கள் ஆதிவரெத்தின பதமும் போற்றி
தொண்டர்கள்மெய்ஞ் ஞானியுட பதமும் போற்றி
சொல்லுகுரே னுபதேச இருநூற் தன்னை

முடிவு

வல்லடா யோசித்து வகையுஞ் சொன்னேன்
வழக்கான மும்மூலக் கோளச் சொன்னேன்
அல்லடா யிதையெடுத்து உண்டு தானும்
அடங்காத ஆத்துமாவில் அடங்கி நில்லே 198

காலம்

இல்லை

குறிப்பு

இது, எமது சுவடி எண் D 913/432-C சுப்பிரமணிய சுவாமி சுத்த ஞானம் 200 போன்றது.

---

வரிசை எண்: 1714 சுவடி எண்: 838-d

## பஞ்சாட்சர விளக்கம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: தத்துவம். அளவு $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஆதியென்ற அட்சரமே பிரம மூலம்
அருள்பெருகி மூலடீங்கினிற் நீதி யென்ற அக்கிளிபே
சோதியாக நிலையறிந்து யாதாரம் நன்றாய்ப்
பார்த்துச்சோதி பஞ்சாட்சரச் சுருக்க நேர்மை

முடிவு

காணாத கண்காட்சி வெளிதாட்சு
கண்ணாரக் கண்டதுவும் வெளிதானாச்சு
கோனான குருபதமும் வெளிதா னாச்சு
குருவான பரவெளியில்க் குவிய முற்றே! 32
முற்றிப் பெற்றது

காலம்

இல்லை

குறிப்பு

இது ஐந்தெழுத்தின் சிறப்புக் கூறுவது.

வரிசை எண்: 1715 சுவடி எண்: 838-e

# சச்சிதானந்த மாலை

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-11 வரிகள். பொருள்: இலக்கியம். அளவு: 31×3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D. 1147 / 894 போன்றது

வரிசை எண்: 1716 சுவடி எண்: 838-f

# மதுர ரச யோகி கலைஞானம்

ஏடு: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: 31×3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மதுரரசயோகியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

திருமருவுஞ் சுளியிடைபின் கமல மீதி
அறிவரிய கலைக்கியானம் மணியுரை நூல்பாட
அருவுரு வாஞ்சிவனு மகன்னறிவில் நின்ற
அடிமுடிசங் கொலி நடனஞ் செய்து

**முடிவு**

கனவுருதி யாகுமடா னுளைந்து பார்த்தால்
கயிலாசப் பதிசேர்வை காண லாகும்
உனக்குருதி வேணுமென்றா யுபதே சித்தேன்
உத்தமனே கலையான மணிநூல் முற்றே 40

மதிறாசயோகி கலைக்கியானம்
முற்றிற்று

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, ஞான மார்க்கத்தைக் கூறும் நூல்.

வரிசை எண்: 1717 சுவடி எண்: 838-g

## கருவூரார் வாலை - 30

ஏடுகள்: 3½. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9-11 வரிகள். பொருள்: பூசைவிதிஅளவு: 31×3½ செ.மீ. கி எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றுமுளது.

### குறிப்பு

இது எமது சுவடி எண் D1403/710 வாலை பூசா விதி போன்றது.

---

வரிசை எண்: 1718 சுவடி எண்: 838-h

## அகத்தியர் சூரணம் - 36

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 31×3½ செ.மீ. கி. எண்ணிக்கை 350. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

சொல்லு மறிவாய்த் துலங்கு நூல் முப்பத்தாறு
மல்லும் பகலு மறிவுணர்-நல்ல
குணபதியாம் பூரணத்தில்க் குடியென்னும் வாழுங்
கணபதியின் பாதமலர் காப்பு.

நூல்

நூலென்று சொல்வதற்கு அறிவு வேணும்
நுளைந்துமதைப் பார்ப்பதற்கு மனமும் வேணும்
மாலென்று காண்பதற்குப் பத்தி வேணும்
மறவாமல் மகிழ்ந்திருக்கச் சித்தம் வேணும்

### முடிவு

தேனென்றே கண்டுபர மெச்சி மெச்சி
திடமென்ற நாலுமிது தீர்க்க மென்றும்
சேரனென்ற இன்னூலை யுலகில் விட்டேன்
குறிப்பறிய இன்னூல் முப்பத்தாறு முற்றே! 36

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், நோய்க்குரி மருந்தினைச் சூரணமாகச் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது.

---

**வரிசை எண்: 1719** **சுவடி எண்: 838-i**

# டமரானந்தர் - 16

ஏடுகள்: $2\frac{1}{2}$. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: டமரானந்தர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆனந்த நிற்குணத்தி னருளைப் போற்றி
யெனையாண்ட நந்தி பாதங் காப்புத்
தானந்த சனகாதி ரிஷிகட் கெல்லாந்
தாசனென்னப் பேர் படைத்த டமரா னந்தன்

**முடிவு**

சித்துவிளை யாடுதற்குச் சிறந்த நூறு
செப்பினே னிந்த நூல் தெளிந்து பார்த்து
அத்துவித மானதினாற் டமரா னந்த
னருள்செய்த பதினாறு மடக்க முற்றே! 17

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இந்தச் சுவடியில் நூல்கள் ஒரு ஏட்டில் முடித்து விட்டு மறு ஏட்டில் தொடங்கும் முறை இன்றி தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1720 சுவடி எண்: 838-j

# அகத்தியர் ஞானம் - 16

ஏடுகள்: 2½. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதிமறை சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியும் நடுவாகிப் பொருமுன் றாகி
வேதியனு மாய்சிவனும் நின்ற வாறும்
வேதமுட னாகமங்கள் பிறந்த வாறும்

**முடிவு**

ஆளையப்பா முக்காலு மாளை ஆளை
அறிந்துணர்ந்த ஞானிகளை யடுத்துச் சேரு
பாரப்பா உண்டதாய் பதத்தைப் போற்ற
பதினாறுஞ் சிவசூட்சம் பொருள்தான் முற்றே! 16
முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஞான மார்க்கம் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1721 சுவடி எண்: 838-k

# மாணிக்கவாசகர் ஞானத் தாழிசை - 12

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மாணிக்கவாசகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சுளியாகிய முனைகண்ட பின்
சுற்றாநீர் வற்றாய் சூதும்ப போய் பேசிய
தொளிலும் பிரர்க்குட்டாய்
வளியாகியதுறை கண்டபின் அனுஷ்டானமும்

**முடிவு**

துலைவாகத் தோரா துக்கத்தொடு
சுகதுக்கமும் அற்றா யது வாகிய
ஞானக் கடல்மூழ்கித் திரமாகி
அலையாம லிருக்குஞ் சுகமதிலே
குடிகொண்டா லானந்தம்
வெளிப்பட்ட பின்னு ஙானொன்றையு மறியேன் 12

முற்றிற்று

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, ஏட்டின் முன்பக்கத்தில் நடுவில் முடிகிறது ஞானப்பொருளுரைப்பது.

---

வரிசை எண்: 1722 சுவடி எண்: 838-I

# அகத்தியர் பூரண சூத்திரச் சுருக்கம்

ஏடுகள்: $2\frac{1}{2}$. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போற்றியே யென்னாளும் புவியின் மீது
காரணமாய் நின்றதொரு ஆயிதன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பார்த்து

**முடிவு**

யோசிப்பாய் மந்திரங்கள் அனேகங் கோடி
யுத்தமியாள் பதிபூசை யுகந்து தானால்
ஆசிப்பான் அதன்பிறகு ஆத்தாள் தந்தா
ளானந்த பூரணத்தின் அருள்தான் முத்றே 17

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பலவிதமான மருத்துவங்கள் பேசப்படுகின்றன!

---

வரிசை எண்: 1723 சுவடி எண்: 838-m

## ரோமரிஷி ஞானம் - 16

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1267,1268/644,645 போன்றது.

வரிசை எண்: 1724 சுவடி எண்: 838-n

## பொசுண்டர் ஞானம் - 30

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10–11 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பொசுண்டர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியெனை யாண்டகுரு பாதங் காப்பு
அத்துவிதப் பிரணவத்தி னருளே காப்பு
நீதியா யாருடக் கியானம் பெற்ற
நிர்மயமா சித்தருட பாதங் காப்பு

**முடிவு**

முத்தியடை வானத்திலே நிர்த்தனஞ் செய்வாள்
முமுட்சுத் திடமறிந்த மூர்த்தி யாவான்
நித்தியமென்று உபநிடதப் பொருளைத்தான் சொல்லும்
நிலவரத்தால் யோகநிஷ்டை நிறைந்த முற்றே! 32
முற்றிற்று

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஆன்ம நிலை, யோக நிலை முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1725 சுவடி எண்: 838-o

## அகத்தியர் ஆதாரக் கட்டளை - 8

ஏடுகள்: $1\frac{1}{2}$. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-10 வரிகள். பொருள்: தத்துவம் அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சோதியெனும் பாரபரையா ளாயி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம்போற்றி
ஆதியெனு மெனையாண்ட நந்தி பாதம்
விண்ணகத்தில் வைத்து நாள் தொழுதிறைஞ்சி

**முடிவு**

சேரப்பா ஒன்றுமில்லை வீடு ஆடுஞ்
சிறந்து நின்ற நந்தியது பரமே யாகும்
வீரப்பா ஒன்றுமில்லை நந்தி கண்டால்
மெய்ஞ்ஞான போதகமு மாகு முற்றே! 8

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வாசி கொண்டு ஆறாதாரங்களைச் செயல்படுத்துவது கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1726 சுவடி எண்: 838-p

# வால்மீகர் ஞானம் - 12

ஏடுகள்: 1½. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு 31×3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வால்மீகிமுனிவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

திருமூர்த்தி தேவர் முதல் மனித ரோடு
சிவயோகம் பெற்றிருந்த மார்க்கந் தன்னை
பிரியமுட னெனைத்தொழுது கேட்ட பிள்ளாய்
பின்கலையு மிடகலையு மாகும் போது

**முடிவு**

கண்டுரைத்தார் சித்தர்பதி னெட்டு பேரும்
காசினியிற் பரிபாசை யாகச் சொன்னார்
பண்டுபரன் விளம்பினதை அறியச் சொன்னேன்
பரமரக சியமிதுவாம் பத்து முற்றே! 12

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, வாசி, இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகியவைகளின் நடத்தை உரைப்பது. 10 செய்யுட்களே உள்ளன.

---

வரிசை எண்: 1727 சுவடி எண். 838-q

# அகத்தியர் ஞானம் - 1

ஏடு: $\frac{1}{4}$. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 3 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 20. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஒண்ணும்போ தீரெழுத்தா லுயிர டங்கும்
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகில்
பெண்ணும்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணிஉயிர் மேல்வாங்கி அறிவ ரிந்து

**முடிவு**

திண்ணமா யிலைமிளகு அருந்துண்பே தெல்லாஞ்
சேவித்தாக்கா னாள்தோறுஞ் சேவிக்க வல்லார்
மண்ணில்மேலினியூழி காலம் வாழ்வார்
வருங்கால மறிந்திடினு மாணி மாகார்.

ஒண்ணு முற்றிற்று.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஒரே பாடலில் வாழ்க்கை முறை கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1728 சுவடி எண்: 838-r

# ஊர்வசி ஞானம் - 18

ஏடுகள்: 2½. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 11 வரிகள். பொருள்: ஞானநூல். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ஊர்வசி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

அரவுதரும் ஞானமா னந்தக் கருமானச்
சுருதிமுடி யான சுருக்கமே பருதிசுடர்
மதிகதிரில்ப் பாய்ந்துவந் தமுர்த முண்டுமனம்
கதியடையப் பூரணமே காப்பு.

**முடிவு**

ஆதியில் விலாசமிவை யானசெகம் யாவும்
பேதமதாய் ஞானம் பேசுவது முண்டோ - சாதி பல
தானஉபி ரெண்டதுவு மொன்றே நீதிமொழி
யானபதி னெட்டதுவு முற்றே!

முற்றிற்று.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதுவும் தத்துவப் பாடலாக அமைந்துள்ளது.

---

வரிசை எண்: 1729 சுவடி எண்: 838-s

# அகத்தியர் மதிவெண்பா - 100

ஏடுகள்: $6\frac{1}{2}$. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண்கள் D 911, 968/432-a, 445-a போன்றது.

---

வரிசை எண்: 1730 சுவடி எண்: 838-t

# வால்மீகர் யோகம் -16

ஏடுகள்: $3\frac{1}{2}$. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: யோகநூல். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வால்மீகியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இருளொளியாய் நின்றசிவன் பாதம் போற்றி
எழுத்தினுட விபரமதை விரித்துச் சொல்வேன்
அருவுருவாய் நின்றதுவே யெழுத்த தாகும்
ஆதியந்த மண்டபிண்ட மதுவெது வாகும்

**முடிவு**

மனமிருக்க மதிபோல காணும் தேவனாம்
சித்தனுக்கு திகட்டா மூல சிரசப்பா உடல்பதியே யாகும்
கோனவனா யிருக்கவென்று குருக்கிச் சொன்னேன்
குவலயத்தில் பதினாறாய் பகுத்தான் முத்தே.
குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் யோகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது

வரிசை எண்: 1731 சுவடி எண்: 838-ப

# பிரம வயிரி - 51

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8–9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $31 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

நாரணன் வான்முகன் மற்றுள்ள மூவரும்
நாடுஞ் சிவயோகமி காரணமான கெணபதி
யென்குரு காப்பது நிச்சயமே! க

**முடிவு**

ஆதிப் பிரம லெகிறிப் பிறந்து
அன்ப தொருபாடல்
சோதியாய் நாதற்
தொசங்குடு
வேதஞ் சொன்னது தான் முற்றே! 51
முற்றிற்று
கடவுள் சகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சாகாக்கால் வேகாத்தலை பேசப்படுகிறது.

வரிசை எண்: 1732 சுவடி எண்: 839-a

# சட்டை முனியார் வகாரத் துறை

ஏடுகள்: 62. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8–10 வரிகள். பொருள்: மருத்துவம் & ஜாலம். அளவு: $36 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியந்த மேநிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூடி
பாதியா முப்பொருளு மூன்று மொன்றா
பாவெளியாய் நின்றபரா பரையின் பாதம்
நீதியாய் வாரணத்தின் முகவன் பாத
நிறைந்தமலர் வாணிகுரு நாதன்,பாதஞ்
சோதியாய் நாதாக்கள் பாதம் போற்றி
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லு வேனே! 1

**முடிவு**

செய்யாதே தீவினைதான் கொடிது பாவஞ்
செந்துவெல்லாஞ் சிவனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
விளம்பினேன் கருக்கிடைச் சூத்திரந்தாள் முற்றே. 523
ஸ்ரீராமதேவர் சாத்திரம்
குருவாழ்க
தேவிசகாயம்
அகத்தீசர் மூர்த்தி பாதார விந்தமே துணை.

இதன் பின்னர்

'தாளக மனோசிலை செஞ்சாதி லிங்கம் பாசாணம்
வாளமோடு கெந்தி வெள்ளை மாயுன்னி
மாளவே நீயா வெண்ணையால் அரைத்து
நேர்தயிலந் தானிறக்கில் பம்பு சன்னிதான்
பறக்கும் பார்!
என்ற பாடல் உள்ளது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சவுக்கார வைப்பு காரச்சுண்ணம், கெந்தி மெழுகு, குருவழலை, சிவனார் வேம்பு, கோசபீசம் சிமிள் வித்தை, உருமாற்றம், மோடிவித்தை முதலான பல தலைப்புக்கள் உள்ளன.

வரிசை எண்: 1733 சுவடி எண்: 839-b

## அகத்தியர் சாலத்திரட்டு - 1200

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $36 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

### குறிப்பு

இது எமது சுவடி எண் D 508 / 288 -a போன்றது இதில் 77 செய்யுட்களே இருக்கின்றன.

---

வரிசை எண்: 1734 சுவடி எண்: 839-c

## இராமதேவர் வயித்தியம் - 80

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: $36 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

### குறிப்பு

இது, எமது சுவடி எண் D-997/450-e போன்றது. 23 செய்யுட்களே உள்ளன

---

வரிசை எண்: 1735 சுவடி எண்: 839-d

## அகத்தியர் வைத்திய சூத்திரம் - 205

ஏடு! 26. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள்.. பொருள்: மருத்துவம். அளவு: $36 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை! 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

### குறிப்பு

இது, எமது சுவடி எண் D 1006/453 போன்றது.

---

வரிசை எண்: 1736 சுவடி எண்: 840-a

## அகத்தியர் வைத்தியம் அறுநூறின்படி பீடிகை

ஏடுகள்! 9. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு $33\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 850. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

யிலுப்பை யெண்ணை யாவின் வெண்ணை
அயக்கரண்டியிலிட்டு ரிகிகி
வெள்ளாட்டுப் பாலில் அஞ்சுபலம் சாய்க்க

**முடிவு**

தூதுவளை காய் யிலை பூ முருங்கையிலை காயும்
முளைக்கீரைத் தண்டு மாகும்
மகோதரம் காமாலை வீக்கம் பித்த பாண்டு
முதலான வியாதியெல்லாந் தீரும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பலவகை நோய்க்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1737 சுவடி எண்: 840-b

# பொதிகைசாமி வைத்தியம் 205-ல்

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $33\frac{1}{2}\times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1006/453 போன்றது. இடையிடையே செய்யுட்கள் இல்லை.

வரிசை எண்: 1738 சுவடி எண்: 840-c

# பாண்டுறுவம்

ஏடுகள்: 17. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $33\frac{1}{2}\times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கவிலச தீள்மை
தீள்மைப் பாட்டுறுவம் கவிலச
யிதுகளுக்கு மருந்து
சசிவதை வேர் தூள்பண்ணிக் கொடிக்கள்ளிப்
பால்விட்டு பிசைந்துத் தூவித் தூது விளங்காய்
பிரமாணம் உண்டை பண்ணி

முடிவு

இந்தப்படி அரைத்து அரைத்து
ஆறு திரம் பிடம் போட்டு
மறுபடி தும்பைச் சாத்தில் அரைத்து
ஒருபிடம் போடச் செந்தூரமாம்.

காலம்

இல்லை

முடிவு

இதில் வண்டு கடி, பாதலமை, பெருவியாதிக்கு மருந்து, காச்சலிலே விக்க மெடுத்தால், பிள்ளை பெத்த பேருக்கு, எலிகடிக்கு மருந்து, படுவனுக்கு, விந்து தம்பளம், மேகத்தின் எண்ணெய்; பவளபற்பம் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1739 சுவடி எண்: 840-d

## சூலைக்கட்டு, புண்கட்டி சகலத்துக்கும்

ஏடுகள்: 2 சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $33\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 60. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

அரிதாரம் விராகனெடை —3
மனோசிலை ,, —3
கெந்தகம் —3
முருதார்சிங்கிப்பாஷாணம் ,, —1
சாதிலிங்கம் ,, —2

முடிவு

சட்டியில் கஞ்சி காச்சி உப்புப்புளி
மிளகாய், கடுகு தள்ளி புகையிலை
முதலாகாது பத்தியம்
கடும்பத்தியம் இருக்கச் சகலமுந்தீரும்.

காலம்

இல்லை

குறிப்பு

இதில், மூலம், பவுத்திரம், கண்டமாலை சகலத்துக்கும் காரச்சீலை வைப்பு, முதலியன உள்ளன.

வரிசை எண்: 1740

சுவடி எண்: 840-e

# சுரத்துக்கு மருந்து முதலியன

ஏடுகள்: 24. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $33\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை 750. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நொச்சிச்சாறு படி —4
சித்தரத்தை வராசகனெடை —3
சதகுப்பை ,, —3
சுக்கு ,, —3
இந்த மூன்று மருந்தும் சாத்திலே
யரைத்துக் கலக்கி அடுப்பிலேத்தி

**முடிவு**

உண்மையாக தொய்யவரும் களிச்சலுக்கு
சேசமாய்க் கொடுத்துவிடு. தோஷம் தீரும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வயத்துவலிக்கு கிஷாய மருந்து, விக்கலுக்கு சூரணம், அசுவகெந்திச் சூரணம் முதலான பல மருந்துகள் உள்ளன.

---

வரிசை எண்: 1741

சுவடி எண்: 840-f

# சித்திரவல்லாதி உருண்டை முதலியன

ஏடுகள்: 42. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6–7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $33\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அத்தி முகவனே போற்றி
அன்பான வல்லாதி இன்பமாய்ச் சொல்வேன்
சித்திர மூலம் வெள்ளறுகு நல்ல
சிவனார்தாம் வேம்பினுட சங்கவேர்

**முடிவு**

அறுகவேர் ஒரு பிடி, முக்காவளைவேர் ஒருபிடி
கோறக்கிழங்கு ஆக இவளவும் கிஷாயம்
போட்டு குடிக்கவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பல வகை மருத்துவங்கள் உள்ளன.

---

வரிசை எண்: 1742 சுவடி எண்: 840-g

# நாடி நிதானம்

ஏடுகள்: 48 + 11. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: நாடிசாத்திரம். அளவு: $35\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

அரியை அயனே அகஸ்த்தியனே
ஆனைமுசனே வேலவனே
விதியின் கதிரே அக்கினியை

**முடிவு**

அடவுடனே சுவாச நெஞ்சிலடைத்திடு
மூற்சையாகும்
திடமுடனே மூற்சைறோகம்
செயலெனச் செப்பிறாரே — 42

நாடி நிதானமுத்தும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது இரண்டு பகுதியாக உள்ளது முதற்பகுதி 142 செய்யுட்களையும், பிறபகுதி 42 செய்யுட்களையும் கொண்டுள்ளது. நாடிகொண்டு நோயறியும் விதம் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1743 சுவடி எண்: 841

# அகத்தியர் - 205

ஏடுகள்: 47. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $3 \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்**

குருவேதுணை

வெண்பா

அகத்திய ரருளிச்செய்த பஞ்பான யிரனூத்தஞ்சை
பகராதே யொருவருக்கும் பண்பாய்வை — யுகந்தனிலே
நாள்தோறுங் கேட்டக்கால் நல்லோர்க்கு யீய்ந்திடுநீ
பாழ்போகாமல் பாருபார்.

பராபரன் துணையுண்டாகவும்
பணிநண்பர் கிருபையுண்டாவதாகவும்
ஓம் சர அணபவர் துணை.

நூல்

பூரணமாய் மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய் சிரசில் சூடாம்

**முடிவு**

சிந்தைகளி கூர செப்பும் யிரனூத்தி
வந்ததொரு யஞ்சும் மகாமுனிவன் — சந்தைபெற
காட்டிய நூலித்தைக் கருதி யடைந்தோர்கள்
நாட்டிலியல் பேதன்கு சரி. — 205

முற்றிற்று

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 1006 / 453 போன்றதே யாயினும் பிற்பகுதி வேறுபட்டுள்ளது.

வரிசை எண்: 1744 சுவடி எண்: 842–a

# கொங்கணநாயனார் கடைக்காண்டம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அண்டாண்டங் கடந்தபொருள் நிற்குணமாய் நின்ற
வளவில்லா நிர்மலமே சூட்சா சூட்சம்
எண்டிசை யும்பரந்த நிரஞ்சனமே யாகி
யேகசச்சு தானந்தத் தப்பால் ஞானம்

**முடிவு**

வகுத்திட்டேன் நாற்பத்து முக்கோணத்தை
வளமான கோணமெல்லாந் தானந் தோறும்
வகுத்திட... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் 19 செய்யுட்கள் முழுமையாக உள்ளன. நாற்பத்து முக்கோண முறையும், பூசிக்கும் விதமும் இதில் கூறப்படடுள்ளன.

---

வரிசை எண்: 1745 சுவடி எண் 842-b

# மச்சமுனி நாயனார் - 800

ஏடுகள்: 204. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

காப்பு

ஆதியந்த வேத விஷ்த்தா ரத்தை
போத னாதி குரு வென்ற பொருள்

நூல்

மதித்தியந்த ஞானவழி நித்தங் காப்பு
வாலை மனோன் மணியின் ரச வாதங் காப்பு
சதித்திருந்த தனைவனிலைம் பூதங் காப்பாந்
தனையறிந்து திரண்டெழுந்த நாதன் காப்பு

**முடிவு**

பத்தருக்காய்ப் பாடிவைத்த ச......த லெட்டாள்
பதிவாகும் பெருநூல்மெஞ் ஞான மூத்தே. 798

மச்சமுனியார் பெருநூல் காப்பு உள்பட
பெருநூல் 800 முகிந்த
முற்றும்

**காலம்**

தாது வருஷம் ஆனி மீ 7ஆம் தேதி மங்கள வார நாள் உத்திரட்டாதி நட்சேத்திரத்தில் நாகபட்டணம் சேர்ந்த அந்தோணிப் பேட்டையிலிருக்கும், சிவன் படவரில் ஏகாம்பரம் பிள்ளை அவர்கள் குமாரன் கனகசபை மச்சமுனி நாயனாரருளிச் செய்த சாலம் எண்ணூறு எழுதி முகிந்தது. முற்றும்.

குருபாதம் துணை.

குறிப்பு

இதன்பின் உப்புக்கட்டு எழுதிய ஏடு ஒன்றுள்ளது. இது, எமது சுவடி எண் D 646/325 போன்றதாயினும் செய்யுட்கள் மாறுபடுகின்றன.

---

வரிசை எண்: 1746 சுவடி எண்: 842-c

# மச்சமுனி தீட்சாவிதி

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

மூல... தெழுந்த முக்கோண சக்கரத்துள்
காலச் சிகாரக் கடவுளே
வாலைக்குள் பதியே நந்தியுங் குண்டலிக்குள்
சாலக் கணபதியே கைதொழுதேன் காப்பு 1

முடிவு

பிரியாது பூரணம் பேசிடும—ன்பு
துரியாது நோய் ..................பமுந்
துரியமாந் தீட்சை சொல்லொரு நூறு முத்தே. 100

குரு பாதம் முன்னிற்கவும்
... யாதித தீட்சை நூறு மெழுதினது மேடும் அந்தோணிப்
பேட்டையிலிருக்கும்......... எழுதி நிறவேறினது.
முற்றும்
மனோன்மணி கிருபாகடாட்ச முண்டாகவும்.

காலம்

இல்லை

குறிப்பு

இது மிகவும் செல்லரித்த நிலையில் இருக்கிறது

---

வரிசை எண்: 1747 சுவடி எண்: 842-d

# மச்சமுனியார் நிகண்டு

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-13. வரிகள். பொருள்: நிகண்டு. அளவு: 25 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனி. முழுமை: முற்றுமுளது.

**காலம்**

விஷ வருஷம் பிரட்டாசி மாதம் 11-ஆம் தேதி மங்களவாரத்தில் உத்திர நட்சேத்திரம் கூடிய தினத்தில் அந்தோனிப்பேட்டையிலிருக்கும் ஏகாம்பரம்பிள்ளை குமாரன் கனகசபை மச்சமுனி சுவாமியார் நிகண்டு நூறும் எழுதி முடிந்தது. முற்றும்.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D/354/691/c போன்றது. இதன் பின்னர் 101, 102 ஆகிய இருபாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1748 சுவடி எண்: 842-e

## மச்சமுனியார் சூத்திரம் - 80

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 25 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மச்சமுனி. முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இதில் வழலை மார்க்கம் கூறப்பட்டுள்ளது. இது எமது சுவடி எண் D 381/231-d போன்றது.

வரிசை எண்: 1749 சுவடி எண்: 843-a

## அகத்தியர் தீட்சை - 5

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிக மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 23½ × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இதில் தீட்சை கொடுக்கும் விபரம் கூறப்பட்டுள்ளது. இது எமது சுவடி எண் D 689/347-n போன்றது.

வரிசை எண்: 1750 சுவடி எண்: 843-b

# அகத்தியர் பூரணசந்திர வாலை - 200

ஏடுகள்: 33 (17-வது ஏடு இல்லை). சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள்: பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை மூற்றுமுளது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D. 1076/486 போன்றது.

---

வரிசை எண்: 1751 சுவடி எண்: 843-c

# கூர்மானந்தர் சூத்திரம் - 51

ஏடுகள்: 18 சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8–10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கூர்மானந்தர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

திருந்துமதி முகத்தானே தாயார் பாதம்
சிந்தையுத்து ஆனைமுகன் பாதம் போற்றி
பொருந்துகின்ற சனகாதி ரிஷிகள் பாதம்
போத்தி செய்து காலாங்கி பாதம் போற்றி

**முடிவு**

உள்ளபடி சொல்லுகிறேன் யிந்த நீரால்
உத்தமனே துருசுவெண்கர யாகும் மாகும்
வெள்ளையெண்ட சுண்ணத்தால் ரசத்தை நீத்தி
மேலான பரிக்கட்டில பூசிப் பாரு
கள்ளமல்லாச் சொற்ணமது சுண்ணாம் பாச்சு
கதிரான தாம்பூரத்தில் குடுக்கச் சுண்ணம்
பிள்ளைகளே யிதையெடுத்து வெள்ளிக் கியப்
பிழைப்பதற்கு வழியுண்டாம் பேச்சு முத்தே 51

ஹரி ஓம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதன் பின் ஏட்டில் மந்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. இதில், நிலை சுவாச, ரசவாதம் பேசப்படுகிறது.

---

**வரிசை எண்: 1752** **சுவடி எண்: 843-d**

# திருமூலர் தீட்சை - 10

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியென்ற திருமூல நாதர் தானும்
அருள்பெற்ற திசதீட்சை, சொன்னார்
போதியென்ற அடிதொடுத்த ஊவே யென்று
போதித்தார் மனமகிழ்ந்து கூறல் செய்தார்

**முடிவு**

குத்தென்னா யெழுத்ததுவே சொல்லப் போகா
குருமொழியா யறிந்தவனே காண வேணும்
பத்தென்னா ஆஊரெண்டும் ஒண்டாய்ப் பார்த்து
பாத்துரைத்து மனந்தேறிப் பாரு பாரே! 10
குருபாதமே கெதி
ஹரிகிராம. சிவமயம்
திருமூலர் நயினாரி தீட்சை விதி
பத்து பாட்டும் எழுதி முடிந்தது

முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

வளத்தாமங்கலம்
கொசு ராவுத்தன் தீட்சை
பத்தும் பெண்கையிலே
எழுதினது. இப்படி அவரவர்கள் தீட்சையெல்லாம்

அகத்தியர் தீட்சை, கொங்கணர் தீட்சை, சட்டைமுனி தீட்சை, போகர் தீட்சை சுந்தரானந்தர் தீட்சை, நந்தீசுசுர ர் தீட்சை, பஞ்சவர் தீட்சை, மச்சமுனியார் தீட்சை கூர்மானந்தர் தீட்சை, சுண்டிகேசரர் தீட்சை, இப்படிப் பதினெண்பேர் தீட்சையும் என் கையினால் எழுதிப் போட்டு இருக்கிறேன். பிறக்கிறபிள்ளைகளைக்கானோம். என்புள்ளை ஆனால் பார்ப்பான். என் புள்ளை அல்லாமலிருந்தால் அவனுக்கு, லெபியாது மூலம் பார்க்க ஹரிகி ஓம் சிவமயம்

---

வரிசை எண்: 1753 சுவடி எண்: 843-e

# அகராதி நூல்

ஏடுகள்: 7 + 1. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நெடியோன் — துளசி
மங்கம்பாளை — பொன்முசிட்டை
பண்ணிகுணும்பனை — நிலப்பனை
பன்றிக்கோவை — சிறுகுறட்டை
பாதாளமூலி — சிறுநெரிஞ்சி

**முடிவு**

நரைத்தலை வயிரவன் — பாவட்டை
நறும்பிசின் — கரியபோளம்
நலத்தி — பொடுதலை
நாகேசுரம் — சிறுனாகப்பூ
னாகனாக்கி — இலைக்கள்ளி
நிம்பம் — வேம்பு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதன் பின் ஒரு ஏடு 'மேக சஞ்சீவிக்கி விளக்கெண்ணை' என்று எழுதப்பட்டுளது.

---

வரிசை எண்: 1754 சுவடி எண்: 843-f

## அகத்தியர் சுரவைத்தியம்- 50

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 1425 / 730 – b போன்றது.

---

வரிசை எண்! 1755 சுவடி எண்: 843-g

## பிரம்மமுனி வைத்தியம் - 380

ஏடுகள்: 83. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

**காலம்**

பிரமமுனிபாடல் 380-ம் எழுதினேன். மஞ்சக்கொல்லையிலிருக்கும் ராமசாமியா பிள்ளைக்கு தெட்சணத்திலிருந்தும் வந்து மஞ்சக் கொல்லையிலிருக்கும் மங்கைக்கரசு கையெழுத்து.

இந்தச் சாஷ்த்திர மெழுதி முடிந்தது. பவா வருஷம் அற்பிசி மாதம் 16–ஆம் தேதி ஆதித்த வாரனாள் எழுதி முகிந்தது முற்றும்

குருகிடாட்சமுண்டாக வேண்டியது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 949 / 439-c போன்றது.

---

வரிசை எண்: 1756 சுவடி எண்: 843-h

## சித்திராரூட நொண்டி

ஏடுகள்: 37. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 1236 / 615 போன்றது.

வரிசை எண்: 1757 சுவடி எண்: 843-i

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $24\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கட்டிக்கு

முத்துக்கொட்டை யெண்ணை மாகாணி —1
உப்பு ராகி வகைக்கு பலம் —2
நேர்வாளம் சுத்திபண்ணி பலம் —2

**முடிவு**

| | | | |
|---|---|---|---|
| நாளிகை | — 60 | சதையம் | — 52 |
| விருத்தம் | — 39 | வனிசை | — 29 |
| குவி | — 7 | சித்திரை கலக்குரி | — 39 |

ராத்திரினாழிகை 22 -க்கு மேல் ராமுபிள்ளைக்கு மூணாம்பேறு பெண் பிறந்தது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், காது அடைப்பு, வீக்க விரணம், புண்ணுக்கு முதலான பல மருத்துவம் கூறப்பட்டுளது.

---

வரிசை எண்: 1758 சுவடி எண்: 844-a

# போகர் எழுநூற்றுத் திரட்டு

ஏடுகள்: 124. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6–9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு $28 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 4000. எழுத்து:. தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றுமுளது.

**காலம்**

பார்த்திப வருஷம் அற்பிசை மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரத்தில் சுக்கில பட்சம் னாழிகை 30 வயித்தியம் வீரப்பன் குமாரன் சிவகிடாட்சத்தினாலேயும் மனேசன்மணி பராபரைத் தாய் கிடாட்சத்தினாலேயும் மகா கணபதியும்

என் குரு சிவசுப்பிரமணியக் கடவுள் வள்ளி தெய்வானை கிடாட்சத்தினாலேயும் வயித்தியகுரு அகஸ்தீசுபரர் கிடாட்சம் பாத கிடாட்சத்தினாலேயும் போகர் சாமியார் பாத கிடாட்சத்தினாலேயும் மனோன்மணித் தாய் சரசுபதி அம்மன் பாதகிடாட்சத் தினாலேயும். கை எழுத்தாணி எழுதி நிறைந்தது. முற்றும்.

**குறிப்பு**

இது, எமது சுவடிஎண் D 548 /305 போன்றது.
இதன் பின் மருத்துவம் எழுதிய ஏடு ஒன்று உளது.

---

வரிசை எண்: 1759 சுவடி எண்: 844-b

## போகமுனியார் பாடல் -துரிசிக்கழங்கு

ஏடுகள்: 17. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள்; பொருள்: மருத்துவம். அளவு: 28 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து. தமிழ். ஆசிரியர்: போகர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கேளப்பா நூத்தொன்று தவலோ கத்தொடுங்
 கெடியான மாதிதென்ன யெட்டு மாத்து
கேளப்பா குளிகைசா றணையே செய்தால்
 விரவியே கோடி லட்சம் காத மோடும்

**முடிவு**

ஆட்டியே வாலுகையின் மேலே வைத்து
 அறுசாம மானபின்பு கடுந்தீய்ப் போட்டு
நீட்டியே பனிரெண்டு சாம மானால்
 நிலைத்து நிற்கும் மாதளம்பூ நிறத்தைப் போலே
வாட்டியே நவலோகம் நூற்றுக் கொன்று
 ....... ......... ......... .........

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் குடோரிவைப்பு, சூடன் வைப்பு. கிண்ணிக் கற்பூர வைப்பு, சதிரக்கள்ளி கற்பம், முளகுகற்பம், விடத்தேர் பட்டை சூதபற்பம் முதலியன எழுதப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1760 சுவடி எண்: 844-c

# அகத்தியர் செந்தூரம் - 300

ஏடுகள்: 48. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு 28 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

## குறிப்பு

இது எமது சுவடி எண் D 16/15 -a போன்றது

---

வரிசை எண்: 1761 சுவடி எண்: 844-d

# சூதமுனி சூத்திரம் - 50

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 28 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சூதமுனிவர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

மூலமுத லாதாரம் முச்சுடராம் பொருளை
மூதறிவு னாலறிவும் முக்கோணப் பொருளை
காலுமது தலையுமது காரணமாம் பொருளை
கருத்துணர்வுக் கெட்டாத சிதரும் பொருளை

## முடிவு

வாங்கெனவே உருக்கியதில் பணவிடை
செந்தூரம் குடுக்க மாத்தெட்டரையே காணும்
நீங்காத சூதமுனி உரைத்த மொழி உண்மை
நிசமாகக் கண்டறிந்து தேரிநீ பாரே! 50
சூதமுனியார் பாடல் சூத்திரம் அன்பது
முற்றும்
சரசுபதி யம்மன் துணையுண்டாக வேணும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், செம்பு சுத்தி, கெந்தகத்தயிலம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1762 சுவடி எண்: 844-ஒ

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $28 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

துரிசி திராவகம்

ஆமென்று துரிசியுட திராவகத்தைச் சொல்வேன்
அப்பனே துரிசியொரு பலமே நூறு
காமென்ற வெடியுப்பு பலந்தா னூறு
கலங்காதே சீனமது பலந்தா னூறு

**முடிவு**

செய்யப்பா பழச்சாறு தினமூன் றூட்டு
திரமான உப்பங்கே சுத்தி யாகும்
மெய்யப்பா ரவிதனிலே உலரப் போடு
விரவியங்கே ஊப்பூச மருந்து கேளே!

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், திராவக வகைகள் செய்முறை கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 1763 சுவடி எண்: 845

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 280. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6–8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு $30 \times 3$ செ.மீ கி. எண்ணிக்கை: 10000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

.............. வயித்தியத்தினுட கருத்தி சொன்ன
முனிவனடி வணங்கி..................

**முடிவு**

முனுவிசை அரைத்து சுக்கில் வைதிது
மொன்னு போடவும். 825
கண்டங்கத்திரி சடைக்கஞ்சா செறுகாஞ்..................

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பல விதமான ஏடுகளிருப்பினும், ஏடுகள் முகப்பில் எலி கடித்தும் சிதைந்தும் உள்ளதால் இன்னநூலென அறியக்கூடவில்லை.

---

வரிசை எண்: 1764 சுவடி எண். 846-a

# தன்வந்திரி - பல திரட்டு - 500

ஏடுகள்: 29. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $26 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தன்வந்திரி முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

யெழுந்ததோர் நாடியெல்லாம் எழுபத்தீ ராயிரமாம்
கொழுந்துவிட் டகிகுமிங்கும் குறைவறத் தியங்குந் தாதை
விழுந்தோர் னோவின் மீதே மெய்யுறக் காண வென்றால்
குளுந்ததோர் மனத்துத் தொண்டு குருவடி வணங்க லுற்றேன் 1

**முடிவு**

விட்டவிடத் தேரா வேர் வேளைவேர்
மட்டுக் கொடுவேலி நாறத்தை 10
கூடு மனிச்சை நடுமுதியார் கூந்தல்
முடுகவே சிவனார் வேம்பு பாலொடுவிக் கொன்னை
பருத்த யுகாயம் வேர் 11
வேலிப் பருத்தியுடன் வெட்டிவேர்
சாரு......................................................

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், னாடியறிதல், வாதசுரக்குணம், பித்த சன்னிக்குணம், சுரசீதபேதி, சேஷ்டும சுரகுணம், கண்ட குச்சன், சன்னி பதிமூன்றனுக்கு கியாழம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1765 சுவடி எண்: 846-b

## யூகிமுனி வைத்திய சிந்தாமணி

ஏடுகள்: 135. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9–11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $26 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 6500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: யூகிமுனி. முழுமை: முற்றற்றது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D428/245 யூகிமுனி வைத்திய சிந்தாமணி பாட்டு 550 போன்றது. இச்சுவடியில் 796 பாடல்கள் உள்ளன.

வரிசை எண்: 1766 சுவடி எண்: 846-c

## அகத்தியர் கருதல் - பஞ்சா திபாயிர விலக்கணம்

ஏடுகள்: 23. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: இலக்கணம். அளவு: $26 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணிமா மலைமகள் அருட் புதல்வன்
காரணி மாமதக் கரியடி பணிவாம் 1

**முடிவு**

இனிவிட நாத்தம் பொரி திரிகடுகு
பாலை மணியோரி பலம் வகைவாள
மிருபலங் கய்யாந் தகரை
கடுவெண் சாரணை மெய்யிரு
சாம மரைத்திடு வுண்டை செய்
யேகிய வயத்து வியாதியெல்லா மறு.........

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், அவையடக்கம், சிவாலையம் நதி தீர்த்தம், மந்திர லக்கணம், வகையறியார் லக்கணம், வாலை ரசபற்பம், வெள்ளி பற்பம், தங்க பற்பம், சரக்கு வகைகள் சுண்ணம். ஏலாதிக் குளிகை முதலான பல தலைப்புகள் உள்ளன.
இதன் பின்னர் விரை வாதத்துக்கு மருந்து முதலானவை எழுதிய ஏடுகள் 6 உள்ளன.

---

வரிசை எண்: 1767 சுவடி எண்: 847-a

# அகத்தியர் நடுக்காண்டம் கர்மவாகடம் - 300

ஏடுகள்: 59. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 37 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

வாதமென்ற நூல்களெல்லா மடக்கி யொன்றில்
மாட்டவே சிவன்மைந்தன் கணபதியுங் கந்தன்காப்பு
நாதமென்ற உமையவளும் சிவனுங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள்களெல்லாஞ் சுருக்க மாக்கி
வேதாந்தச் சொரூபமாம் வடுகன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற ஒடுக்க மெல்லாம்
அடிமுடியி லொடுங்கினது தானு மாமே. 1

**முடிவு**

முத்தியா யிருவினையு மற்ற தேசி
முதலான சொற்கபதம் முத்தி தானே 300
கர்மவாகடம் எழுதி முடிந்தது
முத்தும்
அகஸ்த்திய சுவாமி திருவடிகளே சரணம் சரணம்.
நடுக்காண்டம் 300 முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 623 / 323 - b அகத்தியர் கர்ம காண்டம் போன்றது.

வரிசை எண்: 1768 சுவடி எண்: 847-b

# குணவாகடம்

ஏடுகள்: 62. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 37×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

மாய்ந்திடும் செவினோய் அய்யம்
மாறிடு வாத கோபம்
சேந்திடும் சுரத்தின் வேட்கை
தெறித்திடுங் குன்ம சூலை
யாய்ந்திடு மடந்தை நல்லா
யாயுறு வேதந் தானே!
குருநமஸ்தித்து

நூல்

நீர் சொரிதல்

சுட்டநீ ரருந்துங் காலை
சொல்லிய வாறே முக்கால்
மட்டிலே கொதித்து தாகில்
வளருமே மூரையே யாகும்

## முடிவு

சுத்திப் பிறக்குஞ் சுகமுண்டாம்
சொன்ன ஈளை இருமல்கள் போம்
பித்தங் களியும் பில முண்டாம்
ரெத்த தாயாய் கொள்வாய்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், குளுந்த நீர்க் குணங், கழுதைப் பால், ஒட்டைப்பால், பசுவின் தயிர், எருமையின் தயிர், பூவரசுமைக்கொண்டன், நெல்லிமுள்ளி, கடுக்காய் மற்றும் பல தலைப்புகளின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1769 சுவடி எண்: 847-c

# பிரமமுனி வைத்திய சூத்திரம்

ஏடுகள்: 92. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 37×3செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 949 / 439 - c பிரமமுனி சூத்திரம் முன்னூற்று எண்பத்து மூன்று போன்றது.

---

வரிசை எண்: 1770 சுவடி எண்: 848-

# அகத்தியர் சுவாமி குருநாடி

ஏடுகள்: 24. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: நாடி சாத்திரம். அளவு: 33×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

திருவளரும் பொதிகைமலை சிறந்து மேவும்
சிவஞான தேசியகத் தீசர் பாடல்
குருநாடி நேர்மைதனை யுரைக்க வேண்டி
ஓநமசி சிவாயமனோன் மணித்தா யீன்ற
முருகசர பவனீன்ற துணைவ னானமுன்மத
மிருகலையுஞ் சிறுகணைந்து கரமுடனே
யடியவர்கள் கருத்தில் மேவு
கணபதி தானனுதினமும் காற்பதாமே. 1

**முடிவு**

யிதமுடனே சிரெத்தஞ் சலமும் வீழும்
யிருகண்ணில் பூளையது பிசைந்தி ருக்கும்
நோய்களத்த முடன் குடோரங்கள்ஞ் செய்யுஞ்
சூலைகுறி யிது காண்மான விசையில் கூறினோமே. 100

**காலம்**

பரபாவா வருஷம் பிரட்டாசி மாதம் 5-ஆம் தேதி திங்கட்கிழமை பாட்டியம்மை, நட்சத்திரம் அஸ்த்தம் கூடின சுபதினத்தில் அகத்தியர் சுவாமி குருநாடி எழுதினது.

ஆறுமுகம் பிள்ளை நெட்டெழுத்து

குருவே துணை.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 1003 / 451 போன்றது. இதில் 100 செய்யுட்களே இருக்கின்றன. 451 வது சுவடியில் 226 செய்யுட்கள் இருக்கின்றன. இச்சுவடியின் இறுதியில் 'யின்ன முடிவுயில்லை' என்றுளது.

---

வரிசை எண்: 1771 சுவடி எண்: 848-b

# யூகிமுனி சிந்தாமணி

ஏடுகள்: 136. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: வைத்தியம். அளவு: 33×3 செ.மீ. கி. எண்ணிக்கை 6000. எழுத்து தமிழ். ஆசிரியர்: யூகிமுனி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாக்குண்டாம் ................ தமக்கு

நூல்

ஆனைமுகன் தன் பாதம் முருகன் பாதம்
அத்தியுரித் திடத்தரித்த அய்யர் பாதம்
மானனைய மாயிபாத மாலின் பாதம்
வயிரவர்கள் பாதமகா லெட்சுமி பாதம்

**முடிவு**

(காந்)தியென்ற பவுத்திரந்தான் காசுகின்ற
அஞ்சுந்தான் ....................
ஆசுகிலற ஆசனத்தின் கண்ட மாலை
அசானந்தான் இது மூன்றும் அறிந்தி டாயே! 648

பவுத்திர நிதானம் முற்றும்
தேவதை சகாயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 1789 போன்றது இதில், நாடி நிதானம், சன்னி பதிமூன்றன் குண நிதானம், தோஷம் ஏழுக்குங் குணம் வரலாறு, முதலான பல தலைப்புகள் உள்ளன. வாத நிதானம் 300-வது பாடலுடன் முடிகிறது. பித்தம் 40-க்கும் பேர், பித்த வரலாறு கூறப்பட்டுள்ளது. 350-வது பாடலுடன் முடிகிறது. சேட்டும நிதானம் முடிவடைகிறது. பின்னர் சிலேத்துமம் 21-க்கும் விபரம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1772 சுவடி எண்: 849-a

## அகத்தியர் அருளிச் செய்த 7 காண்டம்

ஏடுகள்: 192. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9–11 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 7000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**காலம்**

நாகை புத்தூர் வயித்தியன் அருணாசல பிள்ளை எழுதி முகிந்தது முற்றும். பொதிகை சாமி துணை என்று ஒவ்வொரு காண்ட முடிவிலும் உள்ளது.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 1454 — 1460/743 — a — g அகத்தியர் இந்திரஜாலம் 1200 முதற் காண்டம் முதற் 7 காண்டங்கள் போன்றது. இதன் விபரங்களை அங்கு காணலாம்.

வரிசை எண்: 1773 சுவடி எண்: 849-b

## அகத்தியர் சால நிகண்டு - 200

ஏடுகள்: 20. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**காலம்**

நாகை, புதூர் அருணாசலபிள்ளை சால நிகண்டு எழுதி முகிந்தது முற்றும்
குருவாழ்க குருவே துணை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 882/424-a, D 1075/485, D 1463/743-j போன்றது. தொடக்கப்பாடல் வேறுபட்டுளது.

வரிசை எண்: 1774 சுவடி எண்: 849-c

## கலைக்கியான சூத்திரம் - 64

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9. வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: $27\frac{1}{2} \times 3$ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பிறணமாய் சூட்டமூலங் குருவைப் போற்றி
புகழான சாலவித்தை அஷ்ட கற்மம்
கறணமாய் மைதிலகம் அடக்கஞ் சொல்ல
கருத்தான தியானமொடு தந்தி ரங்கள்

**முடிவு**

சேர்ந்தோறும் பொருள் முடிக்கும் போதி லப்பா
தேவியுட பூசை செய்வாய் போதக மாயி
மாந்திரியம் பல வகையும் செய்து கொண்டு
மானிலத்தி லென்னாளும் வாழ லாமே! 64

கலைக்கியான சூத்திரம் 64 முற்றிற்று.
நாகை புத்தூர் அருணாசலம்பிள்ளை எழுதி முகிந்தது.
முற்றும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், நேத்திர பாதம், தங்கபற்பம், குடத்தில் சால வித்தை, அக்கினிஸ்தம்பம், அண்டத்தைக் கையிலடக்கும் வித்தை மற்றும் பல தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1775 சுவடி எண்: 850-a

# அகத்தியர் அருளிச் செய்த வைத்தியம் - முதற் காண்டம் - 600

ஏடுகள்: 66. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 14-16 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 26 × 4½ செ.மீ. கி. எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியா யகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருந்த ஐங்கரனே காப்பு
சோதியா மறுமுகவன் பாதங் காப்பு
துரியவெளி தன்னில் நின்ற சுந்தரியே காப்பு
வாதியா மென்குருவின் பாதங் காப்பு
மகத்தான பெரியோர்கள் சரணம் காப்பு
பேதியா வயித்தியந்தா னறுநூ றாகப்
பேசுறேன் வாணிபதம் பேராங் காப்பே. 1

முடிவு

மாறிநின்று திருடாதே மதம்பே சாதே
மற்றநூல் பொய்யென்று வசனிக் காதே
யாறுமுகன் பதம்போற்றிக் கையில் நெல்லி
யருங்கனிபோல் சொன்ன இந்த யறுநூற் முற்றே. — 621

குருகிடாட்ச முண்டாக வேணும்.
தெட்சணாமூர்த்தி சுவாமிகள் துணையாக வேணும்.
நாகப்பட்டணத்தைச் சேர்ந்த புத்தூரிலிருக்கும் வாயித்தியன்
அருணாசலம் சுவடி அறுநூறு.
முற்றும்
சிவமயம்.

காலம்

இல்லை

குறிப்பு

இதில், வாதம், சூலை, விரணம் தீர சூதவல்லாதி, சீனவல்லாதி, குக்கில் சுத்தி, திசை அவத்தை அறிய, விந்து கட்ட பூரணவல்லாதி, சந்தண பலாட்சாதித்தைலம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1776 சுவடி எண்: 850-b

# தேரையர் வைத்தியம் - 1001

ஏடுகள்: 55. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 14-16 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 26 × 4½ செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தேரையர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஆதிசத்தி யருள்புதல்வர் சரண
மீதி லுத்த பிணியகலும்படி
வாதி யுத்தமர் சித்தர் பதம்பணிந்
தோதி வைத்ததோ ராயிரத் தொன்றுமே! —1

முடிவு

விரிவு பார்க்கிற கடல்போல விரிந்திடுந்
தெரிகி லிந்திரன்
சேடனுந் தேர்கிலான்
அரிய தாயிர மாய்ந்து மனிதற்கே
யுரிய தேரையர் ஆயிரத் தொன்றும்
முற்றிட்டு முற்றமே —1010

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D 1287 / 662 போன்றது (ஒரு சிலருக்காக) நாகப் பட்டணத்தைச் சேர்ந்த புத்தூரிலிருக்கும் பெரியனாயக பிள்ளை குமாரன் அருணாசல பிள்ளை தேரையர் 1000 எழுதி முகிந்தது முற்றும், என்றுளது.

---

வரிசை எண்: 1777 சுவடி எண்: 850-c

# பிரம்மமுனியார் அருளிச்செய்த - 700

ஏடுகள்: 83. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு 14-16 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 26 × 4½ செ.மீ. கி. எண்ணிக்கை: 6000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

திருவளரு மெஞ்ஞான சோதி பாதம்
செப்பரிய கிணேசனொடு கந்தன் காப்பு
அருவுருவா யாதியந்தம் வெளியுந் தாண்டி
அகன்று நின்ற சின்மயத்தில் பாதம் போற்றி

**முடிவு**

ஆமென்ற வகைவிபர மாகச் சொன்னேன்
அறியாத பசளைபள்க்கு மறிய வேண்டி
பாமென்ற யின்னூலைப் பாடி னேன்யான்
பத்திமுத்தி எழுநூத்திச் சிலுவான முற்றே. —710

குருவே துணை

**காலம்**

1847-ஆம் வருஷம் தமிழ் பிலவங்க வருஷம் சித்திரை மாதம் 27-ஆம் தேதி நாகப்பட்டணத்தைச் சார்ந்த புத்தூரிலிருக்கும் வயித்தியன் அருணாசல பிள்ளை பிறும்ம முனி 710 எழுதிமுகிந்த நாள்

தெட்சணாமூர்த்தி துணையுண்டாக வேணும்

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1349 / 890 - b போன்றது

---

வரிசை எண்: 1778 சுவடி எண்: 850-d

# நட்சத்திரமாலை - சுரகண்டிகை

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 12-14 வரிகள். பொருள்: மருத்துவம் . அளவு: 26 × 4½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

குதிரை தன்னை சேர்முதற்கால்
குறித்த ஒன்பது நாள் செல்லும்
முதிர விரண்டாம் பக்கத்தில்
முதலாய்ப் பத்தா நாளாகும்

**முடிவு**

பூபதி சேரனு கூல மடையும் கண்டீர்
புகல்சுரனூல் கண்டிகையைப் புகலக் கேண்மின்
தாபதி சேருமை கேட்க்க அரனே
சொன்ன சாத்திரத்தை உரைப்பவர்
கோள்தப்பா தென்றே! —20

சிவ ஓம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், இன்ன நட்சத்திரத்தில் சுரம் கண்டால் இன்னபலன் என்று கூறப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1779 சுவடி எண்: 850-e

# அகத்தியர் அருளிச்செய்த வைத்தியபூரணம் - 400

ஏடுகள்: 43. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 14-16 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 26 × 4½ செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தை போற்றி
புகழ்பெரிய வைத்தியபூ ரணத்தை யானுங்
காரணமாய்க் கருவுருவாய் யெவர்க்குந் தானாய்
கண்மணியி னடுவான கருணை தன்னை

முடிவு

பத்தான பதிகளிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தி யாகும்
வித்தான பிறவிய .. .......ானஞ் சித்தி
வேதாந்த பூரணத்தின் (செய்யுள்) முற்றே! 499

குரு கடாட்ச முண்டாகவும்.

காலம்

இல்லை

குறிப்பு

இது. எமது சுவடி எண் D 738/ 375. – b போன்றது.
முன்பு சொல்லப்பட்ட நாகை ...... அருணாசலம் பிள்ளை அவர்கள் நெட்டெழுத்து.

வரிசை எண்: 1780 சுவடி எண் : 850-

## தேவமுனி ஆராதாரசரக்கு

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-14 வரிகள்: பொருள்: மருத்துவம். அளவு. 26 × 4½ செ.மீ கி. எண்ணிக்கை: 400. எழுத்து தமிழ். ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

அருமையடா ஆறாதாரச் சரக்கால்
அப்பனே அண்டபிண்ட மனைத்து மாச்சு
அருமையடா அதின்பெருமை என்ன சொல்வேன்
ஆடுமடா ஒகோகோ அஷ்ட்ட வேத

முடிவு

துயந்துவிட்ட தாய்க்காளிக் குண்ணல் செய்து
துயந்துவிட்ட ஊர்வளைந்து பொங்கல் செய்ய
செயமாகத் தேவியவள் அம்பாள் காப்பாள்
திக்கிலுள்ள தெய்வத்துத் திருநாள் செய்யே! 11

காலம்

இல்லை

குறிப்பு

அதில், விஷ பேதிக்கு, யுகபேதிக்கு, ஊழிப்பேதிக்கு முதலியன கூறப்பட்டுள்ளன இவை 10 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. பிறகு அகத்தியர் சத்தகாண்டத்தில் 11 பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

இதன் பின்னர், அகத்தியர் கடைக்காண்டம் 600 -ல் இஞ்சி லேகியம் முதலானதுகள் எழுதின உதிரி ஏடுகள் 17 உள்ளன.